ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ பத்மாவதி ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்
ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்



ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த

# ஸ்ரீவசனபூஷணம்

( இதற்கு ஸ்வாமி மணவாளமாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யான மூலம், எளிய தமிழ்நடை)

## இரண்டாம் ப்ரகரணம்
## (உபாயம்)
## (சூர்ணைகள் 23 – 79)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்
(Email: sridharan_book@yahoo.co.in)

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

23. ப்ரபத்திக்கு தேசநியமமும் காலநியமமும் ப்ரகாரநியமும் அதிகாரிநியமமும் பலநியமமுமில்லை.

**அவதாரிகை** – கீழுக்தமான உபாயத்தினுடைய ஸ்வீகாரரூபையாய் (ப்ரபத்த்யுபதேசம் பண்ணிற்றும்) என்று ப்ராஸங்கிகமாக ப்ரஸ்துதையான ப்ரபத்தியினுடையபடியை விஸ்தரேணவருளிச்செய்கிறது மேல். அதில் ப்ரதமத்தில், அர்ஜுநனுக்கு ப்ரபத்த்யுபதேசம் பண்ணுகிறவளவில் யுத்தபூமியிலே ஒருகால் விசேஷம் பாராமல் ஸ்நாநாதிகளுமின்றிக்கே யிருக்க உபதேசிப்பானென்? இதுக்கு தேசாதி நியமங்களில்லையோ என்கிற சங்கையிலேயருளிச் செய்கிறார் (ப்ரபத்திக்கென்று தொடங்கி).

**விளக்கம்** - உபாயமாக உள்ள ஸர்வேச்வரனை உபாயமாகப் பற்றிக் கொள்ளுதல் என்னும் பொருளை உணர்த்தும்விதமாக "ப்ரபத்தி உபதேசம்" என்று சுருக்கமாக அருளிச் செய்தார். இனி ப்ரபத்தியைப் பற்றியும், அதன் நிலைகள் பற்றியும் விரிவாக அருளிச் செய்கிறார். முதலில் அர்ஜுனனுக்கு உபதேசம் செய்யும்போது, அந்தப் போர்க்களத்தில் நேரம் காலம் பார்க்கவிலை, நீராடுதல் முதலான செயல்களைப் பார்க்கவில்லை, ஆயினும் உபதேசம் செய்தது ஏன்? அப்படியெனில், இந்த ப்ரபத்தி என்பதற்கு இன்ன தேசம், இன்ன காலம் போன்ற கட்டுப்பாடுகள் ஏதும் இல்லையா என்ற சந்தேகம் எழலாம். இதற்கான விடையை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – ப்ரபத்தியாவது பகவச்சரண வரணம். தேசநியமமாவது புண்ய தேசங்களிலே செய்யவேணும், அந்யதேசங்களிலாகாதென்னுமது. காலநியமமாவது வஸந்தாதி காலங்களிலே செய்யவேணும், அந்யகாலங்களிலாகாதென்னுமது. ப்ரகாரநியமமாவது ஸ்நாந பாதப்ரக்ஷாளநாதி பூர்வகமாகச் செய்யவேணும், ப்ரகாராந்தரத்தாலே செய்யவொண்ணாதென்னுமது. அதிகாரி நியமமாவது த்ரை வர்ணிகராக வேணும், அத்ரைவர்ணிகராக வொண்ணாதென்னுமது. பலநியமமாவது த்ருஷ்டாத்ருஷ்ட பலங்களிலின்ன பலத்துக்கிது ஸாதநம், அந்யபலத்துக்கு ஸாதநமன் றென்னுமது. தேசகால ஸாத்குண்ய வைகுண்யங்களடியாக வரும் அதிசயாநதிசயங்களை யுடைத்தாவ தொன்றல்லாமையாலும், தீர்த்தத்திலே யவகா ஹிக்குமளவில் சுத்தாசுத்த விபாகமற அவகாஹிக்கலா யிருக்குமாப்போலே ஸ்வயமேவ பவித்ரமாய சுத்தா சுத்த

விபாகமற தன்னோடந்வயிக்கலாம்படி யிருக்கையாலும் வர்ணாத்யநுரூபமாயிருப்ப தொன்றன்றிக்கே ஸ்வரூபாநுரூபமாயிருப்பதொன்றா கையாலும், சேதநருடைய ருச்யநு குணமான பல விசேஷங்களுக்கு ஸாதநமாவதொன்றாலும், இந்நியமங்களொன்று மிதுக்கில்லையென்கிறது. ந ஜாதி பேதம் நகுலம் நலிங்கம் நகுணக்ரியா:, ந தேச காலௌ நாவஸ்தாம் யோகோ ஹ்யயமபேக்ஷதே; ப்ரஹ்ம க்ஷத்ர விசச் சூத்ரா: ஸ்த்ரியச்சாந்தர ஜாதய: ஸர்வ ஏவ ப்ரபத்யேரந் ஸர்வ தாதாரமச்யுதம் என்று ப்ராபத்திக்கு தேசகால ப்ரகாராதிகாரி நியமாபாவம் பாரத்வாஜ ஸம்ஹிதையிலும் ப்ரபத்தே: க்வசிதப்யேவம் பராபேக்ஷா ந வித்யதே, ஸாஹி ஸர்வத்ர ஸர்வேஷாம் ஸர்வகாம பலப்ரதா என்று பல நியமாபாவம் ஸநத்குமார ஸம்ஹிதையிலும் சொல்லப்பட்டதிறே.

**விளக்கம்** - ப்ரபத்தி என்பது எம்பெருமானையே உபாயம் என்று பற்றுதல் ஆகும். தேச நியமம் என்றால் இந்த ப்ரபத்தியைப் புண்ணியதேசங்களில் மட்டுமே செய்யவேண்டும், மற்ற இடங்களில் செய்யக்கூடாது என்பதாகும். காலநியமம் என்றால் இந்த ப்ரபத்தியை வஸந்த காலத்தில் மட்டுமே செய்யவேண்டும், மற்ற காலங்களில் செய்யக்கூடாது என்பதாகும். ப்ரகார நியமம் என்றால் ப்ரபத்தியை நீராடுதல், கால் கழுவுதல் போன்றவற்றைச் செய்த பின்னரே செய்யவேண்டும், அதற்கு முன்பாக செய்தல் கூடாது என்பதாகும். அதிகாரி நியமம் என்றால் முதல் மூன்று வர்ணத்தினராக மட்டுமே இருக்கவேண்டும், மற்ற வர்ணத்தினராக இருத்தல் கூடாது என்பதாகும். பல நியமம் என்றால் இவ்வுலகப் பலன் மற்றும் அவ்வுலகப் பலன்களில், இன்ன பலத்திற்கு இது சாதனமாக உள்ளது, மற்ற தாழ்ந்த பலன்களுக்கு இது சாதனம் அல்ல என்பதாகும். தேசங்களின் உயர்வு மற்றும் தாழ்வுகளின் அடிப்படையிலும், காலம் என்பதன் உயர்வு மற்றும் தாழ்வுகளின் அடிப்படையில் உண்டாகின்ற ஏற்றத்தாழ்வுகள் என்பவை ப்ரபத்திக்கு இல்லாத காரணத்தினால் தேசநியமம் மற்றும் காலநியமம் ஆகிய இரண்டும் ப்ரபத்திக்கு இல்லை. நீரில் நீராடுபவர்கள் தூய்மையானவர்கள், தூய்மை அற்றவர்கள் என்ற வேறுபாடு இன்றி நீராடுவது போன்று, ப்ரபத்தி என்பது இயல்பாகவே தூய்மையானது என்பதால், தூய்மையானவர் மற்றும் தூய்மை அற்றவர் என வேறுபாடு இன்றி அனைவரும் ஏற்கலாம்படியாக உள்ளதால், ப்ரகார நியமமும் ப்ரபத்திக்கு இல்லை. வர்ணம் போன்ற பிரிவுகளுக்கு உட்பட்டு இல்லாத காரணத்தினால், ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு ஏற்றதாக உள்ளதால், இன்னவர்கள் மட்டுமே ஏற்கலாம் என்ற அதிகாரி நியமம் ப்ரபத்திக்கு இல்லை. இந்தக் கருத்தைக் கீழே உள்ள பரத்வாஜ ஸம்ஹிதையில் காணலாம் - ந ஜாதி பேதம் நகுலம் நலிங்கம் நகுணக்ரியா:, ந தேச காலௌ நாவஸ்தாம் யோகோ ஹ்யயமபேக்ஷதே; ப்ரஹ்ம க்ஷத்ர விசச் சூத்ரா: ஸ்த்ரியச்சாந்தர ஜாதய: ஸர்வ

ஏவ ப்ரபத்யேரந் ஸர்வ தாதாரமச்யுதம் – ப்ரபத்தி என்னும் இந்த உபாயம் எப்படிப்பட்டது என்றால் இந்த உபாயம் உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்கள் என்ற ஜாதி வேறுபாடுகளை ஏற்பதில்லை, குலங்களின் அடிப்படையில் உள்ள வேறுபாடுகளை ஏற்பதில்லை, ஆண் பெண் என்னும் வேறுபாடுகளை ஏற்பதில்லை, குணங்களுக்கு ஏற்ப செயல்படும் வேறுபாடுகளை ஏற்பதில்லை, தேசம் மற்றும் காலம் என்னும் வேறுபாடுகளை ஏற்பதில்லை, வயது போன்ற வேறுபாடுகளை ஏற்பதில்லை, அந்தணர் க்ஷத்ரியர் வைசியர் மற்றும் பெண்கள் போன்ற அனைவருமே அனைத்தையும் படைத்த அச்சுதனை அடைவார்கள் – என்றது. இப்படியாக ப்ரபத்திக்கு தேசம், காலம், முறைகள், அதிகாரி போன்ற எந்தவிதமான கட்டுப்பாடுகளும் இல்லை என்பதை பரத்வாஜ ஸம்ஹிதை உரைத்தது. மேலும் இதற்கு பல நியமம் இல்லை என்பதை ஸநத்குமார ஸம்ஹிதை - ப்ரபத்தே: க்வசிதப்யேவம் பராபேக்ஷா ந வித்யதே, ஸாஹி ஸர்வத்ர ஸர்வேஷாம் ஸர்வகாம பலப்ரதா – கர்மங்கள் போன்றவை மற்றவற்றின் உதவியை நாடுவது போன்ற நிலை ப்ரபத்திக்கு இல்லை; மாறாக அனைவராலும் எங்கும் விரும்பப்பட்ட அனைத்து பலன்களையும் அது அளிக்கும் – என்றது.

24. விஷய நியமமேயுள்ளது.

**அவதாரிகை** - இவை இல்லையாகில் மற்றும் சில நியமங்கள்தான் இதுக்குண்டோ வென்ன, அருளிச் செய்கிறார் (விஷய நியமமேயுள்ளதென்று).

**விளக்கம்** - இப்படியாக ப்ரபத்திக்குக் காலம், தேசம் போன்ற விதிமுறைகள்ஏதும் இல்லை என்றால், வேறு ஏதாவது விதிமுறைகள் ப்ரபத்திக்கு உண்டோ என்ற கேள்வி எழலாம். இதற்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, இன்ன விஷயத்திலே செய்யவேணும் என்கிற நியமமே யிதுக்குள்ளதென்றபடி. இவையெல்லாம் தாமே மேலே உபபாதித்தருளுகிறாரிறே.

**விளக்கம்** - இன்ன விஷயத்தில் மட்டுமே செய்யவேண்டும் என்னும் விதிமுறை மட்டுமே ப்ரபத்திக்கு உள்ளது என்கிறார். இவற்றைத் தானே பின்னர் (சூர்ணை 26 தொடங்கி) அருளிச்செய்ய உள்ளார்.

25. கர்மத்துக்கு புண்யக்ஷேத்ரம் வஸந்தாதிகாலம் சாஸ்த்ரோக்தங்களான தத்தத் ப்ரகாரங்கள் த்ரைவர்ணிகர் என்றிவையெல்லாம் வ்யவஸ்திதங்களாயிருக்கும்.

**அவதாரிகை** - இதுக்கிவையொன்றுமில்லையாகில் பின்னையெதுக்குத்தான் இவையெல்லாமுள்ளதென்ன, அருளிச்செய்கிறார் (கர்மத்துக்கென்று தொடங்கி).

**விளக்கம்** – இவை எதுவும் ப்ரபத்திக்கு இல்லை என்றால், வேறு எதற்குத்தான் இவை உண்டு என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - கர்மமாவது ஜ்யோதிஷ்டோமாதிகள். புண்ய க்ஷேத்ரங்களாவன சாஸ்த்ரங்களில் பாவநதயா அபிஹிதங்களான தேசங்கள். "வஸந்தாதி" என்கிறவிடத்தில் ஆதிசப்தத்தாலே க்ரீஷ்ம சரச்சுக்ல க்ருஷ்ணபக்ஷ பூர்வாஹ்நாபராஹ்நாதி காலங்களைச் சொல்லுகிறது; வஸந்தே வஸந்தே ஜ்யோதிஷா யஜேத இத்யாதிகளாலே கால நியமம் சொல்லப்படா நின்றதிறே. சாஸ்த்ரோத்தங்களான தத்வத் ப்ரகாரங்களாவன சௌசாமசமந ஸ்நாந வ்ரத ஜபாதிரூபேண அவ்வவ கர்மங்களுக்கு அநுகுணமாக சாஸ்த்ர விஹிதங்களான அவ்வவ ப்ரகாரங்கள். (த்ரைவர்ணிகர்) என்றது உபநயந ஸம்ஸ்கார பூர்வகமாக வேதாதிகாரிகளானவர்களுக்கே வைதிக கர்மாதிகரமுள்ளதாகையாலே; இதுதான் க்ருஹமேதித்வ க்ருஷ்ண கேசித்வ வேத வேதாங்கயுக்த த்வாதிகளுக்கு முபலக்ஷணம். (வ்யவஸ்திதங்களாயிருக்கும்) என்றது நியதங்களாயிருக் கும்மென்றபடி.

**விளக்கம்** - கர்மம் என்பது ஜ்யோதிஷ்டோமம் போன்றவை ஆகும். புண்ய க்ஷேத்ரங்கள் எனறால் சாஸ்த்ரங்களில் தூய்மையான இடங்கள் என்று கூறப்பட்ட க்ஷேத்ரங்கள் ஆகும். சூர்ணையில் உள்ள “வஸந்தாதி” என்பதில் காணப்படும் “ஆதி” என்னும் பதமானது முதுவேனிற்காலம், கார்காலம், க்ருஷ்ணபக்ஷம், சுக்லபக்ஷம், காலை நேரம், மாலை நேரம் என்பதான காலங்களைக் கூறுகிறது. வஸந்தே வஸந்தே ஜ்யோதிஷா யஜேத – ஒவ்வொரு வஸந்த காலத்திலும் ஜ்யோதிஷ்டோமம் செய்யவேண்டும் - என்பதன் மூலம் காலத்திற்கான விதிமுறை கூறப்பட்டதைக் காண்க. “சாஸ்த்ரோத்தங்களான தத்வத் ப்ரகாரங்கள்” என்பதன் மூலம் ஆசமனம் போன்றவற்றைச் செய்தல், நீராடுதல், விரதம் மேற்கொள்ளுதல், ஜபம் இயற்றுதல் உள்ளிட்ட பலவற்றுடன் கூடியதான அந்தந்த கர்மங்களுக்குத் தேவையான அநுஷ்டானங்கள் என்று சாஸ்த்ரங்களில் கூறப்பட்டவை உணர்த்தப்பட்டது. “த்ரைவர்ணிகர்” என்பதன் மூலம் உபநயனம் முதலானவை உடைய வேத அதிகாரிகளுக்கு மட்டுமே வைதிக கர்மங்கள் இயற்றுவதற்கு அதிகாரம் உள்ளது என உணர்த்தப்பட்டது. இந்த அதிகாரியின் லக்ஷணங்கள் எவை என்றால் இல்லறத்தில் உள்ளவர்களாக இருத்தல், கருமையான முடியுடன் கூடியவர்களாக இருத்தல், வேத வேதாந்தங்கள் அறிந்தவர்களாக இருத்தல் போன்ற பலவாகும். “வ்யவஸ்தி” என்பதன் மூலம் நியதங்களாக இருக்கும் என்பது கூறப்பட்டது.

26. ”ஸ ஏஷ தேச: கால:” என்கையாலே இதுக்கு தேசகால நியமமில்லை.

**அவதாரிகை** - ப்ரபக்திக்கிவையொன்றுமில்லை என்று கீழ்ப்பண்ணின ப்ரதிஜ்ஞையை உபபாதிக்கையிலே ப்ரவ்ருத்தராய், ப்ரதமம் தேசகால நியம ராஹித்யத்தை யுபபாதிக்கிறார் ஸ ஏஷ: என்று தொடங்கி.

**விளக்கம்** - ப்ரபத்திக்கு இவை ஏதும் இல்லை என்று மேலே அருளிச்செய்தார். அதனை மேலும் விளக்க எண்ணியவராக முதலில் தேசம், காலம் போன்ற விதிமுறைகள் இல்லை என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - பத்த வைராச்ச பாபாச்ச ராக்ஷஸேந்த்ராத் விபீஷண:, அதேசகாலே ஸம்ப்ராப்தஸ் ஸர்வதா சங்க்யதா மயம் என்று முன்பு ஸ்ரீஜாம்பவான் மஹாராஜர் பெருமாளுக்கு விண்ணப்பஞ் செய்த பக்ஷத்தை தூஷிக்கிற திருவடி, அதேச காலே ஸம்ப்ராப்த இத்யயம் ஸவிபீஷண:, விவக்ஷாசாத்ர மேஸ்தீயம் தாந்நிபோத யதாமதி; ஸ ஏஷ கால தேச: காலச்ச பவதீஹ யதா ததா, புருஷாத் புருஷம் ப்ராப்ய ததா தோஷ குணாவபி; தௌராத்ம்யம் ராவணே த்ருஷ்ட்வா விக்ரமஞ்ச ததா த்வயி யுக்தமாகமநம் தஸ்ய ஸத்ருசம் தஸ்ய புத்தித: என்று ராவணனாலே அவமாநிதனாய் ஸ்வநிகர்ஷத்தை முன்னிட்டுக் கொண்டு சரணம் என்று வந்த ஸ்ரீவிபீஷணாழ்வான், அதேசத்திலே அகாலத்திலே வந்தானென்று தேவரீருடைய மந்த்ரிகளாலே யாதொன்று சொல்லப்பட்டது. இந்த பக்ஷத்தில் விசேஷித்து எனக்கிந்த விவக்ஷையுண்டாகா நின்றது. அவன் வருகிறவளவில் யாதொரு தேசத்திலே யாதொரு காலத்திலே வந்தான், அவன் வரவுக்கு அந்த இதுவே தேசமும் அந்த இதுவே காலமுமாம் யாதொருபடி, அப்படிப்பட்ட விவக்ஷையை நானறிந்தவளவு விண்ணப்பஞ் செய்யக் கேட்டருள வேணும். எங்ஙனே யென்னில், தம: ப்ரக்ருதியாகையாலே பரஹிம்ஸையே யாத்ரையான ராவணனிற் காட்டில் ஸத்வோத்தரராகையாலே பரரக்ஷணம் யாத்ரையாயிருக்கிற தேவரீரை ப்ராப்யராக புத்திப் பண்ணி, அப்படியேயவனை விட்டுப் போராதொழிந்தால் அவனுடைய அக்ருத்யத்துக்கு ஸஹகாரியாய் அந்த ப்ராதிகூல்யத்தோடே முடிந்து போகையாகிற தோஷத்தையும், தார்மிகரான தேவரீருடனே கூடப்பெற்றால் தத் பலமாக தேவரீர் திருவடிகளில் கைங்கர்யத்தை லபித்து வாழுகையாகிற நன்மையையும் புத்தி பண்ணி, அப்படியே தேவரீர் திருவுள்ளத்திலே புண்படும்படி குற்றத்தைத் தீரக் கழியச் செய்து நிற்கிற ராவணன் தௌராத்ம்யத்தையும், துராத்மாக்களை அநாயாஸேந அழிக்கவல்ல தேவராண்பிள்ளைத்தனத்தையுங் கண்டால், விசேஷஜ்ஞனானவனுக்கு இவ்வரவு ப்ராப்தம், ந்யாயத்திலே ஸஞ்சரிக்குமவனுடைய புத்திக்குமிது ஸத்ருசம்

என்றானிறே. ஆக இப்படி பாவசுத்தியையுடையனான ஸ்ரீவிபீஷணாழ்வான் சரணம் என்று வந்து தேசகாலங்களில் குறைப்பார்க்கக் கடவதல்ல, அவன் வந்ததுவே தேசமும் காலமும் என்று சரணாகதி தர்மஜ்ஞனான திருவடி நிர்ணயிக்கையாலே ப்ரபத்திக்கு தேசகால நியமமில்லையென்கை.

**விளக்கம்** - இராமாயணம் யுத்தகாண்டம் (17-57) – பத்த வைராச்ச பாபாச்ச ராக்ஷஸேந்த்ராத் விபீஷண:, அதேசகாலே ஸம்ப்ராப்தஸ் ஸர்வதா சங்க்யதா மயம் – மிகுந்த பாவங்கள் செய்தவனும், நம்மிடம் பகைகொண்டவனும் ஆகிய இராவணனிடமிருந்து தகாத இடத்திலும், தகாத நேரத்திலும் விபீஷணன் வந்துள்ளான்; ஆகவே இவன் சந்தேகப்படக் கூடியவனாகவே உள்ளான் – என்று ஜாம்பவானும், சுக்ரீவனும் இராமனிடம் கூறினர். இதனை ஏற்க மறுத்த அனுமன் இராமாயணத்தில் (யுத்தகாண்டம் : 17-46) - அதேச காலே ஸம்ப்ராப்த இத்யயம் ஸவிபீஷண:, விவக்ஷாசாத்ர மேஸ்தீயம் தாந்நிபோத யதாமதி; ஸ ஏஷ கால தேச: காலச்ச பவதீஹ யதா ததா, புருஷாத் புருஷம் ப்ராப்ய ததா தோஷ குணாவபி; தௌராத்ம்யம் ராவணே த்ருஷ்ட்வா விக்ரமஞ்ச ததா த்வயி யுக்தமாகமநம் தஸ்ய ஸத்ருசம் தஸ்ய புத்தித: – இந்த விபீஷணன் தகாத இடத்தில், தகாத காலத்தில் இங்கு வந்துள்ளான் என்பதைக் குறித்து நான் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்; எனது விருப்பத்தை நீ (இராமன்) அறிய வேண்டுகிறேன்; புருஷர்களில் தாழ்ந்தவனாகிய இராவணனைக் காட்டிலும் புருஷர்களில் உயர்ந்தவனாக உள்ள நீயே அடையத்தக்கவன் என்று விபீஷணன் அறிந்தான்; இராவணனிடம் இருந்தால் உண்டாகும் தோஷத்தையும், உன்னிடம் அடைக்கலம் அடைந்தால் ஏற்படும் மேன்மையையும் உணர்ந்தான்; இராவணனிடம் இருந்த தீமைகளையும், உன்னிடம் உள்ள ஆண்மையையும் பார்த்து வந்தான்; ஆகவே அவன் இங்கு வந்தது பொருத்தமானது, அவனுக்கு ஏற்றது - என்று கூறினான். அதாவது இராவணனால் துச்சமாக நடத்தப்பட்டவனாக, தனது தாழ்வு என்பதை முன்னிறுத்தியபடி அடைக்கலம் என்று விபீஷணன் வந்தான். இப்படி வந்தபோது இவன் தகாத இடத்தில், தகாத காலத்தில் வந்தான் என்று உன்னுடைய மந்த்ரிகளால் உரைக்கப்பட்டது. இந்தக் கருத்தில் எனக்கு விசேஷமான கருத்து சொல்வதற்கு விருப்பம் உண்டு. அவன் எந்த இடத்தில் வந்தான்; எந்த நேரத்தில் வந்தான் என்பதைக் குறித்து அவன் வருவதற்கு இதுவே சரியான இடம் என்றும், அவன் வருவதற்கு இதுவே சரியான காலம் என்றும் நான் உணர்ந்ததைக் கூற எனக்கு விருப்பம் உள்ளது (அதாவது விபீஷணன் வந்த

இடமும், காலமும் எதுவாக இருந்தாலும் அதுவே சரியான இடமும், காலமும் ஆகும் என்று கருத்து). இதனை நான் அறிந்த அளவிற்குக் கூற, நீ (இராமன்) கேட்கவேண்டும்.

தமோ குணம் மிகுதியாக உள்ளதால் மற்றவர்களைத் துன்பத்தில் ஆழ்த்துவது என்பதையே தனது செயலாக உடைய இராவணனைக் காட்டிலும், ஸத்வ குணம் மிக்கவனாக நீ உள்ளதால் அனைவரையும் காப்பாற்றும் தன்மை கொண்ட உன்னை அடைவதே தகும் என்று விபீஷணன் உணர்ந்தான். இவ்விதம் செய்யாமல் அவன் இராவணனுடனேயே இருந்திருந்தால், அவனுடைய தீமைகளுக்குத் துணை போனவனாக, உன்னுடன் பகைமையுடன் மடிந்து போகக் கூடியவனாக இருக்கின்ற குற்றம் விபீஷணனுக்கு வந்திருக்கும். இந்தக் குற்றத்தையும், தர்மத்தை மட்டுமே செய்கின்ற உன்னுடன் இருந்தால் அதன் பலனாகிய உனது திருவடிகளின் கீழ் கைங்கர்யம் செய்தல் என்ற நன்மையையும் அவன் ஆராய்ந்தான். மேலும் உன்னுடைய மென்மையான திருவுள்ளத்தைப் புண்படுத்தும்படியாக பெருங்குற்றம் முழுவதுமாகச் செய்தபடி உள்ள இராவணனின் தீமை என்பதையும், தீயோர்களை அழிப்பதில் சற்றும் தயக்கம் காட்டாத உனது ஆண்மைத் தன்மை என்பதையும் நோக்கும்போது விபீஷணன் இங்கு வந்தது சரியானது ஆகும். இத்தகைய செயலானது நியாயத்தின் வழிநிற்பவர்களின் அறிவிற்கும் ஏற்றதாகவே இருக்கும் – இப்படியாகவே அனுமனின் கருத்து உள்ளது.

ஆகவே தூய்மையான மனத்துடன் உள்ள விபீஷணன் சரணம் என வந்து நின்ற இடம் மற்றும் காலம் ஆகிய இரண்டிலும் குறை ஏதும் காண்பதற்கு இல்லை. அவன் வந்து சேர்ந்த இடமே சரணாகதிக்குச் சரியான இடம் என்றும், வந்த நேரமே சரியான நேரம் என்றும் சரணாகதியைப் பற்றி நன்கு அறிந்தவனாகிய அனுமன் முடிவு செய்ததால், ப்ரபத்திக்குக் காலம் மற்றும் இடம் என்பது போன்ற கட்டுப்பாடுகள் ஏதும் இல்லை என்றாகிறது.

## 27. இவ்வர்த்தம் மந்த்ரரத்நத்தில் ப்ரதமபதத்திலே ஸுஸ்பஷ்டம்.

**அவதாரிகை** - இதுதான் ப்ரபத்த்யநுஷ்டாந ரூபமான த்வயத்தில் ப்ரதமபதத்திலே காணலாமென்கிறார் (இவ்வர்த்தமென்று தொடங்கி).

**விளக்கம்** - மேலே கூறியதன் பொருளை ப்ரபத்தியின் அனுஷ்டானமாக உள்ள த்வய மந்த்ரத்தின் முதல் பதத்தில் காணமுடியும் என்று அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - ஸகலோபநிஷத்ஸாரமாய் ஸர்வாதிகாரமாய் அவிளம்ப்ய பலப்ரதமாய் ஸர்வேச்வரனுக்கு அத்யந்தாபிமதமாயிருக்கையாலே ஸர்வமந்த்ராந்தர உத்க்ருஷ்ட தயா த்வயேந மந்த்ர ரத்நேந என்கிறபடியே, மந்த்ர ரத்நாக்க்யமாயிறே த்வயமிருப்பது; அந்த வைபவந் தோற்றுகைக்காக, த்வயமென்னாதே மந்த்ரரத்நம் என்கிறார்; அதில் ப்ரதம பதத்தில் மதுபர்த்தமான புருஷகாரோபாய நித்யயோகத்துக்கு ப்ரயோஜநம் – ஏதேனுமொரு தேசத்திலே ஏதேனுமொரு காலத்திலேயொரு ஸம்ஸாரி சேதநனுக்கு பகவத் ஸமாச்ரயண ருசி விளைந்தால், சஞ்சலம் ஹி மந:, நின்றவா நில்லா நெஞ்சு என்கிறபடியே சூறாவளிக் காற்றுப்போலே சுழன்று வருகிற நெஞ்சு தளமாக அங்குரித்து க்ஷணபங்குரையான ருசி தீருவதுக்கு முன்னே, ததுத்பத்திக்ஷணத்திலே யாச்ரயிக்கலா யிருக்கையிறே; ஆகையாலே ப்ரபத்தியினுடைய தேசகால நியமராஹித்யம் அந்த பதத்திலே நன்றாகத் தோற்றுமென்கிறார்.

**விளக்கம்** – த்வயம் என்பது, அனைத்து உபநிஷத்துக்களின் சாரமாக உள்ளது, அனைவருக்கும் ஏற்கலாம்படி உள்ளது, மிகவும் விரைவாய் பலன் அளிக்கவல்லது, ஸர்வேச்வரனுக்கு மகிழ்ச்சி அளிக்கவல்லதாக உள்ளதால் அனைத்து மந்த்ரங்களிலும் மிகவும் உயர்ந்தது, த்வயேந மந்த்ர ரத்தேந – மந்த்ர ரத்னம் த்வயமே – என்று கூறுவதற்கு ஏற்ப இரத்தினம் போன்றது ஆகும். இத்தகைய சிறப்புகள் வெளிப்படும்படியாகவே இந்தச் சூர்ணையில் த்வயம் என்று கூறாமல் "மந்த்ரரத்னம்" என்றார். இந்த மந்த்ரத்தின் முதல் பதமாக உள்ள ஸ்ரீமந் என்பதில் காணப்படும் "மதுப்" என்பதன் பொருள் என்னவென்றால், புருஷகாரமாக உள்ள பிராட்டியும் உபாயமாக உள்ள ஸர்வேச்வரனும் எப்போதும் நித்யயோகம் என்னும்படி என்றும் சேர்ந்து இருத்தல் என்பதாகும். இவ்விதம் உள்ளதன் பயன் என்ன? ஏதேனும் ஓர் இடத்தில், ஏதேனும் ஒரு காலத்தில், ஏதேனும் ஒரு ஸம்ஸாரிக்கு எம்பெருமானை அடையவேண்டும் என்ற ருசி ஏற்படலாம். கீதை - சஞ்சலம் ஹி மந: - மனம் சலனம் நிறைந்தது, பெரியதிருமொழி (1-1-4) – நின்றவா நில்லா நெஞ்சு – என்று கூறுவதற்கு ஏற்ப, நெஞ்சத்தில் தோன்றியவுடன் அழிவதாக அந்த ருசி உள்ளது. இந்த ருசியானது உடனேயே மறைவதற்கு முன்பாக, அந்த ருசி தோன்றியவுடனேயே எம்பெருமானைப் பற்றுவதற்கு, இந்த நித்யயோகச்சேர்த்தி பயன்படுவதாக உள்ளது. ஆகவே ப்ரபத்திக்கு இடம், காலம் போன்ற வரையறை இல்லை என்பதை த்வயத்தில் உள்ள அந்தப் பதம் உணர்த்துகிறது என்கிறார்.

28. ப்ரகார நியதியில்லையென்னுமிடம் எங்கும் காணலாம்.

**அவதாரிகை** – ப்ராகார நியமராஹித்யத்தை தர்சிப்பிக்கிறார்மேல் (ப்ரகாரநியதி) என்று தொடங்கி.

**விளக்கம்** – இன்ன முறையைப் பின்பற்றிய பின்னரே ப்ரபத்தி செய்யவேண்டும் என்ற ப்ரகார நியமம் இல்லை என்பதை உணர்த்துகிறார்.

**வ்யாக்யானம்** – "எங்கும் காணலாம்" என்றது, இத்தையநுஷ்டிப்பார் ச்ரவிப்பார் எல்லார் பக்கலிலுங் காணலாமென்றபடி.

**விளக்கம்** – "எங்கும் காணலாம்" என்பதன் மூலம் ப்ரபத்தியைக் கைக்கொள்கிறவர்கள், கேட்கின்றவர்கள் போன்ற அனைவரிடத்திலும் காணலாம் என்றார்.

29. த்ரௌபதி ஸ்நாதையாயன்றே ப்ரபத்தி பண்ணிற்று; அர்ஜுனன் நீசர் நடுவேயிறே இவ்வர்த்தங்கேட்டது.

**அவதாரிகை** – அதெங்கே கண்டதென்ன; பூர்வ ப்ரக்ருத விஷயங்களிலே தர்சிப்பிக்கிறார்.

**விளக்கம்** - மேலே உள்ள சூர்ணையில் "காணலாம்" என்பதை மேலும் விவரிக்கும் விதமாக, எங்கு காணலாம் என்பதை முன்னே கூறிய நிகழ்வுகள் மூலம் விளக்குகிறார்.

**வ்யாக்யானம்** – "த்ரௌபதி" இத்யாதி வாக்ய த்வயத்தாலே. "ஸ்நாதையாயன்றே ப்ரபத்தி பண்ணிற்று" என்றது துச்சாஸநாக்ருஷ்டையாய் ஸபையில் வருகிறபோது, ரஜஸ் வலைக வஸ்த்ராஹம் நது மாம் நேது மர்ஹஸி குரூணாஞ்ச புரஸ்ஸ்தாதும் ஸபாயாம் நாஹ முத்ஸஹே என்னும்படி அசுத்தையாயிருக்கிறவள் ஸ்நாநம் பண்ணியன்றே ப்ரபத்தி பண்ணிற்றென்றபடி; இத்தால், ப்ரபத்தி பண்ணுவார் ப்ரயதராய்ப் பண்ண வேணுமென்னும் நியதியில்லாமை காட்டப்பட்டது. "நீசர் நடுவேயிறேயிவ் வர்த்தங் கேட்டது" என்றவிடத்தில், நீசரென்கிறது நெடுந்தகையை நினையாதார் நீசர் என்றாழ்வாரருளிச் செய்த சௌரிநிந்தா விமுகரான ஹேயரை. விஷ்ணு பக்தி விஹிநஸ்து யதிச்ச ச்வபசாதம:, விப்ராத் த்விஷட்குணயுதா தரவிந்தநாப பாதாரவிந்த விமுகாச் ச்வபசம் வரிஷ்டம் என்று பகவத் விமுகரை ச்வபசாதமராகச் சொல்லிற்றிறே; அதுக்கு மேல், சரணாகதையைப் பரிபவித்தும் சரணாகதரான பாண்டவர்கள் திறத்திலே

தீங்குகளைச் செய்தும் போருகையாலே, ஸத்யச் சண்டாளதாம் வ்ரஜேத் என்கிற கர்மசண்டாளரிறே கை கலந்து நிற்கிறது. "நீசர்நடுவே" என்கையாலே நீசஸ்ப்ருஷ்டியா லிவனுக்குண்டான அசுத்தியும் நீசஸகாசத்திலே என்னுமிடமும் தோற்றுகிறது. இத்தால் – ப்ரபத்தி ச்ரவணம் பண்ணும்போது நீசமத்யத்திலாகாதென்னும் நியதியில்லாமை காட்டப்பட்டது.

**விளக்கம்** – இந்த இரண்டு வாக்கியங்கள் மூலம் கூறப்பட்டது என்ன? "ஸ்நாதையாயன்றே ப்ரபத்தி பண்ணிற்று" என்பதன் மூலம் எதனை உணர்த்துகிறார்? துச்சாதனனால் இழுத்துக் கொண்டு சபைக்கு வரவழைக்கப்பட்டபோது மஹாபாரதம் – ரஜஸ் வலைக வஸ்த்ராஹம் நது மாம் நேது மர்ஹஸி குரூணாஞ்ச புரஸ்ஸ்தாதும் ஸபாயாம் நாஹ முத்ஸஹே – நான் இப்போது மாதவிலக்கு ஏற்பட்டவளாகவும், ஓர் ஆடையை மட்டுமே உடுத்தியவளாகவும் இருக்கிறேன்; ஆகவே என்னைச் சபைக்கு அழைத்துச் செல்வது சரியல்ல; ஆசார்யர்கள் முன்பாகவும், சபையினர் முன்பாகவும் இந்தச் சூழ்நிலையில் நான் நிற்பதற்கு உடன்படவில்லை - என்றாள். ஆகவே அப்போது அவள் அசுத்தத்துடன் கூடியவளாகவே இருந்தாள். ஆக அவள் க்ருஷ்ணனிடம் ப்ரபத்தியைச் செய்தபோது நீராடிய பின்னர் செய்யவில்லை அல்லவோ? இதன் மூலம் ப்ரபத்தியைக் கைக்கொள்பவர்கள் தூயவர்களாக நின்று செய்யவேண்டும் என்ற நியமம் இல்லை என்பது உணர்த்தப்பட்டது.

"நீசர் நடுவேயிறேயிவ் வர்த்தங் கேட்டது" என்பதன் மூலம் எதனை உணர்த்தினார்? இங்கு நீசர் என்ற பதம் பெரியதிருமொழியில் (11-6-8) – நெடுந்தகையை நினையாதார் நீசர் – என்று திருமங்கையாழ்வார் அருளிச் செய்தபடி, எம்பெருமானிடம் பக்தி இல்லாத தாழ்ந்தவர்களைக் குறிக்கும். விஷ்ணு பக்தி விஹிநஸ்து யதிச்ச ச்வபசாதம: – விஷ்ணுவிடம் பக்தி இல்லாத ஸந்யாஸி, அவனிடம் பக்தி உள்ள நீசனை விடத் தாழ்ந்தவன் – என்றும், ஸ்ரீமத்பாகவதம் – விப்ராத் த்விஷட்குணயுதா தரவிந்தநாப பாதாரவிந்த விமுகாச் ச்வபசம் வரிஷ்டம் – பன்னிரண்டு குணங்களுடன் கூடியவனும் திருநாபியில் தாமரை மலரை உடையவனும் ஆகிய எம்பெருமானின் திருவடிகளில் பக்தி இல்லாத அந்தணனை விட விஷ்ணுவின் அடியவனாக உள்ள சண்டாளன் உயர்ந்தவன் – என்றும் கூறப்பட்டது காண்க. இதன் மூலம் எம்பெருமானிடம் பக்தி அற்றவர்களைத் தாழ்ந்தவர்களைவிடத் தாழ்ந்தவர்கள் என்று கூறியது காண்க. இதற்கு மேலாக சரணாகதி அடைந்தவளான திரௌபதியைத் துடிக்க வைத்தும், பாண்டவர்களுக்குப் பல

தீமைகளைச் செய்தும் நின்றதால், ப்ரம்மாண்ட புராணம் – ஸத்யச் சண்டாளதாம் வ்ரஜேத் - எனது அடியார்களைத் தூற்றும் அந்தணன் சண்டாளன் ஆவான் – என்றபடி, சண்டாளர்களாக நின்ற கௌரவர்களுடன் சரிசமமாக அல்லவோ அர்ஜுனன் நின்றான்? “நீசர் நடுவே” என்பதன் மூலம் இவர்களுக்கு நடுவில் நின்றதால் இவனுக்கு உண்டான தூய்மை இன்மை என்பது வெளிப்படுகிறது. ஆக இதன் மூலம், ப்ரபத்தியைக் கேட்கும்போது நீசர்கள் நடுவில் நின்றால் ப்ரபத்தி கைகூடாது போன்ற நியமம் இல்லை என்பது உணர்த்தப்பட்டது.

30. ஆகையால் சுத்தயசுத்திகளிரண்டும் தேடவேண்டா; இருந்தபடியே அதிகாரியா மித்தனை.

**அவதாரிகை** - இத்தால் பலித்ததைச் சொல்லா நின்று கொண்டு இவ்வர்த்தத்தை நிகமிக்கிறார் ”ஆகையால்” என்று தொடங்கி.

**விளக்கம்** - மேலே கூறப்பட்டவற்றால் வெளிப்படும் பொருளை உணர்த்தும்படியாக இங்கு முடிக்கிறார்.

**வ்யாக்யானம்** – ”ஆகையால்” என்றது, அநுஷ்டாந தசையிலும் ச்ரவண தசையிலும் இவர் களிருவருமிப்படி செய்கையாலென்றபடி. ”சுத்த்யசுத்திகளிரண்டுந் தேடவேண்டா” வென்றது - ப்ரபத்தியிலந்வயிக்குமளவில் அசுத்தனாயிருக்குமவனுக்கு சுத்தி ஸம்பாதிக்க வேண்டா, சுத்தனாயிருக்கு மவனுக்கு அசுத்தி ஸம்பாதிக்க வேண்டாவென்றபடி. அசுத்தி தேட வேண்டாவென்றது – கீழ்ச்சொன்னவர்களிருவரும் அசுத்தரான தசையில் ப்ரபத்தியிலந்வயித்தமை சொல்லுகையாலே அசுத்திதானிதுக்கு வேணுமோவென்று சங்கியாமைக்காக. ”இருந்தபடியே யதிகாரி யாமித்தனை” என்றது, ப்ரபதந காலத்தில் அசுத்தனாயாதல் சுத்தனாயாதல் யாதொருபடியிருந்தான், இருந்ததொரு ப்ரகாரத்திலே யிதுக்கதிகாரி யாமித்தனை யென்றபடி. த்ரௌபதியும் அர்ஜுநனும் ப்ரபத்த்யநுஷ்ட்டாந தச்ச்ரவண தசைகளில் ததங்கமாக சுத்தி ஸம்பாதியாதவோபாதி அசுத்தியும் ஸம்பாதித்துக் கொண்டமையில்லையிறே, இருந்தபடியே யதிகாரிகளான வித்தனையிறே.

**விளக்கம்** - “ஆகையால்” என்பதன் மூலம் சரணாகதியைக் கைக்கொள்ளும் நிலை (திரௌபதி), சரணாகதியைக் கேட்டும் நிலை (அர்ஜுனன்) ஆகிய இரண்டிலும் இவர்கள் இவ்விதம் இருந்த நிலை என்பதை உணர்த்துகிறார். “சுத்த்யசுத்திகளிரண்டுந்

தேடவேண்டா” என்பதன் மூலம் ப்ரபத்தியைச் செய்யத் தொடங்குவதற்கு முன்பாக ஒருவன் தூய்மையுடன் இல்லை என்றாலும், அந்தத் தூய்மையை அவன் தேட முயற்சிக்க அவசியம் இல்லை என்பதும், தூய்மையாக உள்ள ஒருவன் தூய்மையற்ற நிலையைத் தேடுதல் கூடாது என்பதும் உணர்த்தப்பட்டது. “அசுத்தி தேட வேண்டா” என்பதன் முலம் உணர்த்தப்படுவது என்னவென்றால் – மேலே கூறப்பட்ட இருவரும் ப்ரபத்தியைக் கைக்கொண்டபோது தூய்மை இல்லாதவர்களாகவே இருந்த நிலை கூறப்பட்டது. ஆக ப்ரபத்தியைக் கைக்கொள்பவர்கள் இவர்கள் போன்று தூய்மையற்ற நிலையில்தான் இருத்தல் வேண்டுமோ என்ற சந்தேகம் ஏற்படலாம். இந்தச் சந்தேகம், இதன் மூலம் விலக்கப்படுகிறது. ”இருந்தபடியே யதிகாரி யாமித்தனை” என்பதன் மூலம் – ப்ரபத்தி செய்யும்போது தூய்மையின்றி இருத்தல், தூய்மையுடன் இருத்தல் என்பதன் ஏதேனும் ஒரு நிலையில் ஒருவன் இருக்கக்கூடும்; அந்த நிலையில் அவன் ப்ரபத்திக்குத் தகுதியானவனே என்பதை உணர்த்துகிறார். திரௌபதியுடன் அர்ஜுனனும் ப்ரபத்தியைச் செய்தபோதும், கேட்டபோதும் அந்த ப்ரபத்திக்கு அங்கமாக தூய்மையைத் தேடவில்லை. ஆயினும் அந்த நேரத்தில் அவர்கள் அசுத்தத்தையும் தேடவில்லை அல்லவோ? ஆக உள்ளது உள்ளபடியே இருந்த நிலையில் அவர்கள் தகுதி படைத்தவர்கள் ஆயினர்.

31. இவ்விடத்திலே வேல்வெட்டிப்பிள்ளைக்குப் பிள்ளை அருளிச்செய்த வார்த்தையை ஸ்மரிப்பது.

**அவதாரிகை** - இவ்வர்த்த விஷயமாக ஆப்தவசநத்தை ஸ்மரிப்பிக்கிறார் மேல் ”இவ்விடத்திலே” என்று தொடங்கி.

**விளக்கம்** – இங்கு உரைக்கப்பட்ட விஷயத்தினை நன்மையை விரும்பும் நம் முன்னோர்கள் கூறியதன் மூலமாக மேலும் விளக்குகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, வேல்வெட்டிப்பிள்ளை, ”பெருமாள் கடலை சரணம் புகுகிறவிடத்தில் ப்ராங்முகத்வாதி நியமோபேதராய் சரணம் புகுருகையாலே, இதரோபாயங்களோபாதி ப்ரபத்திக்கும் சில நியமங்கள் வேண்டியிருக்கிறதோ?” என்று நம்பிள்ளையைக் கேட்க; “பெருமாள் பக்கல் கண்ட நியமம் இவ்வுபாயத்துக்குடன் வந்தியா யிருப்பதொன்றன்று, பெருமாள் தமக்கு ஸமுத்ரம் ராகவோ ராஜா சரணம் கந்துமர்ஹதி என்றுபதேசித்தான் ஸ்ரீவிபீஷணாழ்வானிறே, அவன்றான் பெருமாளை சரணம் புகுகிறவிடத்தில் கடலிலேயொரு முழுக்கிட்டு வந்தானென்றில்லையே; இத்தால்

சொல்லிற்றாய்த்து - பெருமாள் இக்ஷ்வாகு வம்ச்யராய் ஆசார ப்ரதாநராயிருக்கையாலே தம்முடைய நியமங்களோடே சரணம் புக்கார், இவன் ராக்ஷஸஜாதீயனாகையாலே நின்ற நிலையிலே சரணம் புக்கான், ஆகையாலே யோக்யனுக்கு அயோக்யதை ஸம்பாதிக்க வேண்டா, அயோக்யனுக்கு யோக்யதை ஸம்பாதிக்க வேண்டா, நின்ற நின்ற நிலைகளிலே யதிகாரிகளா மித்தனை யென்னுமது" என்றருளிச் செய்த வார்த்தை.

**விளக்கம்** - நம்பிள்ளையின் சீடரான வேல்வேட்டிப்பிள்ளை நம்பிள்ளையிடம், "இராமன் ஸமுத்திர அரசனைச் சரணம் புகுந்தபோது கிழக்கு நோக்கி அமர்தல் உள்ளிட்ட முறைகளுடன் சரணம் புகுந்தார். ஆகவே பக்தி போன்ற உபாயங்களுக்கு உள்ளதைப் போன்று ப்ரபத்திக்கும் சில விதிமுறைகள் உள்ளனவோ?", என்று கேட்டார். இதற்கு நம்பிள்ளை பின்வருமாறு பதில் உரைத்தார். இராமனிடம் கண்ட இந்தச் செயலானது இந்த உபாயத்திற்கு அங்கமாக உள்ளதால் அல்ல , ப்ரபத்தியைச் செய்தவரின் இயல்பால் ஆகும். இராமாயணத்தில் (யுத்தகாண்டம்: 19-31) – ஸமுத்ரம் ராகவோ ராஜா சரணம் கந்துமர்ஹதி – அரசனாகிய இராகவன் கடலைச் சரணம் அடைய ஏற்றவரே – என்று விபீஷணன் உபதேசித்தான் அல்லவோ? ஆனால் அவன் இராமனைச் சரணம் அடைந்தபோது அந்தக் கடலில் ஒரு முழுக்கு போட்டு நீராடி வந்தான் என்று கூறப்படவில்லை அல்லவோ? இராமன் இக்ஷ்வாகு வம்சம் என்பதால், தனது குல மரபுகளின்படி அவற்றை முக்கியமாகக் கொள்பவர் என்பதால், தன்னுடைய முறைகளுக்கு ஏற்பச் சரணம் அடைந்தார். ஆனால் விபீஷணன் அரக்க வழியில் வந்தவன் என்பதால், தான் உள்ள நிலையில் அப்படியே சரணம் அடைந்தான். ஆகவே தகுதி உள்ளவனுக்குத் தகுதி இன்மையைத் தேடுதலும், தகுதி இல்லாதவனுக்குத் தகுதியைத் தேடுதலும் அவசியம் இல்லை. அவரவர்கள் உள்ள நிலையிலேயே ப்ரபத்திக்குத் தகுதியானவர்கள் ஆவர்.

32. அதிகார நியமமின்றிக்கே யொழிந்தபடி யென்னென்னில், தர்மபுத்ராதிகளும் த்ரௌபதியும் காகமும் காளியனும் ஸ்ரீகஜேந்த்ராழ்வானும் ஸ்ரீவிபீஷணாழ்வானும் பெருமாளும் இளையபெருமாளும் தொடக்கமானவர்கள் சரணம் புகுருகையாலே அதிகாரி நியமமில்லை.

**அவதாரிகை -** அநந்தரம் அதிகாரி நியமா பாவத்தையுப பாதிப்பதாக தஜ்ஜிஜ்ஞாஸு ப்ரச்நத்தை யநுவதிக்கிறார் "அதிகாரி நியமமின்றிக்கே யொழிந்தபடி யென்னென்னில்" என்று. அதுக்குத் தரமருளிச் செய்கிறார் "தர்மபுத்ராதிகளும்" என்று தொடங்கி.

**விளக்கம் –** அடுத்து அதிகாரி நியமம் இல்லை என்பதை விளக்க எண்ணினார். ஆகவே அந்த நியமம் குறித்து அறிவதில் ஆர்வம் உள்ளவர்கள் கேட்கும் கேள்வியை முதலில் அருளிச் செய்கிறார். அதாவது – ப்ரபத்திக்கு அதிகாரி நியமம் என்பது ஏன் இல்லை – என்பது கேள்வியாகும். இதற்கு விடை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம் -** அதாவது த்ரௌபத்யா ஸஹிதாஸ் ஸர்வே நமச் சக்ரூர் ஜநார்தநம் என்று க்ஷத்ரியரான தர்மபுத்ராதிகளும்; சங்க சக்ர கதாபாணே த்வாரகா நிலயாச்யுத, கோவிந்த புண்டரீகாக்ஷ ரக்ஷமாம் சரணாகதாம் என்று ஸ்த்ரீயான த்ரௌபதியும்; ஸ பித்ராச பரித்யக்தஸ் ஸுரைச்ச ஸமஹர்ஷிபி:, த்ரீந் லோகாந் ஸம்பரிக்ரம்ய தமேவ சரணங்கத: என்று தேவரூபத்தை மறைத்து வந்து மஹாபராதத்தைப் பண்ணின காகமும்; ஸோஹந்தே தேவ தேவேச நார்ச்சநாதௌ ஸ்துதௌ நச, ஸாமர்த்த்யவாந் க்ருபாமாத்ர மநோவ்ருத்தி: ப்ரஸீத மே என்று திர்யக்யோநிஜனாய் ப்ரதிகூலனுமான காளியனும்; பரமாபதமாபந்தோ மநஸாசிந்தயத்ஹரிம், ஸது நாகவரச் ஸ்ரீமாந் நாராயணபராயண: என்று திர்யக் ஜந்மாவாய் அநுகூலனுமாயிருக்கிற ஸ்ரீகஜேந்த்ராழ்வானும்; ஸோஹம் பருஷிதஸ் தேந தாஸவச்சாவமாநித:, த்யக்த்வா புத்ராம்ச்ச தாராம்ச்ச ராகவம் சரணம் கத: என்று ராக்ஷஸ ஜாதீயனான ஸ்ரீவிபீஷணாழ்வானும்; பாஹூம் புஜக போகாப முபதாயாரி ஸூதந:, அஞ்ஜலிம் ப்ராங்முக: க்ருத்வா ப்ரதிசிச்யே மஹோததே: என்று ஸர்வ சரண்யரான பெருமாளும்; ஸப்ராதுச் சரணௌகாடம் நிபீட்ய ரகுநந்தந:, ஸீதாமுவாசாதியசா ராகவஞ்ச மஹாவ்ரதம் என்று அக்கரையராய் தொடர்ந்தடிமை செய்ய வந்த இளையபெருமாளும், "தொடக்கமானவர்கள்" என்கையாலே – ஸோஹம் த்வாம் சரணமபார மப்ரமேயம் ஸம்ப்ராப்த: பரமபதம் யதோ ந கிஞ்சித் ஸம்ஸார ச்ரமபரிதாப தப்த சேதா நிர்வாணே பரிணததாம்நி ஸாபிலாஷ: என்று முசுகுந்தனும், மூடோய மல்பமதி ரல்ப விசேஷ்டிதோயம் க்லிஷ்டம் மநோஸ்ய விஷயைர் நமயிப்ரஸங்கி, இத்தம் க்ருபாங் குரு மயி ப்ரணதேகிலேச தவாம் ஸ்தோது மம்புஜ பவோபிஹி தேவ நேச: என்று க்ஷத்ரபந்துவும், பகவந்தம் ப்ரபந்நாஸா பகவந்தமவாப ஹ என்று மாதவியும், தம் ப்ரபிந்நசிரோக்ரீவம் ஆஸ்யேப்ய: ஸ்ருத சோணிதம் விலோக்ய சரணம் ஜக்முஸ் தத்பத்ந்யோ மதுஸூதநம் என்று காளியபத்நிகளும், ப்ரணாம ப்ரவணா நாத தைத்ய

ஸைந்ய பராஜிதா: சரணம் த்வா மநுப்ராப்தாஸ் ஸமஸ்தா தேவதா தேவதா கணா: என்று இந்த்ராதி தேவர்களும், ராக்ஷஸைர் வத்யமாநாநாம் வாநராணாம் மஹாசமூ: சரண்யம் சரணம் யாதா ராமம் தசரதாத்மஜம் என்று ஸ்ரீவாநர ஸேனையும், முதலாயுள்ளவர்களெல்லாரும் சரணம் புகுருகையாலே, ப்ரபத்திக்கு இன்னாரதிகாரிகளென்றொரு நியதியில்லை; ருசியுடையாரெல்லாரும் அதிகாரிகளென்கை.

**விளக்கம்** – கீழே உள்ள பல வரிகள் காண்க.

- மஹாபாரதம் – த்ரௌபத்யா ஸஹிதாஸ் ஸர்வே நமச் சக்ரூர் ஜநார்தநம் - த்ரௌபதியுடன் கூடியவர்களாக இருந்த ஐந்து பேரும் வந்து ஜநார்த்தனனை வணங்கினர் - என்று க்ஷத்ரியர்களான தர்மபுத்திரன் உள்ளிட்ட பாண்டவர்கள்.

- மஹாபாரதம் – சங்க சக்ர கதாபாணே த்வாரகா நிலயாச்யுத, கோவிந்த புண்டரீகாக்ஷ ரக்ஷமாம் சரணாகதாம் – சங்கு சக்ரத்துடன் கூடியவனே! துவாரகையில் உள்ளவனே! கோவிந்தா! அடியார்களை நழுவவிடாதவனே! தாமரை போன்ற கண்கள் கொண்டவனே! உன்னிடம் சரணம் அடைந்த என்னைக் காப்பாயாக - என்ற பெண்ணாகிய த்ரௌபதி.

- இராமாயணம் ஸுந்தர காண்டம் – ஸ பித்ராச பரித்யக்தஸ் ஸுரைச்ச ஸமஹர்ஷிபி:, த்ரீந் லோகாந் ஸம்பரிக்ரம்ய தமேவ சரணங்கத: – தாய் தந்தையர்கள், முனிவர்கள் , தேவர்கள் என்ற பலராலும் கைவிடப்பட்ட காகம், மூன்று உலகங்களிலும் அலைந்து திரிந்து இறுதியாக இராமனிடம் சரணம் என்று புகுந்தான் – என்று தனது தேவஸ்வரூபத்தை மறைத்து வந்து மிகவும் பெரிய பாவங்கள் செய்த காகம்.

- ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-7-10) - ஸோஹந்தே தேவ தேவேச நார்ச்சநாதௌ ஸ்துதௌ நச, ஸாமர்த்த்யவாந் க்ருபாமாத்ர மநோவ்ருத்தி: ப்ரஸீத மே – தேவர்களுக்குத் தலைவனே! உன்னை அர்ச்சனை செய்வது போன்ற செயலகளுக்குத் தகுதி படைத்தவன் அல்லன்; உன்னைத் துதிப்பதற்கும் சாமர்த்தியம் இல்லாதவன்; நீ உனது கருணை மூலமாக மனம் குளிர்ந்து, எனக்கு அருள் புரியவேண்டும் - என்று தாழ்ந்த விலங்கு இனத்தில் பிறந்த காளியன்.

- ஸ்ரீவிஷ்ணுதர்மம் (69-80) - பரமாபதமாபந்நோ மநஸாசிந்தயத்ஹரிம், ஸது நாகவரச் ஸ்ரீமாந் நாராயணபராயண: – கைங்கர்யம் என்ற செல்வம் நிறைந்தவனும், ஸ்ரீமந்நாராயணனை மட்டுமே எப்போதும் த்யானித்தபடி உள்ளவனும் ஆகிய கஜேந்த்ரன் மிகவும் பெரிய துன்பத்தை அடைந்தான். அப்போது தனது மனதாலேயே விரோதியை அழிக்கவல்ல எம்பெருமானை நினைத்தான் - என்று விலங்கு இனமாக உள்ளபோதிலும் எம்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்யும் கஜேந்த்ரன்.

- இராமாயணம் யுத்தகாண்டம் (17-16) – ஸோஹம் பருஷிதஸ் தேந தாஸவச்சாவமாநித:, த்யக்த்வா புத்ராம்ச்ச தாராம்ச்ச ராகவம் சரணம் கத: – நான் இராவணனுக்கு நன்மை அளிக்கும் சொற்களைக் கூறினேன். அப்படிப்பட்ட நான் இராவணனால் தீய சொற்கள் மூலம் தாக்கப்பட்டேன். அவனது வேலையாள் போன்று இழிவுபடுத்தப்பட்டேன். எனது புத்திரர்கள் மற்றும் மனைவியை விட்டு இராகவனைச் சரணம் அடைந்தேன் – என்று அரக்க குலத்தில் பிறந்த விபீஷணன்.

- இராமாயணம் யுத்தகாண்டம் (21-1) - பாஹும் புஜக போகாப முபதாயாரி ஸூதந:, அஞ்ஜலிம் ப்ராங்முக: க்ருத்வா ப்ரதிசிச்யே மஹோததே: - பாம்பின் உடல் போன்ற நீண்ட திருக்கரத்தைத் தனது தலைக்கு அணையாக வைத்தபடி கிழக்கு முகமாகக் கைகளைக் குவித்த இராமன் கடலை நோக்கிச் சயனித்தான் – என்று அனைவருக்கும் புகலிடமாக உள்ள இராமன்.

- இராமாயணம் – ஸப்ராதுச் சரணௌகாடம் நிபீட்ய ரகுநந்தந:, ஸீதாமுவாசாதியசா ராகவஞ்ச மஹாவ்ரதம் - மிகுந்த புகழுடைய இலக்குவன் தனது தமையனான இராமனின் திருவடிகளை இறுக்கமாகப் பற்றினான். அதன் பின்னர் இராமனையும் சீதையையும் பார்த்து உரைத்தான் – என்று பரமபதத்திலிருந்து தொடர்ந்து கைங்கர்யம் செய்யும் இலக்குவன்.

மேலே உள்ளவர்கள் பின்னே, ”தொடக்கமானவர்கள்” என்பதால் கீழே உள்ளவர்களும் உணர்த்தப்படுகின்றனர்:

- ஸ்ரீமத்பாகவதம் – ஸோஹம் த்வாம் சரணமபார மப்ரமேயம் ஸம்ப்ராப்த: பரமபதம் யதோ ந கிஞ்சித் ஸம்ஸார ச்ரமபரிதாப தப்த சேதா நிர்வாணே பரிணததாம்நி ஸாபிலாஷ: - யார் ஒருவனை அடைந்த பின்னர் அதற்கு மேல் வேறு எந்தவிதமான புருஷார்த்தமும் தேவை இல்லையோ, அப்படிப்பட்ட எல்லையற்ற பெருமைகள் கொண்ட உன்னை, எனது பிறவியின் காரணமாகத் தீய மனம் கொண்ட நான் சரணம் அடந்தேன். தூய்மையான ஒளி கொண்ட பரமபதத்தில் நான் ஆசை கொண்டேன் – என்று உரைத்த முசுகுந்தன்.

- மூடோய மல்பமதி ரல்ப விசேஷ்டிதோயம் க்லிஷ்டம் மநோஸ்ய விஷயைர் நமயிப்ரஸங்கி, இத்தம் க்ருபாங் குரு மயி ப்ரணதேகிலேச தவாம் ஸ்தோது மம்புஜ பவோபிஹி தேவ நேச: - அனைவருக்கும் தலைவனே! தேவர்களின் தேவனே! உன்னை வணங்கிக் கொண்டு நின்றுள்ள என்னைப் பற்றி உனது மனதில், ”இவன் ஏதும் அறியாதவன்; அற்பமான அறிவுள்ளவன்; தாழ்ந்த செயல்கள் செய்பவன்; இவன் மனம் எப்போதும் அற்பமான செயல்களில் ஈடுபட்டுள்ளது; என்னிடம் சிறிதும் ப்ரேமை இல்லாதவன்”, என்று எண்ணுவாயாக. இப்படியாக எண்ணி எனக்கு க்ருபை செய்யவேண்டும். உன்னைத் துதிக்க நான்கனும் திறன் அற்றவனே ஆவான் – என்ற க்ஷத்ரபந்து.

- பகவந்தம் ப்ரபந்நாஸா பகவந்தமவாப ஹ – எம்பெருமானைச் சரணம் அடைந்த அந்த மாதவி அவனை அடைந்தாள் - என்ற மாதவி.

- ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-7-7) - தம் ப்ரபிந்நசிரோக்ரீவம் ஆஸ்யேப்ய: ஸ்ருத சோணிதம் விலோக்ய சரணம் ஜக்முஸ் தத்பத்ந்யோ மதுஸூதநம் – உடைக்கப்பட்ட தலைகள் மற்றும் திருகப்பட்ட கழுத்து ஆகியவற்றில் இருந்து இரத்தம் சொரிந்தபடி நின்ற காளியனை அவனது மனைவிமார்கள் கண்டனர். உடனே அவர்கள் க்ருஷ்ணனைச் சரணம் அடைந்தனர் - என்று காளியனின் மனைவிமார்கள்.

- ப்ரணாம ப்ரவணா நாத தைத்ய ஸைந்ய பராஜிதா: சரணம் த்வா மநுப்ராப்தாஸ் ஸமஸ்தா தேவதா தேவதா கணா: – ஸ்வாமீ! தைத்ரியர்களின் சேனைகளால்

வீழ்த்தப்பட்ட தேவர்கள் உன்னை வணங்குவதில் ஆர்வம் கொண்டவர்களாக நின்று, உன்னைச் சரணம் அடைந்தனர் - என்று இந்த்ரன் உள்ளிட்ட தேவர்கள்.

- இராமாயணம் யுத்தகாண்டம் (94-17) - ராக்ஷஸைர் வத்யமாநாநாம் வாநராணாம் மஹாசமூ: சரண்யம் சரணம் யாதா ராமம் தசரதாத்மஜம் - அரக்கரகளால் தாக்கப்பட்ட குரங்குகளின் கூட்டம், தங்களைக் காப்பாற்றுபவன் என இராமனைத் தஞ்சம் அடைந்தன - என்று வானரசேனை.

ஆக பலரும் சரணம் புகுவதால், ப்ரபத்திக்கு இவர் இவர் மட்டுமே அதிகாரிகள் என்ற நியமம் ஏதும் இல்லை என்பது தெளிவாகிறது. சரணம் என்பதில் ஆர்வம் உடைய அனைவரும் தகுதியானவர்கள் ஆவர்.

33. பலநியமமின்றிக்கேயொழிந்தபடியென்னென்னில்; தர்மபுத்ராதிகளுக்குப் பலம் ராஜ்யம்; த்ரௌபதிக்குப் பலம் வஸ்த்ரம்; காகத்துக்கும் காளியனுக்கும் பலம் ப்ராணம்; ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்குப் பலம் கைங்கர்யம்; ஸ்ரீவிபீஷணாழ்வானுக்குப் பலம் ராமப்ராப்தி; பெருமாளுக்குப் பலம் ஸமுத்ரதரணம்; இளையபெருமாளுக்குப் பலம் ராமாநுவ்ருத்தி.

**அவதாரிகை** – அநந்தரம், பல நியமாபாவ ப்ரச்நத்தையநுவதிக்கிறார் "பல நியமமின்றிக்கேயொழிந்தபடி யென்னென்னில்" என்று. அதுக்குத்தரமருளிச் செய்கிறார் "தர்மபுத்ராதிகளுக்கு பலம்" என்று தொடங்கி.

**விளக்கம்** - அடுத்து "பல நியமம் இல்லை" என்னும் கேள்வியை எழுப்பி (பலநியம மின்றிக்கேயொழிந்தபடியென்னென்னில்), அதற்கான விடையை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – இத்தால், கீழ் அதிகாரி நியமாபாவத்துக் குடலாகக் காட்டப்பட்ட தர்ம புத்ராதிகள் தொடக்கமான ப்ரபத்தாக்களானவர்கள், ராஜ்யார்த்தமாகவும் வஸ்த்ரார்த்தமாகவும், ப்ராணார்த்தமாகவும், கைங்கர்யார்த்தமாகவும், ராமப்ராப்த் யர்த்தமாகவும்; ஸமுத்ரதரணார்த்தமாகவும், ராமாநுவ்ருத்த்யர்த்தமாகவும் ப்ரபத்தி பண்ணுகையாலே ப்ரபத்திக்குப் பலநியமமில்லையென்றதாய்த்து.

**விளக்கம் -** இந்தச் சூர்ணை முலம் உணர்த்தப்படுவது – கடந்த சூர்ணையில் “ப்ரபத்திக்கு அதிகாரி நியமம் இல்லை” என்பதற்கு உதாரணமாகக் கூறப்பட்ட பாண்டவர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் செய்தது பற்றிக் கூறப்படுகிறது. மேலே கூறப்பட்டவர்கள் இராஜ்யம் அடைதல், வஸ்த்ரம் பெறுதல், உயிரை நிலை நிறுத்துதல், கைங்கர்யம் வேண்டுதல், இராமனை அடைதல், கடலில் அணை கட்டுதல், இராமன் பின்னே செல்லுதல் போன்ற பல செயல்களுக்காக ப்ரபத்தி செய்தனர். ஆகவே ப்ரபத்தி என்பதற்கு “இன்ன பலன் அடைவதற்காக” என்ற பல நியமம் இல்லை என்றாகிறது.

34. விஷயநியமமாவது குணபூர்த்தியுள்ளவிடமே விஷயமாகை; பூர்த்தியுள்ளதும் அர்ச்சாவதாரத்திலே.

**அவதாரிகை** - ஆக ப்ரபத்திக்கு தேசகாலாதி நியமாபேக்ஷையில்லையென்ற ப்ரதிஜ்ஞையை யுபபாதித்தார் கீழ்; (விஷயநியமமேயுள்ளது) என்ற ப்ரதிஜ்ஞையை உபபாதிக்கிறார் மேல் (விஷய நியமமாவது) என்று தொடங்கி.

**விளக்கம் –** இதுவரை ப்ரபத்திக்கு தேசம், காலம் போன்ற நியமங்கள் இல்லை என்று தான் எடுத்த விஷயத்தை உறுதிபட விளக்கினார். இனி “விஷய நியமம் மட்டுமே உள்ளது” என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (குணபூர்த்தியுள்ளவிடமே விஷயமாகை) என்றது - பரத்வாதிகளைந்திலும் வைத்துக்கொண்டு ஸௌலப்யாதி குணபூர்த்தியுள்ளவிடமே விஷயமாகையென்றபடி. அந்த குணபூர்த்திதானுள்ளதெங்கேயென்ன. (பூர்த்தியுள்ளதுமர்ச்சாவதாரத்திலே) என்கிறார். அர்ச்சாவதார விஷயே மயாப் யுத்தேசதஸ் ததா உக்தா குணா நசக்யந்தே வக்தும் வர்ஷ சதைரபி என்று ஸ்வதஸ் ஸர்வஜ்ஞனானதானே சொல்லப்புக்காலும் சொல்லித் தலைக்கட்ட வரிதாம்படியிறே அர்ச்சாவதார குணபூர்த்தியிருப்பது.

**விளக்கம் –** ”குணபூர்த்தியுள்ளவிடமே விஷயமாகை” என்றால் பரத்வம் உள்ளிட்ட ஐந்து நிலைகளிலும் (பரத்வம், வ்யூஹம், விபவம், அந்தர்யாமி மற்றும் அர்ச்சை) ஸௌலப்யம் முதலான குணங்கள் பூர்ணமாக உள்ளது என்று பொருள். இப்படிப்பட்ட குணங்கள் பூர்ணமாக உள்ளது அர்ச்சாவதாரத்தில் என்கிறார். பாத்மஸம்ஹிதை – அர்ச்சாவதார விஷயே மயாப் யுத்தேசதஸ் ததா உக்தா குணா நசக்யந்தே வக்தும் வர்ஷ சதைரபி –

இப்படியாக அர்ச்சாவதாரத்தின் குணங்கள் என்னால் சுருக்கமாகக் கூறப்பட்டன; நூறு ஆண்டுகள் இவ்விதம் அர்ச்சையின் குணங்களை உரைத்தாலும் என்னால் கூறி முடிக்க இயலாது – என்று ஸர்வேச்வரனே கூறியது காண்க. ஆகவே அனைத்தும் அறிந்த எம்பெருமான் முயற்சித்தாலும் அவனால் கூட அர்ச்சையின் குணங்களை முழுமையாக உரைக்க இயலாது.

35. ஆழ்வார்கள் பலவிடங்களிலும் ப்ரபத்தி பண்ணிற்றும் அர்ச்சாவதாரத்திலே.

**அவதாரிகை** - இக்குண பூர்த்தியுள்ள அர்ச்சாவதாரமே ப்ரபத்திக்கடைத்த விஷயமென்னுமத்தை, ப்ரபந்நஜந கூடஸ்தருடைய அநுஷ்டாநத்தாலும் ப்ரகாசிப்பிக்கிறார் மேல் (ஆழ்வார்கள்) என்று தொடங்கி.

**விளக்கம்** – இப்படியாகக் குணங்கள் பூர்ணமாக நிறைந்துள்ள அர்ச்சை என்பதே ப்ரபத்திக்கு ஏற்ற விஷயம் என்பதை ஸ்வாமி நம்மாழ்வாரின் அநுஷ்டானம் மூலம் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - மயர்வறமதிநலமருளிப் பெறுகையாலே பரத்வாதிகளையெல்லாம் கரதலாமலகமாகக் கண்டிருக்கிறவர்களிறே ஆழ்வார்கள். இப்படியிருக்கிறவர்கள் ப்ராப்யத்வராதிசயத்தாலே பலகாலும் ப்ரபத்தி பண்ணுகிறவளவில் பலவிடங்களிலும் அர்ச்சாவதாரத்திலேயிறே ப்ரபத்தி பண்ணிற்று. ஸ்தலாந்தரத்தில் க்வாசித்கமித்தனையிறே. எங்ஙனேயென்னில்? ஆழ்வார்களுக்கெல்லாம் தலைவரான நம்மாழ்வார் “ஆறெனக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்”, “கழல்களவையே சரணாகக் கொண்ட”, “நம்பெருமானடிமேல் சேமங்கொள் தென்குருகூர்ச் சடகோபன்”, ”உன்னடிக் கீழமர்ந்து புகுந்தேன்” என்று இப்படி பலவிடங்களிலும் ப்ரபத்தி பண்ணிற்று அர்ச்சாவதாரத்திலேயிறே; பிறந்தவாறு ஒன்றிலுமிறே அவதாரத்திலே சரணம்புக்கது. திருமங்கையாழ்வாரும், “வந்துன் திருவடியடைந்தேன் நைமிசாரணியத்துளெந்தாய்”, ”விரையார் திருவேங்கடவா நாயேன் வந்தடைந்தேன்”, ”காவளம்பாடி மேய கண்ணனே களைகணீயே”, “ஆழிவண்ணா! நின்னடியிணையடைந்தேனணி பொழில் திருவரங்கத் தம்மானே” என்று இப்படி அர்ச்சாவதாரத்திலேயிறே பலவிடங்களிலும் ப்ரபத்தி பண்ணிற்று. மற்றையாழ்வார்களுக்குமிப்படி தத்தத் ப்ரபந்தங்களிலே கண்டு கொள்வது (ப்ரபத்தி பண்ணிற்றும்) என்கிற விந்த ச சப்தத்தாலே (பூர்த்தியுள்ளதும்) என்று கீழ்ச் சொன்னத்தை ஸமுச்சயிக்கிறது.

**விளக்கம்** – மயர்வற மதிநலம் அருளப் பெற்றவர்கள் என்பதால் ஆழ்வார்கள் அர்ச்சை உள்ளிட்ட ஐந்து நிலைகள் பற்றிய அனைத்தையும் பூர்ணமாக உள்ளங்கை நெல்லிக்கனி போன்று அறிந்தவர்கள் ஆவர். இப்படியாக உள்ள ஆழ்வார்கள் தங்களின் பாசுரங்கள் மூலம் பல இடங்களிலும் ப்ரபத்தி குறித்து முழங்குகின்றபோது, பல இடங்களிலும் அர்ச்சையிடமே ப்ரபத்தி செய்தனர். அர்ச்சை நீங்கலாக உள்ள மற்ற நான்கு நிலைகளிலும் ப்ரபத்தி செய்தது ஒரு சில இடங்களில் மட்டுமே ஆகும். எப்படி இதனைக் கூற முடிந்தது? ஆழ்வார்களின் தலைவராக உள்ள ஸ்வாமி நம்மாழ்வார் கீழே உள்ள பல பாசுரங்கள் மூலம் அர்ச்சையைச் சரணம் அடைந்தார்:

- திருவாய்மொழி (5-7-10) – ஆறெனக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்
- திருவாய்மொழி (5-8-11) – கழல்களவையே சரணாகக் கொண்ட
- திருவாய்மொழி (5-9-11) – நம்பெருமானடிமேல் சேமங்கொள் தென்குருகூர்ச் சடகோபன்
- திருவாய்மொழி (6-10-10) – உன்னடிக் கீழமர்ந்து புகுந்தேன்

ஆயினும் திருவாய்மொழி (5-10-1) - பிறந்தவாறும் – என்ற ஒரு பாசுரம் மூலம் மட்டுமே அர்ச்சை அல்லாத நிலையில் சரணம் புகுந்தார். இது போன்று திருமங்கையாழ்வாரும் கீழே உள்ள பல இடங்களில் அர்ச்சையைச் சரணம் புகுகிறார்:

- பெரிய திருமொழி (1-6-4) – வந்துன் திருவடியடைந்தேன் நைமிசாரணியத்துளெந்தாய்
- பெரிய திருமொழி (1-9-1)- விரையார் திருவேங்கடவா நாயேன் வந்தடைந்தேன்
- பெரிய திருமொழி (4-6-1) - காவளம்பாடி மேய கண்ணனே களைகணீயே
- பெரிய திருமொழி (5-8-1) - ஆழிவண்ணா! நின்னடியிணையடைந்தேனணி பொழில் திருவரங்கத்தம்மானே

இது போன்று மற்ற ஆழ்வார்கள் ப்ரபத்தி செய்ததை அவரவர்களின் ப்ரபந்தத்தில் காணலாம். "ப்ரபத்தி பண்ணிற்றும்" என்பதன் முடிவில் உள்ள உம்மைத் தொகை, மேலே கூறப்பட்ட "பூர்த்தி உள்ளதும்" என்பதுடன் இணைகிறது.

36. "பூர்ணம்" என்கையாலே யெல்லா குணங்களும் புஷ்கலங்கள்.

**அவதாரிகை** - இப்படியிவ்வாழ்வார்கள் ப்ரபத்தி பண்ணுமிடங்களில் பரத்வாதிகளெல்லாமிருக்க அர்ச்சாவதாரத்திலே பண்ணுகைக்கடி – இதின் குணபூர்த்தியிறே; அந்த குணபூர்த்தி தன்னை ஸப்ரமாணமாக வருளிச் செய்கிறார் மேல் (பூர்ணம்) என்று தொடங்கி.

**விளக்கம்** - பல நிலைகளிலும் எம்பெருமான் உள்ளபோது ஆழ்வார்கள் ஏன் அர்ச்சை நிலையில் மட்டுமே ப்ரபத்தி செய்தனர் என்ற கேள்வி எழலாம். இதன் காரணம் அர்ச்சையில் குணங்கள் பூர்ணமாக உள்ளதால் ஆகும். இப்படியாக அர்ச்சையில் குணங்கள் பூர்ணமாக உள்ளதைத் தகுந்த ப்ரமாணங்கள் மூலம் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (பூர்ணமென்கையாலே) என்றது பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவா வசிஷ்யதே ஸர்வம் பூர்ணம் ஸஹோம் என்று ச்ருதி சொல்லுகையாலேயென்றபடி. (எல்லா குணங்களும் புஷ்கலங்கள்) என்றது ஆச்ரயண ஸௌகர்யாபாதகங்களான குணங்களோடு கார்யாபாதகங்களான குணங்களோடு வாசியற ஸகல கல்யாண குணங்களுமிவ் விஷயத்திலே ஸம்பூர்ணமென்றபடி.

**விளக்கம்** – "பூர்ணம் என்கையாலே" என்பதன் மூலம் உணர்த்தப்பட்டது என்ன? கட உபநிஷத் – பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவா வசிஷ்யதே ஸர்வம் பூர்ணம் ஸஹோம் - காப்பதை இயல்பாக உடையதும், அடையத்தக்கதாக உள்ளதும் ஆகிய அர்ச்சாவதாரத்தில் அனைத்தும் பூர்ணமாக உள்ளன – என்று ச்ருதி உணர்த்துவதை இவரும் அருளிச்செய்கிறார். "எல்லா குணங்களும் புஷ்கலங்கள்" என்பதன் மூலம் உபாயமாகப் பற்றும்போது எளிமையை உணர்த்தவல்ல குணங்களுடன் (வாத்ஸல்யம், ஸ்வாமித்வம், ஸௌசீல்யம், ஸௌலப்யம்), அடியார்களின் செயல்களை நிறைவேற்றத்தக்க குணங்களும் (ஞானம், சக்தி, பூர்த்தி) வேற்றுமை இன்றி அனைத்து திருக்கல்யாண குணங்களாக இந்த அர்ச்சையில் கலந்து, குறைவற்று உள்ளது - என்பதை உணர்த்தினார்.

37. ப்ரபத்திக்கபேக்ஷிதங்களான ஸௌலப்யாதிகள் இருட்டறையில் விளக்குப்போலே ப்ரகாசிப்பதிங்கே.

**அவதாரிகை** - ஆனால், “வாஸுதேவோஸி பூர்ண:” என்கிற பரத்வத்திற் காட்டில் இங்குத்தைக் கேற்ற மென்னென்ன வருளிச்செய்கிறார் (ப்ரபத்திக்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** - வாஸுதேவோஸி பூர்ண: - வாசுதேவனான நீ எங்கும் வ்யாபித்துள்ளாய் - என்று கூறும் பரத்வத்தைக் காட்டிலும் இங்கு உணர்த்தப்பட்ட மேன்மை என்ன என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் – (ப்ரபத்திக் கபேக்ஷிதங்களான) என்றது - உபாயமாகப் பற்றுமிடத்தில் வேண்டுமவையான வென்றபடி. (ஸௌலப்யாதிகளாவன) – கண்டு பற்றுகைக்குறுப்பான ஸௌலப்யமும், மேன்மை கண்டகலாமைக் குறுப்பான ஸௌசீல்யமும், கார்யஞ் செய்யுமென்று விச்வஸிக்கைக்குறுப்பான ஸ்வாமித்வமும், குற்றங்கண்டு வெருவாமைக் குறுப்பான வாத்ஸல்யமும். "நிகரில் புகழாய்” இத்யாதியாலே இந்நாலு குணத்தையுமிறே ஆழ்வாரருளிச்செய்தது.

(இருட்டறையில் விளக்குப்போலே ப்ரகாசிப்பதிங்கே) என்றது - பரத்வத்தில் இக்குணங்களெல்லாமுண்டாயிருக்கச்செய்தே, பரமஸாம்யாபந்நர்க்கு முகங் கொடுத்திருக்கிற விடமாகையாலே பகல்விளக்குப்போல் ப்ரகாசமற்றிருக்கும்; அர்ச்சாவ தாரமான விடத்தில் தண்மைக் கெல்லைநிலமான ஸம்ஸாரிகளுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கையாலே, அந்தகாரத்தில் தீபம்போலே அத்யுஜ்வலமாய்த் தோற்றுமென்றபடி. விஷயமுள்ள விடத்தேயிறே குணங்கள் ப்ரகாசிப்பது; அங்குள்ளாரும் சீலாதி குணாநுபவம் பண்ணுகைக்கு வருவதிங்கேயிறே. ஸௌலப்யம் முன்னாக வருளிச்செய்தது - கண்டுபற்றுகைக்குறுப்பான ஸௌலப்யமே ப்ரபத்திக்கு ப்ரதாநா பேக்ஷிதமென்று தோற்றுகைக்காக.

**விளக்கம்** – "ப்ரபத்திக் கபேக்ஷிதங்களான” என்பதன் மூலம் – உபாயமாகப் பற்றும் ஒரு விஷயத்தில் இன்றியமையாமல் இருக்க வேண்டியவை – என்பதைக் கூறினார். “ஸௌலப்யாதிகளாவன” என்பதன் மூலம் – கண்ணால் கண்டும் மற்ற உறுப்புக்களால் உணர்ந்தும் பற்றுவதற்குச் சான்றாக உள்ள ஸௌலப்யம், அவனது மேன்மையைக் கண்டு நாம் விலகிச் செல்வதைத் தடுக்கவல்ல சௌசீல்யம், நமது செயல்களை இவன் பார்த்துக் கொள்வான் என்று நமக்கு நம்பிக்கை ஏற்படுத்தவல்ல ஸ்வாமித்வம், நமது

குற்றங்களைக் கண்டு இவன் நன்மை வெறுக்காமல் இருப்பதற்கு அவனிடம் உள்ள வாத்ஸல்யம் – ஆகிய பலவும் உணர்த்தப்பட்டது. இந்த நான்கையும் நம்மாழ்வார் திருவாய்மொழியில் (6-10-10) – நிகரில் புகழாய் – என்று அருளிச்செய்தார்.

“இருட்டறையில் விளக்குப்போலே ப்ரகாசிப்பதிங்கே” என்பதன் மூலம் – பரத்வத்தில் இந்த அனைத்து குணங்களும் இருக்கவே செய்கிறது. ஆயினும் அனைத்து விதங்களிலும் தன்னைப் போன்றே உள்ள நித்யசூரிகளால் மட்டுமே காண்பதற்கு ஏற்றபடி உள்ள பரவாஸுதேவ நிலை என்பது, பகலில் ஏற்றப்பட்ட விளக்கு போன்று ப்ரகாசம் இல்லாமலேயே இருக்கும். ஆனால் அர்ச்சாவதாரத்தில், தாழ்வுக்கு இடமாக உள்ள ஸம்ஸாரத்தில் இருக்கின்ற மனிதர்களுக்குத் தன்னை காண்பித்தபடி உள்ளதால், ஆழ்ந்த இருளில் ஏற்றப்பட்ட விளக்கு போன்று, மிகுந்த ஒளியாக அர்ச்சை ப்ரகாசிக்கிறது – என்று உணர்த்தினார். பரம்பதத்தில் உள்ளவர்கள் கூட இவனது சீலம் முதலான குணங்களை அனுபவிப்பதற்காக இங்கு இவன் அர்ச்சையாக உள்ள இடம் தேடி வருவதாக அல்லவோ அர்ச்சையின் தன்மை உள்ளது? ஸௌலப்யம் என்பதை ஏன் முதலில் அருளிச்செய்தார்? இவனை நன்கு உணர்ந்து, பற்றிக் கொள்வதற்கு ஏற்றபடி உள்ள ஸௌலப்யம் என்பதே ப்ரபத்திக்கு முதலில் தேவையானது என்பதை உணர்த்தவே ஆகும்.

38. பூர்த்தியையும் ஸ்வாதந்த்ர்யத்தையும் குலைத்துக் கொண்டு தன்னை அநாதரிக்கிறவர்களைத் தான் ஆதரித்து நிற்கிறவிடம்

**அவதாரிகை** - “இக்குணங்கள் ப்ரகாசிப்பதிங்கே” என்றத்தை யுபபாதிக்கிறார் (பூர்த்தியையும்) என்று தொடங்கி.

**விளக்கம்** – “இக்குணங்கள் ப்ரகாசிப்பது இங்கே” என்று கடந்த சூர்ணையில் அருளிச்செய்ததை மேலும் விளக்குகிறார்.

**வ்யாக்யானம்** - (பூர்த்தியாவது) - அவாப்த ஸமஸ்த காமத்வம்; அத்தைக் குலைத்துக் கொள்ளுகையாவது இவனிட்டது கொண்டு த்ருப்தனாக வேண்டும்படி ஸாபேக்ஷனாயிருக்கை. (ஸ்வாதந்த்ர்யமாவது) ஸ்வாதீந ஸ்வரூபாதிமத்த்வம்; அத்தைக் குலைத்துக் கொள்ளுகையாவது - ஆச்ரிதாதீந ஸ்வரூப ஸ்தித்யாதிகளையுடையனாகை. ததிச்சயா மஹாதேஜா புங்க்தேவை பக்தவத்ஸல: ஸ்நாநம் பாநம் ததா யாத்ராம்

குருதேவை ஜகத்பதி: ஸ்வதந்த்ரஸ் ஸஜகந்நாதோப்யஸ்வதந்த்ரோ யதாததா ஸர்வசக்திர் ஜகத்தாதாப்யசக்த இவ சேஷ்டதே என்னக்கடவதிறே. அர்ச்சக பராதீநாகிலாத்ம ஸ்திதி: என்றருளிச் செய்தாரிறே பட்டர். தன்னிச்சையொழிய இவற்றைக் குலைக்கைக்கு ஹேதுவில்லாமையாலே (குலைத்துக்கொண்டு) என்கிறார். (தன்னையநாதரிக் கிறவர்களைத் தானாதரித்து நிற்கிறவிடம்) என்றது - தானிப்படி ஸுலபனாய் வந்து நின்றால் அரியவனெளியவனாய் நிற்கப் பெற்றோமே! என்று விரும்பி மேல் விழுகை யன்றிக்கே, அவ்வெளிமை தானே ஹேதுவாக உபக்ஷிக்கிற ஸம்ஸாரிகளைத் தான் விட மாட்டாதவளவன்றிக்கே அவர்களையொழியச் செல்லாமை தோற்றும்படி நிற்கிற ஸ்தலம் அர்ச்சாவதாரமென்கை. பூர்த்தியையும் ஸ்வாதந்த்ர்யத்தையும் குலைத்துக்கொண்டு நிற்கையாலே – ஸௌலப்ய ஸௌசீல்யங்களும் தன்னையநாதரிக்கிறவர்களைத் தானாதரித்து நிற்கையாலே - ஸ்வாமித்வ வாத்ஸல்யங்களுமிங்கே தோற்ற நின்றதிறே.

**விளக்கம் -** பூர்த்தி என்றால் தான் விரும்பியது அனைத்தும் அடைந்தவனாக இருப்பதாகும் (அவாப்த ஸமஸ்த காமத்வம்). அந்தத் தன்மையை விடுதல் என்பது, தனது அடியார் ஒருவன் தனக்குச் சிறிய ஒன்றை அளித்தாலும் அதனைக் கொண்டு, தான் மனம் நிறைய வேண்டும் என்று விரும்புதல் ஆகும். ஸ்வாதந்த்ர்யம் என்றால் ஸ்வரூபம் போன்ற பலவற்றையும் தன் வசப்படுத்தி வைத்திருப்பது ஆகும். அந்தத் தன்மையைப் போக்கிக் கொள்ளுதல் என்பது - தனது அடியார்களுக்கு ஏற்றபடி தனது ஸ்வரூபம், இருப்பு ஆகியவற்றை மாற்றிக் கொள்ளுவது ஆகும். விஷ்வக்சேந ஸம்ஹிதை – ததிச்சயா மஹாதேஜா புங்க்தேவை பக்தவத்ஸல: ஸ்நாநம் பாநம் ததா யாத்ராம் குருதேவை ஜகத்பதி: ஸ்வதந்த்ரஸ் ஸஜகந்நாதோப்யஸ்வதந்த்ரோ யதாததா ஸர்வசக்திர் ஜகத்தாதாப்யசக்த இவ சேஷ்டதே - அடியார்களின் தோஷங்களைப் பாராமல் உள்ளவனாக, மிகுந்த மேன்மை கொண்டவனாக உள்ள ஸர்வேச்வரன், தன்னை அண்டியவர்களின் விருப்பத்திற்கு ஏற்றபடி நீராடுவது, நீர்பருகுவது, யாத்திரை செல்வது போன்ற பலவற்றையும் செய்கிறான்; ஜகந்நாதனான அவன் அடியார்களின் முன்பாக ஸ்வதந்த்ரனாக உள்ளபோதிலும், ஸ்வதந்த்ரம் அற்றவன் போன்றே உள்ளான்; அனைத்து வல்லமை படைத்தவனாக உள்ளபோதிலும், சற்றும் திறன் அற்றவன் போன்று அடியார்கள் முன்பு லீலைகள் செய்கிறான் - என்றது காண்க. ஸ்வாமி பராசரபட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் (74) – அர்ச்சக பராதீநாகிலாத்ம ஸ்திதி: – அர்ச்சகர் எவ்விதமாக அலங்கரிக்கிறாரோ அதனை ஏற்று உள்ளான் - என்றார். இது போன்று தனது உயர்ந்த தன்மைகளைத் தாழ்த்திக் கொள்ளுதல் என்பதற்கு அவனுடைய விருப்பம் இல்லாமல்,

வேறு எந்தக் காரணத்தினாலும் அல்ல என்பதை உணர்த்தவே “குலைத்துக்கொண்டு” என்றார். ” தன்னையநாதரிக்கிறவர்களைத் தானாதரித்து நிற்கிறவிடம்” என்பதன் பொருள் – இவ்விதம் எளிமையால் வந்து நிற்பது, ”காண்பதற்கும் அடைவதற்கும் மிகவும் அரியவனாக உள்ள ஸர்வேச்வரன் இத்தனை சுலபமாக இங்கு வந்து நிற்கும்படியான பேறு பெற்றோமே” என்று இவனது அடியார்கள் ஓடிவந்து அணைப்பதற்காக மட்டுமே அல்ல; இந்த எளிமை காரணமாக இவன் தன்னை அண்டாத மனிதர்களையும் விடுவதில்லை; அத்துடன் அல்லாமல் தனது அழகில் மயக்கி தன்னை விரும்பாத மனிதர்கள் தன்னை விட்டு அகலாமல் செய்து, அவர்களைத் தோற்கடிப்பது இந்த அர்ச்சாவதாரத்தில் என்று உணர்த்தவே ஆகும். ஆக இவன் தனது பூர்த்தி மற்றும் ஸ்வாதந்த்ர்யம் ஆகிய இரண்டையும் தள்ளி வைத்து நிற்கிறான். மேலும் தனது ஸௌலப்யம் மற்றும் ஸௌசீல்யம் ஆகியவை மூலமாகத் தன்னை அண்டாதவர்களையும் தான் அணைத்துக் கொண்டு நிற்கிறான். இதனால் இங்கு இவனது ஸ்வாமித்வமும் வாத்ஸல்யமும் தோன்றா நின்றன.

**வ்யாக்யானம்** - அன்றிக்கே, (பூர்த்தியையும்) என்று தொடங்கி இவ்வாக்யமெல்லாவற்றாலும் குணசதுஷ்டயத்திலும் ப்ரதாநமான ஸௌலப்யத்தையே யோட வைத்தாராகவுமாம்; அப்போது, இவ்விஷயத்தினுடைய ஸௌலப்யாதிசயத்தை தர்சிப்பிக்கிறாரென்று வாக்ய ஸங்கதியாக்கடவது. கண்ணுக்கு விஷயமாம்படி நித்ய ஸந்நிதி பண்ணுகிறவளவன்றிக்கே, ஸர்வப்ரகார பரிபூர்ணனாய் நிரங்குச ஸ்வதந்த்ரனாயிருக்கிற தன்னை ஸாபேக்ஷனும் பரதந்தரனுமாக்கிக் கொண்டு, தன்னை யநாதரிக்கிற ஸம்ஸாரிகளைத் தானாதரித்து நிற்கைக்கு மேற்பட்ட ஸௌலப்யமில் லையிறே; ஏவம் பஞ்சப்ரகாரோஹ மாத்மநாம் பததாமத: பூர்வஸ்மாதபி பூர்வஸ்மாஜ் ஜ்யாயாம்ச்சைவோத்தரோத்தர:; ஸௌலப்யதோ ஜகத்ஸ்வாமீ ஸுலபோஹ்யுத்தரோதர: என்று பரத்வாதிகளைந்திலும் ஸௌலப்யமுண்டாயிருக்கச்செய்தே, பூர்வபூர்வத்திற் காட்டிலுத்தரோத்தரத்துக்கு ஸௌலப்யமதிசயித்திருக்குமென்று தானேயருளிச் செய்கையாலே, ஸௌலப்யத்துக்கெல்லை நிலம் அர்ச்சாவதாரமிறே.

**விளக்கம்** - இதற்கு வேறுவிதமாகவும் பொருள் உரைக்கலாம். இந்தச் சூர்ணை மூலம் நான்கு குணங்களுக்குள் முதன்மையான ஸௌலப்யத்தையே உரைக்கிறார் எனக் கூறலாம். இவ்விதம் பொருள் கொள்ளும்போது, இவனது ஸௌலப்யமானது அர்ச்சையில் அதிகமாக உள்ளதை உணர்த்துகிறார் என்றாகிறது. எப்போதும் நமது

கண்களுக்கு புலப்படும்படியாக நிற்கிறான்; அனைத்து விதங்களிலும் அனைத்தும் பெற்றுள்ளவனும், எந்த ஒன்றாலும் தடை ஏற்படாத சுதந்திரம் உள்ளவனும் ஆகிய இவன் ஏதோ ஒரு பொருளை விரும்பி நிற்பவன் போன்றும், சுதந்திரம் இல்லாதவன் போன்றும், அடியார்கள் இழுத்த இழுப்புக்கு வருபவன் போன்றும் தன்னை மாற்றிக் கொண்டு அர்ச்சையாக நிற்கிறான்; தன்னை விரும்பாத மனிதர்களையும் தான் விரும்பியவனாக நிற்கிறான். இதனைக் காட்டிலும் உயர்ந்த ஸௌலப்யம் வேறு என்ன உள்ளது? விஷ்வக்ஸேந ஸம்ஹிதை – ஏவம் பஞ்சப்ரகாரோஹ மாத்மநாம் பததாமத: பூர்வஸ்மாதபி பூர்வஸ்மாஜ் ஜ்யாயாம்ச்சைவோத்தரோத்தர:; ஸௌலப்யதோ ஜகத்ஸ்வாமீ ஸுலபோஹ்யுத்தரோதர: – அந்தர்யாமி போன்ற ஐந்து நிலைகளுடன் உள்ள நான் ஸம்ஸாரத்தில் உழன்றபடி உள்ள ஜீவாத்மாக்களைக் குறித்து முன்பு இருந்ததைவிட இன்னமும் எளிமை, அதனைவிட எளிமை என்று உள்ளேன். இந்த உலகின் ஸ்வாமியான நான் எனது ஸௌலப்யம் காரணமாக மிகவும் சுலபன் அல்லவா - என்றது காண்க. ஆக பரவாஸுதேவன் உள்ளிட்ட அனைத்து நிலைகளிலும் ஸௌலப்யம் என்பது இருக்கவே செய்கிறது. ஆயினும் முந்தைய நிலையைக் காட்டிலும் பிந்தைய நிலைக்கு மேலும் எளிமை (பர நிலையை விட வ்யூஹ நிலைக்கு எளிமை அதிகம், வ்யூஹம் என்பதில் உள்ள எளிமையை விட விபவ நிலையில் எளிமை அதிகம் என்றபடி) அதிகம் என்று தானே அருளிச்செய்தார். இதனால் இறுதியாக உள்ள அர்ச்சை என்பதே ஸௌலப்யம் மிகவும் அதிகமாக வெளிப்படும் நிலை என்பதாகிறது.

39. பூகதஜலம் போலே அந்தர்யாமித்வம்; ஆவரணஜலம் போலே பரத்வம்; பாற்கடல்போலே வ்யூஹம்; பொருக்காறுபோலே விபவங்கள்; அதிலே தேங்கின மடுக்கள் போலே அர்ச்சாவதாரம்.

**அவதாரிகை** - பரத்வாதிகளுடைய தௌர்லப்யத்தையும் அர்ச்சாவதார ஸௌலப்யத்தையும் த்ருஷ்டாந்த முகேந தர்சிப்பிக்கிறார் மேல் (பூகதஜலம்) என்று தொடங்கி.

**விளக்கம்** - ப்ரத்வம் உள்ளிட்ட நான்கு நிலைகளின் அருமை மற்றும் அர்ச்சாவதாரத்தின் எளிமை ஆகியவற்றைத் தகுந்த உதாரணம் மூலம் இந்தச் சூர்ணையில் விளக்குகிறார்.

**வ்யாக்யானம் -** த்ருஷ்ணார்த்தனுக்கு தேசாந்தரத்திற் போகவேண்டாதபடி நிற்கிறவிடந் தன்னிலேயுண்டாயிருக்கச்செய்தேயும், கொட்டும் குந்தாலியுங்கொண்டு கல்லினாலல்லது குடிக்கக் கிடையாத பூகதஜலம் போலேயாய்த்து - கண்டு பற்ற வேணுமென்றாசைப்பட்டவனுக்கு ஹ்ருதயத்திலேயிருக்கச்செய்தேயும் கட்கிலீ என்கிறபடியே கண்ணுக்கு விஷயமன்றிக்கே, அஷ்டாங்க யோகரூப யத்நத்தாலே காண வேண்டும்படியான அந்தர்யாமித்வம். அவனுக்கு, அண்டத்துக்குப் புறம்பே பெருகிக் கிடக்கிற ஆவரணஜலம் போலேயாய்த்து இவனுக்கும் அப்பால் முதலாய் நின்ற வளப்பரியவாரமுது என்கிறபடியே லீலாவிபூதிக்கப்பால்பட்டிருக்கிற பரத்வம். அப்படி அதிவிப்ரக்ருஷ்டமன்றியே அண்டாந்தர்ப்பூதமாயிருக்கச்செய்தேயும், அவனுக்கு துஷ்ப்ராபமான பாற்கடல் போலேயாய்த்து இவனுக்கும் பாலாழி நீ கிடக்கும் பண்பை யாங்கேட்டேயும் என்கிறபடியே, கேட்டிருக்குமத்தனையல்லது, சென்று காணவரிதாம்படியிருக்கிற வ்யூஹம். ப்ரத்யாஸந்நமாயும் தாத்காலிகர்க்கு உபஜீவ்யமாய் பாச்சாத்யனானவனுக்கு துர்லபமான பெருக்காறு போலேயாய்த்து மண் மீதுழல்வாய் என்கிறபடியே பூமியிலேயவதரித்து ஸஞ்சரித்தும், தத்காலவர்த்திகளுக்கு ஆச்ரயணீயமாய்ப் பிற்காலத்திலுளனானவிவனுக்குக் கிட்டாதபடியான விபவம். முன்பு சொன்னவை போலன்றிக்கே, அவனுக்கு விடாய் கெடப் பருகலாம்படி பெருக்காற்றிலே தேங்கின மடுக்கள் போலேயாய்த்து இவனுக்கும் தேச கால காரண விப்ரக்ருஷ்டமின்றிக்கே கோயில்களிலும் க்ருஹங்களிலும் என்றுமொக்க எல்லார்க்கும் கண்ணுக்கிலக்காம்படி நிற்கிற பின்னானார் வணங்குஞ் சோதியான அர்ச்சாவதாரம். பௌமதிகேதநேஷ்வபி குடீகுஞ்ஜேஷு என்கிறபடியே – பலவிடங்களிலும் ஸந்நிதி பண்ணி நிற்கும்படியை நினைத்திறே (மடுக்கள் போலே) என்ற பஹுவசநத்தாலேயருளிச் செய்தது. அவதார குணங்களெல்லாம் அர்ச்சா ஸ்தலங்களிலே பரிபூர்ணமாயிருக்கையாலும், அவதார விக்ரஹங்களை அர்ச்சாரூபேண பலவிடங்களிலும் பரிக்ரஹித்துக் கொண்டிருக்கையாலும் (அதிலே தேங்கின மடுக்கள் போலே) என்கிறது.

**விளக்கம்** – "பூகதஜலம் போலே அந்தர்யாமித்வம்" – மிகுந்த தண்ணீர் தாகம் கொண்ட ஒருவனுக்குப் பருகுவதற்கான நீர் என்பது வேறு எங்கும் அலைய வேண்டியது இல்லாதபடி, அவன் உள்ள இடத்திலேயே இருக்கக்கூடும். ஆயினும் அந்த நீரானது தகுந்த ஆயுதங்கள் இன்றி எடுக்க இயலாதபடி, பூமிக்குள் மிகவும் ஆழத்தில் உள்ளதாக இருப்பது போன்று அந்தர்யாமி நிலையின் எளிமை உள்ளது. "எம்பெருமானைக் கண்டு

அவனைப் பற்றிக் கொள்ளவேண்டும்”, என்ற ஆசையுடன் கூடிய ஒருவனுக்கு, திருவாய்மொழி (7-2-3) – கட்கிலீ - என்று கூறுவது போன்று கண்களால் காண இயலாமல், அஷ்டாங்கயோகம் மூலம் மட்டுமே காணலாம்படியாக அந்தர்யாமி நிலை உள்ளது.

”ஆவரணஜலம் போலே பரத்வம்” – எம்பெருமானைக் கண்டு அவனைப் பற்றிக் கொள்ள வேண்டும் என்ற ஆசை கொண்ட ஒருவனுக்குத் திருநெடுந்தாண்டகம் (14) - அப்பால் முதலாய் நின்ற வளப்பரியவாரமுது – என்று கூறுவதற்கு ஏற்ப லீலாவிபூதிக்கு அப்பால் பரத்தவம் உள்ளது. ஆக தாகம் கொண்ட ஒருவனுக்கு இந்த அண்டத்தின் வெளியில் பரவி உள்ள ஆவரண நீர் போன்று பரத்த்வ நிலை உள்ளது.

”பாற்கடல் போலே வ்யூஹம்” – ஆவரண நீர் போன்று மிகவும் தூரத்தில் இல்லாமல் இந்த உலகில் உள்ளதாக இருந்தபோதிலும், தண்ணீர்த்தாகம் எடுத்தவன் சென்று பருக இயலாததாக உள்ள திருப்பாற்கடல் போன்று வ்யூஹம் உள்ளது. அவனைக் கண்களால் கண்டு பற்றவேண்டும் என்ற ஆசை கொண்ட ஒருவனுக்குப் பெரியதிருவந்தாதி (34) - பாலாழி நீ கிடக்கும் பண்பை யாங்கேட்டேயும் – என்று கூறுவது போன்று, கேட்டு ரசிக்கும்படி மட்டுமே வ்யூஹம் இருக்குமே அன்றிக் காண இயலாது.

”பெருக்காறு போலே விபவம்” – காணலாம்படி உள்ளபோதிலும், அந்தந்த காலங்களில் உள்ளவர்கள் மட்டுமே காணலாம்படியும் பருகலாம்படியும், மற்ற காலங்களில் உள்ளவர்களால் காண இயலாதபடியும், வெள்ளத்துடன் கூடிய ஆறு போன்று விபவம் உள்ளது. திருநெருந்தாண்டகம் (19) - மண் மீது உழல்வாய் - என்று கூறியபடி இந்தப் பூமியில் அவன் அவதரித்து, எங்கும் ஸஞ்சாரம் செய்தபோதிலும், அந்தக் காலத்தில் உள்ளவர்களுக்கு மட்டுமே அண்டத்தக்கதாக, மற்ற காலங்களில் உள்ளவர்களால் காண இயலாததாக விபவம் உள்ளது.

”தேங்கின மடுக்கள் போலே அர்ச்சாவதாரம்” - மேலே கூறியதைப் போன்று அல்லாமல், தாகம் தீரப் பருகவல்லபடி, பெரும்வெள்ளத்தில் இருந்து உண்டான சிறிய நீர் நிலைகள் போன்று அர்ச்சை உள்ளது. எம்பெருமானைக் கண்டு அவனைப் பற்றிக் கொள்ள வேண்டும் என்ற ஆசையுடன் கூடியவனுக்கு இடம், காலம், காரணம் ஆகிய மூன்றாலும்

மிகவும் எளிமையாகக் காட்சி கொடுத்து, கோவில்களில் மட்டும் அல்லாமல் வீடுகளிலும் அனைவரின் கண்களில் புலம்படும்படியாக இந்த நிலை உள்ளது. திருவாய்மொழி (6-9-5) – பின்னானார் வணங்கும் சோதி - என்றபடி உள்ளது அர்ச்சை ஆகும். ஸ்ரீரங்கராஜஸ்தவம் (74) – பௌமதிகேதநேஷ்வபி குடீகுஞ்ஜேஷு - இந்த உலகில் உள்ள கோயில்கள், அடியார்களின் வீடுகள் – என்பது போன்று, பல இடங்களிலும் இவன் அர்ச்சையில் எழுந்தருளியுள்ள நிலையை ஆராய்ந்தே இங்கு "மடுக்கள்" என்று பன்மையில் அருளிச்செய்தார். இவனது மற்ற அவதாரங்களின் திருக்கல்யாண குணங்கள் அனைத்தும் அர்ச்சையில் பரிபூர்ணமாக நிறைந்துள்ளது. மேலும் அவதாரங்களில் தான் எடுத்த திவ்யமான உருவங்களைப் பல இடங்களிலும் காண்பித்தபடி உள்ளான். எனவே இங்கு "அதிலே தேங்கின மடுக்கள் போலே" என்று அருளிச்செய்தார்.

40. இதுதான் சாஸ்த்ரங்களால் திருத்தவொண்ணாதே விஷயாந்தரங்களிலே மண்டி விமுகராய்ப் போரும் சேதநர்க்கு வைமுக்க்யத்தை மாற்றி ருசியை விளைக்கக்கடவதாய், ருசி பிறந்தாலுபாயமாய், உபாய பரிக்ரஹம் பண்ணினால் போக்யமுமாயிருக்கும்.

**அவதாரிகை** - இப்படி ஆச்ரணய ருசி பிறந்தார்க்கு ஆச்ரயணீயத்வே ஸுலபமாயிருக்குமளவேயன்று, ருசி ஜநகத்வாதிகளும் இவ்வர்ச்சாவதாரத்துக் குண்டென்று இதன் வைபவத்தையருளிச் செய்கிறார் மேல் (இதுதான்) என்று தொடங்கி.

**விளக்கம்** - இப்படியாக அர்ச்சாவதாரம் என்பது இவனை உபாயமாகப் பற்றிக் கொள்ளவேண்டும் என்ற ஆசை ஏற்பட்டவர்களுக்குப் பற்ற எளிதாக இருக்கவேண்டும் என்பதற்காக மட்டும் அல்ல, இவனைப் பற்ற வேண்டும் என்ற ருசியை உண்டாக்குவதும் அர்ச்சாவதாரமே என்னும் இதன் மேன்மையை இந்த சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - ப்ரக்ருதமான ஸௌலப்யாதி குணயோகத்தையுட்கொண்டு (இதுதான்) என்று பராமர்சிக்கிறார் (சாஸ்த்ரங்களால் திருத்தவொண்ணா மையாவது) ஹிதாநுசாஸநம் பண்ணுகிற ச்ருதி ஸ்ம்ருத்யாதி சாஸ்த்ரங்களானவை அருசி பிறக்கும்படி இதர விஷயங்களினுடைய தோஷாதிக்யத்தையும், ருசி பிறக்கும்படி பகவத் விஷயத்தினுடைய குணாதிக்யத்தையும் உபதேசித்தாலும், அவற்றால் இதர விஷயங்களை விட்டு இவ்விஷயத்தைப் பற்றும்படி பண்ணப் போகாமை

துர்வாஸநாபலம் உபதேசத்தை நிரர்த்தகமாக்கிவிடுமிறே; ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு யா புத்திர் பாவிதா நிருணாம், தாமேவ பஜதே ஜந்துருபதேசோ நிரர்த்தக: என்னக்கடவதிறே.

**விளக்கம்** - “இதுதான்” என்று கூறுவதன் மூலம் ஸௌலப்யம் உள்ளிட்ட பல திருக்கல்யாண குணங்களுடன் கூடிய அர்ச்சை உணர்த்தப்பட்டது. ”சாஸ்த்ரங்களால் திருத்தவொண்ணாதே” என்பதன் பொருள் – நமக்கு எது நன்மையோ அதனை மட்டுமே உபதேசிக்கும் வேதங்களும் ஸ்ம்ருதிகளும் நமக்கு உபதேசிப்பவை என்ன? இந்த உலக வாழ்வில் உள்ள குற்றங்களை நமக்கு விளக்கி உலக விஷயங்களின் மீது நமக்கு வெறுப்பு உண்டாக்கும்படிச் செய்வதும், ஸர்வேச்வரனின் திருக்கல்யாண குணங்களை நமக்கு உபதேசித்து அவன் மீது ஈடுபாடு உண்டாகும்படிச் செய்வதும் ஆகும். இவ்விதம் அவை செய்தாலும், நம்முடைய தீய வாஸனையின் பலன் காரணமாக நாம் இந்த உலக விஷயங்களைக் கைவிட்டு அவனை முழுவதுமாகப் பற்றும்படிச் செய்ய அவற்றால் இயலவில்லை என்னும்படியாக உள்ளது அல்லவோ? ஆக அவை செய்யும் உபதேசங்கள் வீணாகிவிடும் என்றாகிறது. ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு யா புத்திர் பாவிதா நிருணாம், தாமேவ பஜதே ஜந்துருபதேசோ நிரர்த்தக: - அவரவர்களின் பிறவி என்பதன் மூலம் மனிதர்களுக்கு எந்தவிதமான அறிவு தோன்றுகிறதோ அந்த அறிவையே அவர்கள் பெறுகின்றனர்; ஆகவே சாஸ்திரங்களின் உபதேசங்கள் பயனற்றதாகி விடுகிறது - என்றது காண்க.

**வ்யாக்யானம்** - (விஷயாந்தரங்களிலே மண்டி விமுகராய்ப்போருகையாவது) - சிலம்படியுருவிற் கருநெடுங்கண்ணார் திறந்தனாயறத்தையே மறந்து புலம்படிந்துண்ணும் போகமே பெருக்கி என்றும், சுரிகுழல் மடந்தையர் திறத்துக் காதலே மிகுத்துக் கண்டவா திரிந்து என்றும், மாதரார் கயற்கணென்னும் வலையுட்பட்டழுந்துவேனை என்றும் சொல்லுகிறபடியே இதர விஷயங்களிலே அத்யபிநிவிஷ்டராய், யாதானும் பற்றி நீங்கும் விரதத்தையேறிட்டுக் கொண்டு, பகவத் விஷயத்திலே முகம் வைக்கவிசையாதே வர்த்திக்கை; இப்படி போரும் சேதநர்க்கு, (வைமுக்க்யத்தை மாற்றி ருசியை விளைக்கையாவது) - போதரேயென்று சொல்லிப் புந்தியில் புகுந்து தன்பாலாதரம் பெருகவைத்தவழகன் என்கிறபடியே - ஸ்வஸௌந்தர்யாதிகளாலே சித்தாபஹாரம் பண்ணி, தன்னைக் காணவேண்டோமென்றிக்குமிருப்பைக் குலைத்து, கண்ட கண் மாறவைக்க மாட்டாதபடி பண்ணுகை. (ருசிபிறந்தாலுபாயமாகையாவது) இப்படி தன்

வைலக்ஷண்ய தர்சநத்தாலே தன்னை நித்யாநுபவம் பண்ணப் பெறவேணுமென்னும் ருசி பிறந்தவநந்தரம், ஆறெனக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய் என்கிறபடியே ஸம்ஸார நிவ்ருத்தி பூர்விகையான ஸ்வப்ராப்திக்குத் தானே ஸாதநமாகை. (உபாய பரிக்ரஹம் பண்ணினால் போக்யமுமாயிருக்கையாவது) - தன்னையுபாயமாகப் பரிக்ரஹித்தால், உபேயஸித்திக்கொரு தேச விசேஷத்திலே போமளவும் பார்த்திருக்க வேண்டாதே அணியரங்கனென்னமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே என்றும், எனக்குத் தேனே பாலே கன்னலேயமுதே திருமாலிருஞ்சோலைக் கோனே என்றுஞ் சொல்லுகிறபடியே நிரதிசய போக்யமாயிருக்கையாலே தானே உபேயமுமாயிருக்கை.

**விளக்கம்** - "விஷயாந்தரங்களிலே மண்டி விமுகராய்ப்போரும்" என்பதன் பொருள்: பெரியதிருமொழி (1-6-2) – சிலம்படி யுருவிற் கருநெடுங்கண்ணார் திறந்தனாயறத்தையே மறந்து புலம்படிந்துண்ணும் போகமே பெருக்கி – என்றும், பெரியதிருமொழி (1-6-3) – சுரிகுழல் மடந்தையர் திறத்துக் காதலே மிகுத்துக் கண்டவா திரிந்து – என்றும், திருமாலை (16) - மாதரார் கயற்கணென்னும் வலையுட்பட்டழுந்துவேனை – என்றும் கூறுவது போன்று, மற்ற விஷயங்களில் பற்றுதல் அதிகமாகவே உள்ளது. திருவிருத்தம் (95) – யாதானும் பற்றி நீங்கும் விரதம் – என்பதற்கு ஏற்ப இல்லாமல், எம்பெருமானிடம் விருப்பம் வைக்க எண்ணாமல் இருத்தல் – என்பதாகும்.

இப்படியாக உள்ள சேதநர்கள் குறித்து "வைமுக்க்யத்தை மாற்றி ருசியை விளைக்கக் கடவதாய்" என்பதன் பொருள் என்ன? திருமாலை (16) – போதரேயென்று சொல்லிப் புந்தியில் புகுந்து தன்பாலாதரம் பெருகவைத்தவழகன் – என்று கூறுவது போன்று தனது அழகு போன்ற பலவற்றையும் காண்பித்து, இவர்கள் மனத்தினைத் தன்பால் கவர்கிறான். பின்னர் அவர்களிடம் உள்ள "தன்னைக் காணவேண்டாம்" என்று சிந்தனையை மாற்றுகிறான். அத்துடன் நில்லாமல் தன்னைக் கண்ட கண்கள் தன்னை விட்டு அகலாமல் செய்துவிடுகிறான்.

"ருசிபிறந்தாலுபாயமாய்" என்பதன் பொருள்: இப்படியாகத் தன்னைக் கண்டதால், தனது அழகு காரணமாகத் தன்னையே எப்போதும் அனுபவித்துக்கொண்டு இருக்கவேண்டும் என்ற ருசியை ஏற்படுத்துகிறான். அதன் பின்னர் திருவாய்மொழி (5-7-10) – ஆறெனக்கு

நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய் – என்பதற்கு ஏற்ப இந்த உலக வாழ்வைக் கைவிடுவது தொடக்கமாகத் தன்னை அடைவதற்குத் தானே சாதனமாக உள்ள நிலையை உணர்த்துகிறான்.

“உபாய பரிக்ரஹம் பண்ணினால் போக்யமுமாயிருக்கையாவது” என்பதன் பொருள்: தன்னையே உபாயமாகப் பற்றிக் கொண்டால் போதுமானது, மோக்ஷம் என்ற பலன் கிட்ட வேறு எந்த இடத்திற்கும் செல்லவேண்டாம் என்பதை உணர்த்துகிறான். அமலனாதிப்பிரான் (10) – அணியரங்கனென்னமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே – என்றும், திருவாய்மொழி (10-7-2) - எனக்குத் தேனே பாலே கன்னலேயமுதே திருமாலிருஞ்சோலைக் கோனே – என்றும் கூறுவது போன்று எல்லையற்ற இனிமையான பொருளாகத் தான் உள்ளதால், தானே அடைய வேண்டிய பொருளாகவும் உள்ளதை உணர்த்துகிறான்.

**வ்யாக்யானம்** – ஆக, ப்ரபத்திக்கு குணபூர்த்தியுள்ளவிடமே விஷயமாக வேணுமென்றும், அதுதானுள்ளது அர்ச்சாவதாரத்திலேயென்றும் அத்தைப் பற்ற ஆழ்வார்களெல்லாரும் ப்ரபத்தி பண்ணிற்று இவ்விஷயத்திலேயென்றும், இவ்விஷயத்திலேயெல்லா குணங்களும் புஷ்கலங்களென்றும், விசேஷித்து ப்ரபத்திக்கபேக்ஷித குணங்கள் விசதமாக ப்ரகாசிப்பதிங்கேயென்றும், இதுதான் தன்னுடைய நைரபேக்ஷ்யாதிகளையழிய மாறி தன்னையநாதரிப்பாரையாதரித்துக்கொண்டு நிற்கிற ஸ்தலமென்றும், பரத்வாதிகள் ஓரொரு ப்ரகாரத்திலே துர்லபம், இது ஸர்வப்ரகார ஸுலபமென்றும், இவ்வளவேயன்று, இவ்விஷயம் ருசிஜநகமுமாய் உபாயோபேயமாயிருக்குமென்றும் சொல்லப்பட்டது.

**விளக்கம்** – ஆகவே இங்கு உணர்த்தப்படுவது என்னவென்றால்

- ப்ரபத்திக்குச் சிறந்த திருக்கல்யாண குணங்கள் நிறைந்த ஒரு பொருளே இலக்காக இருத்தல் வேண்டும்
- இப்படிப்பட்ட குணங்கள் உள்ள இடம் அர்ச்சாவதாரம்

- இதன் காரணமாகவே ஆழ்வார்கள் அனைவரும் அர்ச்சாவதாரத்திலேயே ப்ரபத்தி செய்தனர்

- எம்பெருமானின் அனைத்து குணங்களும் பரிபூர்ணமாக உள்ளது இத்தகைய அர்ச்சாவதாரத்தில் மட்டுமே ஆகும்

- ப்ரபத்திக்கு இன்றியமையாத குணங்கள் அனைத்தும் விசேஷமாகவும் தெளிவாகவும் வெளிப்படுவது இத்தகைய அர்ச்சாவதாரத்தில் மட்டுமே ஆகும்

- இத்தகைய அர்ச்சாவதாரம் என்பது எம்பெருமானின் குணத்தையே மாற்றுவதாக உள்ளது. எப்படி? "தான் எந்த ஒரு பொருளையும் விரும்பாதவன்" என்றபடி உள்ள எம்பெருமானின் நிலையை அழித்து, தன்னை விரும்பாதவர்களையும் தான் விரும்பி நிற்கும் விதமாக அர்ச்சாவதாரம் உள்ளது

- பரத்வம் போன்ற மற்ற நான்கு நிலைகளும் ஒவ்வொரு முறையால் பற்றுவதற்கு மிகவும் கடிமையானவை ஆகும். ஆனால், அனைத்து விதங்களிலும் பற்றுவதற்கு அர்ச்சையே எளிதாக உள்ளது.

- இது மட்டுமே அல்ல. எம்பெருமான் மீது ருசியை உண்டாக்கவல்லதாகவும், உபாயம் மற்றும் உபேயமாக உள்ளதாகவும் அர்ச்சை இருக்கிறது.

**வ்யாக்யானம்** – இத்தால், உபாயோபேயங்களிரண்டும் தானேயாய், ஸ்வேதர விஷய விரக்தி பூர்வகமாக ஸ்வவிஷயருசியை ஜநிப்பிக்குமதாய், ஸர்வ ஸுலபமாய், தன் படிகளையழிய மாறிக்கொண்டு தன்னையநாதரிப்பாரை யுமாதரிக்குமதாய், ப்ரபத்த்யபேக்ஷித குணோஜ்ஜ்வலமாய், ஸமஸ்தகுண ஸம்பூர்ணமாய், ப்ரபந்நஜந கூடஸ்த்தர்க்கு உபாயவரண விஷயமாயிருந்துள்ள அர்ச்சாவதாரமே ப்ரபத்திக்கு நியத விஷயமென்றதாய்த்து.

**விளக்கம்** – ஆகவே அர்ச்சாவதாரம் என்பதே ப்ரபத்திக்கு ஏற்ற விஷயமாக உள்ளது என்பதைப் பின்வரும் காரணங்களால் அறியலாம்

- உபாய உபேயங்களாக அர்ச்சையே உள்ளது
- மற்ற விஷயங்களில் வெறுப்பு தோன்றும்படியும், தன் விஷயத்தில் ருசி உண்டாகும் படியும் செய்கிறது.
- அனைத்து விதங்களிலும் பற்றுவதற்குச் சுலபமாக உள்ளது
- தனது விருப்புவெறுப்புகளை மாற்றி அமைத்துக் கொண்டு, தன்னை விரும்பாதவர்களையும் தான் விரும்பியபடி உள்ளது
- ப்ரபத்திக்கு ஏற்ற குணங்கள் அனைத்தும் ஒன்றாக வெளிப்படும்படியாக உள்ளது
- அனைத்து குணங்களையும் பரிபூர்ணமாகக் கொண்டது
- ப்ரபந்நஜந கூடஸ்த்தர்கள் எனப்படும் ப்ரபத்தியில் ருசியுள்ளவர்கள், உபாயமாகப் பற்றுவதற்கு ஏற்றதாக உள்ளது.

41. இதில் ப்ரபத்தி பண்ணுமதிகாரிகள் மூவர்.

**அவதாரிகை** – "ப்ரபத்திக்கு தேச நியமம்" என்று தொடங்கி இவ்வளவும் – உபாய வரணாத்மிகையான ப்ரபத்தியினுடைய தேச காலாதி நியமாபாவமும் விஷய நியமமும் தர்சிப்பிக்கப்பட்டது; இப்படி விஷய விசேஷத்தை தர்சிப்பித்தவநந்தரம் பகவச்சாஸ்த்ராதி ஸித்தமான அதிகாரி விசேஷங்களையும் ப்ரகாசிப்பிக்க வேணுமென்று திருவுள்ளம் பற்றி அதிகாரி விசேஷத்தையருளிச்செய்கிறார் "இதில் ப்ரபத்தி பண்ணுமதிகாரிகள் மூவர்" என்று.

**விளக்கம்** – "ப்ரபத்திக்கு தேச நியமம்" என்று தொடங்கும் 23-வது சூர்ணை தொடங்கி இதுவரை உள்ள சூர்ணைகளில் ஸர்வேச்வரனை உபாயமாகப் பற்றுதல் என்னும் ப்ரபத்திக்கு தேசம், காலம் போன்ற நியமங்கள் இல்லை என்றும், உபாயமாகப்

பற்றப்படும் பொருளின் நியமமும் கூறப்பட்டன. இப்படியாக ப்ரபத்திக்கு விஷயமாக உள்ள வஸ்துவின் மேன்மைகளைக் கூரிய பின்னர், பாஞ்சராத்ரம் உள்ளிட்ட பல சாஸ்த்ரங்களில் கூறப்பட்டுள்ள அதிகாரிகளின் விசேஷங்கள் யாவை என்று விளக்க வேண்டும் எனத் திருவுள்ளம் கொண்டார். இந்தச் சூர்ணையில் அதிகாரிகளின் விசேஷத்தை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஸௌலப்யாதி குணபூர்த்தியாலே ப்ரபத்திக்கு நியத விஷயமான இவ்வர்ச்சாவதாரத்தில் ப்ரபத்தி பண்ணுமதிகாரிகள் ப்ரபதந ஹேது பேதத்தாலே மூன்று வகைப்பட்டிருப்பர்களென்கை.

**விளக்கம்** – "இதில் ப்ரபத்தி பண்ணுமதிகாரிகள் மூவர்" என்பதன் மூலம் ஸௌலப்யம் உள்ளிட்ட பல திருக்கல்யாண குணங்கள் பரிபூர்ணமாக உள்ளதால் ப்ரபத்திக்கு விஷயமாக உள்ள அர்ச்சாவதாரம் கூறப்பட்டது. இந்த அர்ச்சையில் ப்ரபத்தி செய்யும் அதிகாரிகள், தாங்கள் ப்ரபத்தி செய்வதற்கான காரணங்கள் வேறுபடுவதால், மூன்று வகைப்பட்டிருப்பார்கள் .

42. அஜ்ஞரும், ஜ்ஞாநாதிகரும், பக்திபரவசரும்.

**அவதாரிகை** - அவர்களாரென்றுமபேக்ஷையிலேயருளிச் செய்கிறார்.

**விளக்கம்** – அந்த அதிகாரிகள் யாவர் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – "அஜ்ஞராகிறார்" பகவல்லாபத்துக்கு உறுப்பாக ஸாதநாநுஷ்டாநம் பண்ணுகைக்கீடான ஜ்ஞாநமிலாதவர்கள். அஜ்ஞாநம் அசக்திக்குமுபலக்ஷணம். "ப்ராபகாந்தர பரித்யாகத்துக்கு மஜ்ஞாநாசக்திகளன்று" என்று மேலேயிவர் தானே அருளிச்செய்கிறாரிறே. "ஜ்ஞாநதிகராகிறார்" ஜ்ஞாந சக்திகள் உண்டாயிருக்கச் செய்தேயும், பகவதத்யந்த பரதந்த்ரமான ஸ்வரூப யாதாத்ம்ய தர்சநத்தாலே, உபாயாந்தரங்கள் ஸ்வரூப விருத்தமென்று பரித்யஜிக்கைக்கீடான ஜ்ஞாந பூர்த்தி யுடையவர்கள். "பக்தி பரவசராகிறார்" ஒன்றையுமடைவுபட வநுஷ்டக்க க்ஷமரல்லாதபடி பகவத் ப்ரேமாதிசயத்தாலே சிதிலகரணரா யிருக்குமவர்கள்.

**விளக்கம்** – “அஜ்ஞராகிறார்” – எம்பெருமானை அடைவதற்கான உறுப்பாக உள்ள சாதனங்கள் எதனையும் கைக்கொள்ளத் தகுதியான ஞானம் இல்லாதவர்கள் ஆவர். அறிவில்லாமல் உள்ளனர் என்பதன் மூலம், ஆற்றல் இல்லாமலும் உள்ளனர் என்பது மறைமுகமாக உணர்த்தப்பட்டது. ”ப்ராபகாந்தர பரித்யாகத்துக்கு மஜ்ஞாநாசக்திகளன்று” என்று இவரே சூர்ணை 115-ல் அருளிச் செய்ய உள்ளார். “ஜ்ஞாநாதிகர்” – ஞானம் மற்றும் சக்தி ஆகியவற்றைக் கொண்டவர்கள்; ஆயினும் தங்களது ஆத்மா தன்னைக் காப்பாற்றிக் கொள்ள எந்தவிதமான திறனும் அற்றது என்றும், பகவானால் மட்டுமே காப்பாற்ற இயலும் என்றும் அறிந்தவர்கள்; இப்படியாக ஆத்மாவின் ஸ்வரூபத்தை அறிந்தவர்கள்; ஆகவே மற்ற உபாயங்கள் அனைத்தும் ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு விரோதமாக உள்ளவை என்று அறிந்ததால், அவற்றைக் கைவிடுவதற்கு ஏற்ற ஞானத்தைப் பூர்ணமாகக் கொண்டவர்கள் ஆவர். ”பக்தி பரவசராகிறார்” – எதனையும் தாங்களாகவே செய்யும் ஆற்றலைக் கொள்ளாமல், ஸர்வேச்வரனிடம் உண்டான ப்ரேமை காரணமாக, தங்களது செயல் மற்றும் சித்தம் போன்ற அனைத்தையும் அவனிடம் இழந்து நிற்பார்கள்.

43. அஜ்ஞாநத்தாலே ப்ரபந்நர் அஸ்மதாதிகள்; ஜ்ஞாநாதிக்யத்தாலே ப்ரபந்நர் பூர்வாசார்யர்கள்; பக்திபாரவச்யத்தாலே ப்ரபந்நர் ஆழ்வார்கள்.

**அவதாரிகை** - இப்படியிவ்வஜ்ஞாநாதிகளடியாக ப்ரபத்தி பண்ணினவர்களின்னாரென்னுமிடம் காணலாமிடமுண்டோவென்னுமாகாங்க்ஷையிலே யருளிச் செய்கிறார் ”அஜ்ஞாநத்தாலே” என்று தொடங்கி.

**விளக்கம்** - இப்படியாக அஜ்ஞானம் தொடக்கமாக உள்ள மூன்று விதத்தினர் (ப்ரபத்தி செய்தவர்கள்) இவர்கள், இவர்கள் என்று எங்கு காணலாம் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அஜ்ஞாநத்தாலே ப்ரபந்நர் என்றது, இதரோபாயாநுஷ்டாநத்தி லிழிகைக்கீடான ஜ்ஞாநாதிகள் முதலிலே யில்லாமையாலே அநந்யகதிகளாய்க் கொண்டு பகவத் விஷயத்திலே பரந்யாஸம் பண்ணினவர்களென்றபடி. (அஸ்மதாதிகள்) என்று – ஸ்வநைச்யாநுஸந்தாநத்தாலே மந்தாதிகாரிகளோடே தம்மையும் கூட்டி யருளிச் செய்கிறார். (ஜ்ஞாநாதிக்யத்தாலே ப்ரபந்நர்) என்றது - உபாயாந்தரங்கள் ஸ்வரூபநாசக

மென்று நடுங்கும்படியான ஸ்வரூபயாதாத்ம்ய தர்சநத்தாலே வந்த ஜ்ஞாந பூர்த்தியாலே அநந்ய கதிகளாய்க் கொண்டு, ஸ்வரூபாநுரூபமாக பகவதி ந்யஸ்தபரரானவர்க ளென்றபடி. (பூர்வாசார்யர்களாகிறார்) நாத யாமுந யதிவராதிகள். (பக்தி பாரவச்யத்தாலே ப்ரபந்நர்) என்றது – பகவத்ப்ரேம பௌஷ்கல்யத்தாலே "காலாழும் நெஞ்சழியும் கண் சுழலும்" என்றும், "இட்டகாலிட்டகை" என்றுஞ் சொல்லுகிறபடியே சிதிலகரணரா யிருக்கையாலே, ஸாதநாநுஷ்டாநத்துக்கு ஆளன்றிக்கே அநந்யகதிகளாய்க் கொண்டு அவன் பக்கலிலே பரஸமர்ப்பணம் பண்ணினவர்களென்றபடி. பக்தி பரவசர்க்கு ஸாதநாநுஷ்டாநம் பண்ணப் போகாதென்னுமிடம் "உன்னைக் காணுமவாவில் வீழ்ந்து நானெங்குற்றேனு மல்லேன்" என்றும், "என் கொள்வன்" என்கிற பாட்டிலும் ஆழ்வார் ஸுஸ்பஷ்டமாக வருளிச்செய்தாரிறே.

**விளக்கம்** - "அஜ்ஞாநத்தாலே ப்ரபந்நர்" என்பதன் மூலம், மற்ற உபாயங்களைக் கைக்கொள்வதில் ஞானம் இல்லாத காரணத்தினால், மற்ற புகலிடம் ஏதும் இல்லாமல், பகவானிடம் பரந்யாஸம் செய்தவர்கள் கூறப்பட்டனர். "அஸ்மதாதிகள்" என்பதன் மூலம், தன்னைத் தாழ்வாகவே எண்ணியபடி உள்ளதால் மற்ற அதிகாரிகளுடன் தன்னையும் சேர்த்துக் கொள்கிறார். "ஜ்ஞாநாதிக்யத்தாலே ப்ரபந்நர்" என்பதன் மூலம் மற்ற உபாயங்கள் அனைத்தும் ஆத்மாவின் ஸ்வரூபத்தை அழித்துவிடும் என்பதான நடுங்க வைக்கும் உண்மையை அறிந்தவர்கள்; இந்த உண்மையை உணர்ந்த காரணத்தினால் ஞானம் நிறையப் பெற்றவர்கள்; இதனால் வேறு புகலிடம் தங்களுக்கு இல்லை என்று உணர்ந்து, தங்களது ஆத்ம ஸ்வரூபத்திற்கு ஏற்றபடி எம்பெருமானிடமே தங்களது பாரத்தை வைத்தவர்கள். "பூர்வாசார்யார்கள்" என்பது ஸ்வாமி நாதமுனிகள், ஸ்வாமி ஆளவந்தார், ஸ்வாமி எம்பெருமானார் போன்றவர்கள் ஆவர். "பக்தி பாரவச்யத்தாலே ப்ரபந்நர்" என்பதன் மூலம் எம்பெருமானிடம் கொண்ட ப்ரேமையின் பூர்ணம் காரணமாக பெரியதிருவந்தாதி (34) – காலாழும் நெஞ்சழியும் கண் சுழலும் – என்றும், திருவாய்மொழி (7-2-4) - இட்டகாலிட்டகை – என்றும் கூறுவது போன்று தங்களது உறுப்புக்கள் என்ன செய்கின்றன என்பதே தெரியாமல் உள்ளவர்கள்; இதனால் ஒரு குறிப்பிட்ட உபாயத்தைக் கைக்கொள்ளாமல், வேறு புகலிடம் இல்லாமல், அவனிடம் மட்டுமே சென்று பரஸமர்ப்பணம் செய்தவர்கள் ஆவர். பக்தி மற்றும் ப்ரேமை ஆகியவற்றின் காரணமாக எந்த ஒரு சாதனத்தையும் கைக்கொள்ளாமல் உள்ள நிலை ஏற்படும் என்பதைத் திருவாய்மொழி (5-7-2) – உன்னைக் காணுமவாவில் வீழ்ந்து நானெங்குற்றேனு மல்லேன்

– என்றும், திருவாய்மொழி (5-1-4) – என் கொள்வன் - என்றும் கூறியதன் மூலம் ஆழ்வார் தெளிவாக உணர்த்தினார் அல்லவோ?

44. இப்படி சொல்லுகிறதும் ஊற்றத்தைப் பற்ற.

**அவதாரிகை** - இப்படி அஜ்ஞாநாதிகளோரொன்றே யிவர்களுக்கு ப்ரபதந ஹேதுவாகச் சொல்லுகைக்கு மூலமின்ன தென்கிறார் (இப்படி என்று தொடங்கி).

**விளக்கம்** - இப்படியாக அஜ்ஞாநம் போன்ற மூன்றுக்குள் ஏதேனும் ஒன்று மட்டுமே ஒருவரின் ப்ரபத்திக்குக் காரணம் என்று கூறுவதன் மூலகாரணம் எது என்பதை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது அஜ்ஞாநாசக்திகளும் ஸ்வரூபயாதாத்ம்ய ஜ்ஞாநமும் பகவத் பக்தியுமாகிறவிவை மூன்றிலும், மூவர்க்கு மந்வய முண்டாயிருக்கச்செய்தே, ஓரொன்றே யிவர்களுக்கு ப்ரபதந ஹேதுவாகச் சொல்லுகிறதும் இவற்றில் ஒரொன்றே இவ்வதிகாரிகள் பக்க லுறைத்திருக்கையாலே யென்கை.

**விளக்கம்** - அஜ்ஞானம், ஆற்றல் இல்லாமல் இருத்தல்; ஆத்மாவின் ஸ்வரூபத்தை உள்ளபடி அறிகின்ற ஞானம்; பகவத் ப்ரேமை ஆகிய மூன்றிலும் மூன்று விதமான அதிகாரிகளுக்குத் தொடர்பு இருக்கலாம். ஆயினும் இவற்றில் ஏதோ ஒன்று மட்டுமே இவர்களது ப்ரபத்திக்குக் காரணமாக இருக்கும். இந்த மூன்றில் ஏதேனும் ஒன்று மட்டுமே ஒவ்வொருவரிடமும் உறைந்திருக்கும்.

**வ்யாக்யானம்** – இத்தால், முற்பட்டவர்கள் பக்கல் ஜ்ஞாந பக்திகளிரண்டும் குறைந்து அஜ்ஞாநமே விஞ்சியிருக்கும்; நடுவிலவர்கள் பக்கல், அஜ்ஞாந மல்பமாய் பக்தியுமளவு பட்டு ஜ்ஞாநமே விஞ்சியிருக்கும்; பிற்பட்டவர்கள் பக்கல், அஜ்ஞாநம் அத்யல்பமாய் ஸ்வரூப ஜ்ஞாநமுங் குறைவற்றிருக்கச்செய்தே, ப்ரேமமே கரைபுரண்டிருக்கும்; ஆகையால், எல்லா மெல்லார் பக்கலிலுமுண்டேயாகிலும் அல்பங்களானவை கிடக்கச்செய்தே அதிகமானதுவே அவ்வவர்க்கு ப்ரபதந ஹேதுவாமென்றதாய்த்து. இந்த யோஜநைக்கொரு குறையுண்டு. மயர்வற மதிநலம் பெற்ற ஆழ்வார்களுக்கும் அஜ்ஞானம்

சிறிது கிடக்கிறதுண்டென்று கொள்ள வேண்டி வருகையாலே, ஆனால் செய்வதென்னென்னில், (ஊற்றத்தைப் பற்ற) என்கிறவித்தை அநுஸந்தாந பரமாக்கி யோஜிக்குமளவி லிவ்விரோதமில்லை; அப்போது (இப்படி) இத்யாதிக்கு - அஜ்ஞாநாசக்திகளும் ஸ்வரூபயாதாத்ம்ய ஜ்ஞாநமும் பகவத் பக்தியுமாகிற இம் மூன்றினுடையவு மநுஸந்தாநம் மூவர்க்கு மேதேனுமொருபடி யுண்டாயிருக்கச் செய்தே ஓரொன்றே யிவ்வதிகாரிகளுக்கு ப்ரபதந ஹேதுவாகச் சொல்லுகிறதும் இவற்றி லோரொன்றிலே யிவ்வதிகாரிகளுக் கூற்றமாகையாலே யென்று பொருளாகக்கடவது. அதாவது, அநந்யகதிகளாய் ப்ரபந்நராகைக்குடலான அஜ்ஞாநாதி த்ரயாநுஸந்தாநமும் மூவர்க்கு முண்டானாலும், மூன்றிலும் வைத்துக்கொண்டு ப்ரசுரமானதே தந்தாமுக் கநந்யகதிகளாய் ப்ரபத்தியிலிழிகைக்கு ஹேதுவாக வநுஸந்தித் திருக்கையாலே யென்றபடி. இதில் ப்ரதமாதிகாரிகளுக்கு அஜ்ஞாநாநுஸந்தாநம் ஸ்வரஸம்; நடுவு சொன்னவர்களுக்கு, ப்ராமணிகராகையாலே அஜ்ஞாநத்தினுடைய ஸவாஸந நிவ்ருத்தி கூடாமையால், அஜ்ஞாநாநு ஸந்தாநம் கூடும்; பிற்பட்டவர்கள் மயர்வற மதிநலம் பெற்றவர்களாகையாலே அஜ்ஞாநாநுஸந்தாநம் நைச்ய நிபந்தநமா மித்தனை.

**விளக்கம்** - இதன் காரணாமாக முதல் வகையைச் சார்ந்தவர்களிடம் (அஜ்ஞானம் உள்ளவர்கள், சக்தி அற்றவர்கள்) ஞானம் மற்றும் பக்தி என்பது குறைவாக இருந்து அறியாமை மட்டுமே அதிகமாகக் காணப்படும். இரண்டாவது வகையைச் சார்ந்தவர்களிடம் (ஞானம் உள்ளவர்கள்) அறியாமை குறைவாகவும், பக்தி என்பது அளவுடன் காணப்பட்டு, ஞானமே அதிகமாக இருக்கும். மூன்றாவது வகையைச் சார்ந்தவர்களிடம் (பக்தி உள்ளவர்கள்) அறியாமை என்பது முகவும் குறைவாகவும், ஞானம் சற்றே குறைவாகவும், பக்தி என்பது கரைபுரண்டு ஓடும்படியும் காணப்படும். ஆகவே மூவரிடத்திலும் மூன்றும் உள்ளது என்றாலும், அவர்களிடம் எது குறைவாக உள்ளனவோ அவற்றைத் தள்ளி, அதிகமாக உள்ளதை மட்டுமே ப்ரபத்தியின் காரணமாக அருளிச்செய்தார்.

இப்படி நாம் பொருள் கொண்டால் சிறு தோஷம் இதில் உண்டு. மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்களுக்கும் சற்று அறியாமை உள்ளது என்றாகிவிடும். ஆகவே இப்படிச் சமாதனம் அருளப்பட்டது. அதாவது, அவர்களிடம் மிகுதியாக என்ன உள்ளது என்பதைப் பற்றி மட்டுமே எண்ணும்போது, மேலே கூறப்பட்ட தோஷம் உண்டாகாது.

ஆகவே இந்தச் சூர்ணைக்கு எவ்விதம் பொருள் கொள்ளவேண்டும் என்றால் - அறியாமை, ஆத்மஞானம், பகவத் பக்தி ஆகிய மூன்றின் நினைவும் முன்று விதமான அதிகாரிகளுக்கு ஏதேனும் ஒன்று அதிகமாகவும் மற்றவை குறைவாகவும் இருக்கும்; அந்த ஒன்று மட்டுமே இவர்களின் ப்ரபத்திக்குக் காரணமாக ஏன் கூறப்படுகிறது என்றால், அந்த ஒன்றில் மட்டுமே அந்தந்த அதிகாரிகளுக்கு மிகுந்த ஈடுபாடும் சிந்தனையும் உள்ளதால் ஆகும். அதாவது மற்ற புகலிடம் இல்லாமல் உள்ள ப்ரபந்நர்கள் என்பதற்கு இன்றியமையாத தன்மைகளான அறியாமை, ஆத்மஞானம், பகவத் பக்தி ஆகிய மூன்றுமே மூன்று விதமான அதிகாரிகளுக்கு உண்டு; ஆனால் இந்த மூன்றில் ஏதோ ஒன்று மட்டுமே அவர்கள் வேறு புகலிடம் இல்லாமல் பகவானிடம் ப்ரபத்தி செய்வதற்குக் காரணமாக அதிக நினைவுடன் எண்ணும்படி உள்ளது. இங்கு முதல் வகையைச் சார்ந்தவர்களுக்கு அறியாமையை எண்ணுதல் பொருந்தும்; இரண்டாம் வகையைச் சார்ந்தவர்களுக்கு ப்ரமாணங்கள் மூலமாக பொருள் உணர்பவர்கள் என்பதால் அறியாமையின் வாசனை அடியுடன் நீங்குதல் என்பது இல்லாமையால் அறியாமையை எண்ணக்கூடும்; மூன்றாம் வகையைச் சார்ந்தவர்கள் மயர்வற மதிநலம் அருளப்பெற்றவர்கள் என்பதால் அறியாமை உள்ளதாக எண்ணுதல், தாங்கள் வேறு புகல் இல்லாதவர்கள் என்று எண்ணுதல், இதனால் தங்களைத் தாழ்வாக எண்ணுவதற்குக் காரணமாகி விடுகின்றன.

45. இம்மூன்றும் மூன்று தத்வத்தையும் பற்றி வரும்.

**அவதாரிகை** - இவ்வஜ்ஞாநாதி த்ரயத்துக்கு காரணமின்னதென்கிறார் (இம்மூன்றும்) என்று தொடங்கி.

**விளக்கம்** – இப்படியாக உள்ள மூன்றுக்கும் (அறியாமை, ஆத்மஞானம், பக்தி) என்ன காரணங்கள் என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – "மூன்று தத்வத்தையும் பற்றி வரும்" என்றது – ஸாதநாநுஷ்டாநத்தில் அஜ்ஞாநாசக்திகளுக்கு மூலம் கர்ம நிபந்தநமான அசித் ஸம்பந்தமாகையாலே, அஜ்ஞாநம் அசித்தத்வத்தைப் பற்றிவரும்; இதர ஸாதநங்கள் ஸ்வரூப விருத்தமென்று பரித்யஜிக்கைக் குடலான ஜ்ஞாந பூர்த்திக்கடி மத்யம பதத்தில் சொல்லுகிற ஆத்ம ஸ்வரூப யாதாத்ம்ய தர்சநமாகையாலே, ஜ்ஞாநாதிக்யம் ஆத்மதத்வத்தைப் பற்றி வரும்; ஒன்றையுமடைவுபட

அநுஷ்டிக்கமாட்டாதபடி கரணசைதில்யத்தைப் பண்ணும் பக்திவிவ்ருத்திக்குக் காரணம் "காதல் கடல் புரைய விளைவித்த காரமர்மேனி" என்னும் பகவத் விக்ரஹ வைலக்ஷண்யமாகையாலே பக்தி பாரவச்யம் பகவத் தத்வத்தைப் பற்றி வருமென்றபடி.

**விளக்கம்** – மற்ற சாதனங்களில் ஈடுபடுவதில் உள்ள அறியாமை மற்றும் ஆற்றல் அற்ற தன்மை ஆகியவற்றுக்கு மூலகாரணம் என்னவென்றால் – கர்மத்தின் தொடர்பினால் உண்டான சரீர ஸம்பந்தம் ஆகும். ஆகவே அறியாமை என்பது சரீர தத்வதைப் பற்றியே உண்டாகும். மற்ற சாதனங்கள் அனைத்தும் ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு முரண்பட்டே உள்ளன என்று உணர்ந்து, அவற்றை விலக்குதல் என்பது ஞானத்தின் அடிப்படையாகும்.

இத்தகைய ஞானம் பூர்ணமாக விளைவதற்கு அடிப்படை என்னவென்றால், நம: என்ற பதம் மூலம் உணர்த்தப்படும் ஆத்மாவின் தன்மையை உள்ளது உள்ளபடி அறிதலே ஆகும். ஆகவே ஞானத்தின் மேன்மை என்பது ஆத்மாவைப் பற்றியே உண்டாகும். மற்ற எதனையும் முழுமையாகச் செய்ய இயலாதபடி, உடல் உறுப்புக்கள் அனைத்தையும் குலைந்து போகும்படிச் செய்வது பக்தியாகும். இதற்குக் காரணம் திருவாய்மொழி (5-3-4) – காதல் கடல் புரைய விளைவித்த காரமர்மேனி - என்று கூறுவதற்கு ஏற்ப உள்ள எம்பெருமானின் திருமேனி அழகு ஆகும். ஆகவே பக்தி மூலம் பரவசம் கொண்ட நிலை என்பது எம்பெருமான் என்ற தத்துவதைப் பற்றியே நிற்கும்.

46. "என்னான் செய்கேன்" என்கிறவிடத்தில் இம்மூன்றுமுண்டு.

**அவதாரிகை** - அதிகாரி த்ரயத்துக்கும் அஜ்ஞாநாதி த்ரயத்திலுமந்வய முண்டாயிருக்க, ஓரொன்றே ப்ரபதந ஹேதுவாகச் சொல்லுகிறது "ஊற்றத்தப் பற்ற" என்றிறே சொல்லிற்று; இப்படி ஏகாதிகாரி பக்கலிலே இம்முன்று முண்டென்னு மிடங்காணாலாமிட முண்டோவென்ன வருளிச்செய்கிறார் "என்னான்" என்று தொடங்கி.

**விளக்கம்** – மூன்று வகையான அதிகாரிகளுக்கும் இந்த மூன்று விஷயங்களிலும் தொடர்பு உள்ளபோது, இவற்றில் ஏதேனும் ஒன்று மட்டுமே அந்தந்த அதிகாரிகள் ப்ரபத்தியில் ஈடுபடக் காரணம் என்பதாக அல்லவோ சூர்ணை 44-ல் கூறப்பட்டது? ஒரு

அதிகாரியிடமே இப்படியாக மூன்றையும் காண இயலுமோ என்ற கேள்விக்கு விடை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, எம்பெருமான் தம்முடைய ஆர்த்தி கண்டிரங்கக் காணாமையாலே தன்னைப் பெறுமிடத்தில் சில ஸாதநாநுஷ்டாநம் பண்ணவேணுமென்றிருந்தானாகக் கொண்டு, உபாயாந்தராநுஷ்டாநத்துக்கு யோக்யதை யில்லாதபடி அஜ்ஞனான நான் என் செய்கேன்; ஜ்ஞாநம் தந்தோமே என்னில், நீ தந்த ஜ்ஞாநத்தாலே ஸ்வருப பாரதந்த்ர்யத்தை யுணர்ந்து ஸாதநாநுஷ்டாநம் அப்ராப்த மென்றிருக்கிற நானென் செய்கேன்; ஸ்வரூபத்துக்கு சேராதாகிலும் உன்னை பெறலாமாகில் இது தன்னை அநுஷ்டிக்கலாய்த்திறே ஜ்ஞாந மாத்ரத்தைத் தந்தாயாகில், பக்திரூபாபந்ந ஜ்ஞாநத்தைத் தருகையாலே ஒன்றையுமடைவுபட அநுஷ்டிக்க க்ஷமனல்லாதபடி பக்தி பரவசனான நானென் செய்கேன் என்று இம்மூன்று மாழ்வார்க்கு விவக்ஷிதமாகையாலே அவ்விடத்திலே இம்மூன்று முண்டென்கை. ஆகையால் இவ்விடத்திலே காணலாமென்று கருத்து.

**விளக்கம்** - ஸர்வேச்வரன் தனது துன்பமான நிலையைக் கண்டு சற்றும் இரங்காமல் உள்ளதால், “இவன் நம்மை அடைவதற்கு வேறு சில உபாயங்களையும் கைக்கொள்ள வேண்டும்”, என்று எம்பெருமான் எண்ணுவதாக ஒருவன் நினைக்கக்கூடும். அப்படி உள்ள மற்ற உபாயங்களைக் கைக்கொள்ளும் தகுதி தன்னிடம் இல்லை என்பதால், “நான் என்ன செய்வேன்” , என்று கூறக்கூடும். அப்போது அந்த அதிகாரி எம்பெருமானிடம், ”நீ எனக்கு அளித்த ஞானம் மூலமாக ஆத்மாவின் ஸ்வரூபத்தை அறிந்தேன். இதனால் ஆத்மவானது மற்ற யாருக்கும் வசப்பட்டது அல்ல, உனக்கு மட்டுமே வசப்பட்டது என்று ஆத்மாவின் பாரதந்த்ர்யத்தை உணர்ந்தேன். ஆகவே மற்ற உபாயங்களைக் கைக் கொள்வது எனது ஆத்மாவின் தகுதிக்கு ஏற்றது அல்ல என அறிந்த நான் என்ன செய்வது?”, என்று இருக்கலாம் (இது ஆத்மஞானம் பெற்ற நிலையாகும்). “அப்படியே மற்ற உபாயங்கள் ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு ஏற்புடையது அல்ல என்றாலும், உன்னை அடைவதற்கு அந்த உபாயங்கள் உதவும் என்றால், அவற்றைச் செய்வதற்கான தகுதியை நீயே எனக்கு அளிக்கக்கூடும். இப்படியாக பக்தியின் ரூபமாக உள்ள ஞானத்தை நீ அளிக்கலாம். இதன் காரணமாக வேறு ஒன்றிலும் முழுமையாக ஈடுபட இயலாதபடி பதியினால் கட்டுண்ட நான் என்ன செய்வேன்?”, என்று கூறலாம். இப்படியாக உள்ள

மூன்று சிந்தனைகளும் ஆழ்வாருக்கு உண்டு என்பதால், ஒருவரிடமே இந்த மூன்றையும் காணலாம் என்றாகிறது.

47. அங்கு ஒன்றைப் பற்றியிருக்கும்.

**அவதாரிகை** - ஆனாலிம்மூன்றும் அவ்விடத்தில் ப்ரபத்தி காரணமாகிறதோ வென்ன? ”அங்கொன்றைப் பற்றியிருக்கும்” என்கிறார்.

**விளக்கம்** – “ஆயினும் இந்த மூன்றும் அந்தந்த அதிகாரியின் ப்ரபத்திக்குக் காரணமாக உள்ளவையா?”, என்ற கேள்வி எழலாம். இதற்கான் விடையை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது அவ்விடத்தில் ப்ரபத்தியானது மூன்றிலும் வைத்துக்கொண்டு ஊன்றியிருக்கிற பக்தி பாரவச்யத்தையே தனக்கு ஹேதுவாகப் பற்றியிருக்குமென்றபடி.

**விளக்கம்** - அங்கு ஏதேனும் ஒன்றைப் பற்றியே ப்ரபத்தி காணப்படும். அங்கு உள்ள ப்ரபத்தி என்பது பக்தியினால் பரவசமாக உள்ள தன்மையை மட்டுமே காரணமாகக் கொண்டு நிற்கும் என்றார்.

48. முக்க்யம் அதுவே.

**அவதாரிகை** - இந்த ஹேதுத்ரயமடியாக வரும் ப்ரபத்திகளில் முக்க்யமேதென்ன? “முக்க்ய மதுவே” என்கிறார்.

**விளக்கம்** - இப்படியாக மூன்று காரணங்களின் அடிப்படையில் தோன்றும் ப்ரபத்திகளில் எந்த ஒன்று முக்கியமானது என்று கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, பக்தி பாரவச்யமடியாக ப்ரபத்தி பண்ணுமிடத்தில் ப்ராப்ய ருசி கண்ணழிவறவுண்டாகையாலே அதுவே முக்க்யமென்றபடி.

**விளக்கம் -** பக்தியின் பரவசம் காரணமாக உண்டாகின்ற ப்ரபத்தி என்பதில், அடையப்பட வேண்டிய இலக்கைக் குறித்த ருசி அதிகமாகவே உள்ளது. ஆகவே பக்தியின் பரவசம் காரணமாக விளைந்த ப்ரபத்தியே முக்கியமானது என்றார்.

49. "அவித்யாத:" என்கிற ச்லோகத்திலே இம்மூன்றும் சொல்லிற்று.

**அவதாரிகை** - இவ்வதிகாரித்ரயத்துக்கு ப்ரமாணமுண்டோவென்ன? ப்ரதமம் பட்டரருளிச்செய்ததொரு ச்லோகத்தை யுதாஹிரிக்கிறார் "அவித்யாத:" என்று தொடங்கி.

**விளக்கம் –** இப்படியாக மூன்றுவிதமான காரணங்களால் மூன்றுவிதமான ப்ரபத்தி உண்டு என்றும், அதற்கு ஏற்ப மூன்றிவிதமான அதிகாரிகள் உண்டு என்றும் கூறுவதற்கான ப்ரமாணம் ஏதேனும் உண்டா என்ற கேள்வி எழலாம். இதற்கு முதலில் ஸ்வாமி பராசரபட்டர் அருளிச்செய்த ஒரு ச்லோகத்தைக் கூறுகிறார்.

**வ்யாக்யானம் –** "அவித்யாதோ தேவே பரிப்ருடதயாவா விதிதயா ஸ்வபக்தேர் பூம்நாவா ஜகதி கதி மந்யா மவிதுஷாம், கதிர் கம்யச்சாஸௌ ஹரிரித ஜிநந்தாஹ்வய மநோ: ரஹஸ்யம் வ்யாஜஹ்ரே ஸகலு பகவாந் ஸௌநகமுநி:" - இச்லோகார்த்தம், ஜிதந்தா வ்யாக்யாநோபோத்காதத்திலே, "ப்ரபத்திக்கதிகாரிகள் அஜ்ஞரும் ஸர்வஜ்ஞரும் பக்திபரவசருமென்று த்ரிவிதமாக பட்டரருளிச்செய்தாரிறே?" என்று தொடங்கி, "அஜ்ஞனாகிறான் - பகவல்லாபத்துக்குத் தன்பக்கலில் ஜ்ஞாந சக்திகளில்லாதவன்; ஸர்வஜ்ஞனாகிறான் தேசகாலவஸ்துக்களால் பரிச்சேதிக்கவொண்ணாத வைபவத்தையு டையவனீச்வரனென்றிருக்கையாலே அநந்யஸாத்யமென்றிருக்குமவன்; பக்திபரவ சனாகிறான் ஜ்ஞாந சக்திகளுண்டாயிருக்கசெய்தே அடைவுபட அநுஷ்டிக்க மாட்டாதவன்; இவர்கள் மூவரும், பகவத்விஷயமொழிய வேறு உபாயமுண்டென் றறியாதவர்கள்; இவர்களுக்கு ப்ராபகனுமாய் ப்ராப்யனுமாயிருக்கும் ஸர்வேச்வரன்" என்று, ஜிதந்தையென்று பேரையுடைத்தான மந்த்ர ரஹஸ்யத்தை, ஸர்வஜ்ஞனான ஸ்ரீசௌநகபகவான் வ்யாக்யாநம் பண்ணப் பெறுவதே! என்கிறார்" என்று ஆச்சான்பிள்ளையருளிச் செய்தார். "ஜ்ஞாநாதிக்யத்தாலே ப்ரபந்நர்" என்றவிடத்தில், ஸ்வரூபயாதாத்ம்ய ஜ்ஞாநம் ப்ரபதந ஹேதுவாகச் சொல்லிற்று; இந்த ச்லோகத்தில், பகவதநந்ய ஸாத்யத்வ ஜ்ஞாநம் ப்ரபதந ஹேதுவாகச் சொல்லிற்று; ஆகையால்,

இரண்டும் ஜ்ஞாநாதிகர்க்கு அநந்யகதித்வ பூர்வகமான ப்ரபதநத்துக்கு ஹேதுவாமென்று கொள்ளவேண்டும். கீழுமிதுதானே அர்த்தமானாலோவென்னில், ஒண்ணாது; "இம்மூன்றும் மூன்று தத்வத்தையும் பற்றிவரும்" என்றத்தோடு சேராமையாலே.

**விளக்கம்** - ஸ்வாமி பராசரபட்டர் அருளிச்செய்த ச்லோகம் - அவித்யாதோ தேவே பரிப்ருடதயாவா விதிதயா ஸ்வபக்தேர் பூம்நாவா ஜகதி கதி மந்யா மவிதுஷாம், கதிர் கம்யச்சாஸௌ ஹரிரித ஜிநந்தாஹ்வய மநோ: ரஹஸ்யம் வ்யாஜஹ்ரே ஸகலு பகவாந் ஸௌநகமுநி: - என்பதாகும். இந்தச் ச்லோகத்தை ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை தனது ஜிதந்தே ஸ்தோத்ர வ்யாக்யானத்தின் அவதாரிகையில் – ப்ரபத்திக்கதிகாரிகள் அஜ்ஞரும் ஸர்வஜ்ஞரும் பக்திபரவசருமென்று த்ரிவிதமாக பட்டரருளிச்செய்தாரிறே? – ப்ரபத்திக்குத் தகுதி உடையவர்கள் - அறியாமை உள்ளவர்கள், அனைத்தும் அறிந்தவர்கள், பக்தி வசப்பட்டவர்கள் என்று அருளிச்செய்தார். இதற்கான பொருள் - பகவத் விஷயத்தில் அறியாமை, நன்றாக அறிந்த தன்மை, பக்திப் பரவசம் ஆகியவற்றைத் தவிர இந்த உலகில் வேறு உபாயம் அறியாமல் உள்ளவர்களுக்கு உபாயமும், உபேயமும் ஸ்ரீஹரியே ஆவான் என்ற ஆழ்பொருளை உடையதான ஜிதந்தே என்னும் பெயர் கொண்ட இந்த மந்த்ரத்தின் ரஹஸ்யத்தை சௌனகமுனி அருளிச்செய்தார் - என்பதாகும். இதற்கு வ்யாக்யானம் இட்ட ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை, "அறியாமல் உள்ளவன் யார் என்றால் பகவானை அடைவதற்குத் தன்னிடம் வேறு எந்தவிதமான ஞானமும் இல்லாதவன்; அனைத்தும் அறிந்தவன் யார் என்றால் தேசம், காலம் போன்ற எவற்றாலும் அறிய இயலாதபடி உள்ள வைபவம் கொண்டவன் ஸர்வேச்வரன் என்பதால், அவன் வேறு எந்த உபாயத்தாலும் அடைய இயலாதவன் என்று அறிந்தவன்; பக்திபரவசன் யார் என்றால் ஞானம் போன்ற பலவும் உள்ளபோதிலும் அவனது திருமேனி அழகு முதலானவற்றில் தனது மனம் போன்ற அனைத்தும் ஈடுப்பட்டதால் எதனையும் செய்ய இயலாமல் தவிக்கும் ஒருவன் ஆவான். இப்படியாக உள்ள மூவருமே பகவத் விஷயம் தவிர வேறு உபாயம் உள்ளது என்று அறியாதவர்கள் ஆவர். இவர்களுக்கு உபாயமும் பேறாகவும் உள்ளவன் ஸர்வேச்வரன் ஆவான். இப்படியாக உள்ள ஜிதந்தை என்னும் பெயர் கொண்ட இந்த ரஹஸ்யத்தை அனைத்தும் அறிந்த ஸ்வாமி சௌனகபகவான் அருளிச்செய்தார்", என்றார். சூத்திரம் 43-ல் "ஜ்ஞாநாதிக்யத்தாலே ப்ரபந்நர்" என்பதன் மூலம் ஆத்மாவின் தன்மையை உள்ளது உள்ளபடி அறிந்த ஞானம் என்பதே ப்ரபத்திக்குக் காரணம் என்று உரைக்கப்பட்டது; இந்த ச்லோகம் மூலம், எம்பெருமான் வேறு

உபாயங்களால் அடைய இயலாதவன் என்ற ஞானமே ப்ரபத்திக்குக் காரணம் என்று உரைக்கப்பட்டது. ஆகவே இந்த இரண்டையும் (ஆத்மாவின் தன்மை பற்றிய ஞானம், எம்பெருமான் வேறு எதனாலும் அடைய இயலாதவன் என்ற ஞானம்) ஞானம் உள்ளவர்களுக்கு, வேறு கதியில்லாத தன்மை என்பதற்கு முன்பாக உள்ள காரணங்கள் என்று கொள்ளவேண்டும். சூத்திரம் 43ல் ஞானம் உள்ளவர்கள் என்பதற்கு, "எம்பெருமான் வேறு எந்த சாதனம் மூலமும் அடைய இயலாதவன் என்ற ஞானம்", என்று ஏன் கொள்ளக்கூடாது என்ற கேள்வி எழலாம். அப்படிக் கொள்ள இயலாது. ஏன்? இவ்விதம் கொண்டால் சூத்திரம் 45-ல் கூறப்பட்ட பொருளுக்கு முரண்பாடு உண்டாகும் (ஆகவே ஞானம் என்பது மேலே கூறப்பட்ட இரண்டு ஞானமும் என்றே கொள்ளவேண்டும்).

## 50. "இதம் சரணமஜ்ஞாநாம்"

**அவதாரிகை** - அநந்தரம், இவ்வர்த்த விஷயமாக, அகிலஜகந்மாதாவாய் ஆப்ததமையான பிராட்டி லக்ஷ்மீ தந்த்ரத்திலருளிச் செய்த வசநத்தை யுபாதாநம் பண்ணுகிறார் "இதம் சரணமஜ்ஞாநாம்" என்று.

**விளக்கம்** - அடுத்து ப்ரபத்தி அதிகாரிகளை மூன்று விதமாகப் பிரித்தமை குறித்து, அனைத்து உயிர்களின் தாயாக உள்ளவளும், உறுதியாக நம்பவல்லவளும் ஆகிய பெரிய பிராட்டி, லக்ஷ்மீ தந்த்ரத்தில் தனது திருவாய் மலர்ந்தருளிய சொற்களை ப்ரமாணமாக அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - இதம் சரணமஜ்ஞாநா மிதமேவ விஜாநதாம், இதம் திதீர்ஷதாம் பாரமிதமாநந்த்யமிச்சதாம். இந்த ச்லோகத்தில், "இதம்" என்று பராமர்சிக்கிறது கீழ்ச்சொன்ன சரணாகதியை. "அபாயோபாயநிர்முக்தா மத்யமாம் ஸ்திதிமாஸ்திதா, சரணாகதி ரக்ர்யைஷா ஸம்ஸாரார்ணவ தாரிணீ" என்றிறே கீழ்ச்சொல்லி நின்றது "இயம்" என்று ஸ்த்ரீலிங்க நிர்தேசமன்றிக்கே, "இதம்" என்று நபும்ஸக லிங்க வ்யத்யயம் சரண சப்த விவக்ஷையாலே. இதில் அஜ்ஞஸர்வஜ்ஞர்களை ஸ்புடமாகச் சொல்லுகையாலே, மேல் பக்திபரவசரைச் சொல்லுகிறதென்று கொள்ளவேணும். "இதம் திதீர்ஷதாம் பாரம்" என்றது - சடக்கென அநிஷ்ட நிவ்ருத்தி பிறக்க வேணுமென்னும் த்வரையை யுடையார்க்கென்றபடி. "ஆநந்த்ய மிச்சதாம்" என்றது ஸ்வரூப ப்ராப்த பரிபூர்ண

பகவதநுபவத்தைப் பெற்றாலல்லது தரிக்கமாட்டாதார்க்கென்றபடி. இவையிரண்டும் பக்தியினுடைய பூமாவாலே வருமவையிறே. பக்திபாரவச்யம் உபாயாந்தரானுஷ்டாநத்தில் அசக்திக்குமுறுப்பாய், அநிஷ்ட நிவ்ருத்தியிலு மிஷ்டப்ராப்தியிலுமுண்டான விளம்பாக்ஷமதைக்கு முடலாயிறே யிருப்பது; அதில், விளம்பாக்ஷமதைக்குடலான ஆகாரத்தை இந்த ச்லோகத்தில் சொல்லுகிறது. ஆனால், கீழ் அசக்திக்குடலாகவன்றோ சொல்லிப்போந்தது, அதுக்கிது ப்ரமாணமாமோவென்னில்; அதிகாரி த்ரைவித்யாம் தர்சிப்பிக்கிற இவ்வளவே இவ்விடத்திலபேக்ஷிதமாகையாலே இது ப்ரமாணமாகச் சொல்லத் தட்டில்லை. "அவித்யாத:" என்கிற ச்லோகத்தில், ஜ்ஞாநாதிக்யத்துக்குடலாகச் சொன்னதும் கீழ்ச் சொல்லிவந்ததும் பிந்நமாயிருக்கச் செய்தே, அதிகாரி த்ரைவித்யத்துக்கு ப்ரமாணமாகவத்தைச் சொன்னாப்போலே.

**விளக்கம்** - கீழே உள்ள லக்ஷ்மீ தந்த்ர வரிகள் காண்க.

- (17-101) இதம் சரணமஜ்ஞாநா மிதமேவ விஜாநதாம் - இந்த ப்ரபத்தி என்பதே அறிவற்றவர்களுக்கும், நன்கு அறிந்தவர்களுக்கும் உபாயம்
- (17-102) இதம் திதீர்ஷதாம் பாரமிதமாநந்த்யமிச்சதாம் – ஸம்ஸாரம் என்ற பிறவிக்கடலை கடக்க எண்ணும் அனைவருக்கும் இதுவே உபாயம்

இங்குள்ள "இதம்" என்ற பதம் கடந்த ச்லோகத்தில் (17-100) கூறப்பட்ட சரணாகதியைக் குறிக்கிறது. அந்த வரிகள் - (17-100) - அபாயோபாயநிர்முக்தா மத்யமாம் ஸ்திதிமாஸ்திதா, சரணாகதி ரக்ர்யைஷா ஸம்ஸாரார்ணவ தாரிணீ - பாவங்கள் மற்றும் மற்ற உபாயங்கள் ஆகிய இரண்டிலிருந்தும் விடுபட்டு, நடுநிலையானதும் உறுதியானதும் ஆகிய முதன்மையான இந்தச் சரணாகதி என்பது ஸம்ஸாரம் என்ற கடலில் உழன்று துன்பம் கொண்டவர்களை அதிலிருந்து கரை சேர்க்கிறது. "இதம்" என்ற பதம் சரணம் என்ற சப்தத்தைக் குறிப்பதாக உள்ளது. இங்கு ச்லோகம் 17-101ல் அறியாமல் உள்ளவர்கள், அனைத்தும் அறிந்தவர்கள் ஆகிய இருவரும் கூறப்படுவதால் ச்லோகம் 17-102ல் பக்திப்பரவசம் அடைந்தவர்கள் கூறப்படுவதாகவே கொள்ள வேண்டும். "இதம் திதீர்ஷிதாம் பாரம்" என்பதன் மூலம் தங்களது உபாய விரோதிகள் உடனே நீங்கவேண்டும் என்ற வேகம் கொண்டவர்களுக்கு இந்த வரி உள்ளது என்பது உணர்த்தப்பட்டது. ச்லோகம் 17-102ல் "ஆநந்த்யம் இச்சதாம்" என்பதன் மூலம் – தங்களது

ஆத்மாவிற்கு ஏற்றதான பகவத் அனுபவத்தைப் பரிபூர்ணமாகப் பெற்றால் மட்டுமே தரிப்பர், இல்லையேல் தரிக்கமாட்டனர் என்பதான நிலையில் உள்ளவர்களுக்கு இந்த வரியானது கூறப்பட்டது என்று உணர்த்தப்பட்டது. இந்த இரண்டுமே (தங்கள் உபாய விரோதி உடனே நீங்கவேண்டும், பகவத் அனுபவம் அடைந்தால் மட்டுமே உயிர் தரிப்பது) பக்தியின் மிகுதி காரணமாக மட்டுமே அல்லவோ உண்டாகும்? பக்தியினால் கட்டுண்டு நிற்கும் நிலை என்பது கீழே உள்ள இரண்டு நிலைகளுக்கும் அடிப்படையாக உள்ளது:

- மற்ற உபாயங்களைக் கைக்கொள்வதில் சக்தி இல்லாமை
- வேண்டுவதை அடைதல், அவசியம் அற்றவை கழிதல் ஆகிய இரண்டில் ஏற்படும் காலதாமதத்தைப் பொறுக்க இயலாமல் தவித்தல்

இந்த இரண்டில், காலதாமதம் ஏற்படுவதைப் பொறுத்துக் கொள்ள இயலாமல் உள்ள நிலையைப் பக்தி ஏற்படுத்துகிறது என்பதே இங்கு கூறப்பட்டது.

ஆனால் சூத்திரம் 46ல் பக்தியின் மூலம் பரவசம் அடைந்து நிற்கும் நிலை என்பதே மற்ற உபாயங்களைக் கைக்கொள்ள திறனற்ற நிலைக்குக் காரணம் என்று அல்லவோ கூறப்பட்டது? அதற்கு இந்த ச்லோகம் ப்ரமாணமாகுமோ? இந்தக் கட்டத்தில் ப்ரபத்தியின் அதிகாரிகள் மூன்று விதமாக உள்ளனர் என்பதற்கு அடிப்படையாக மூன்று பிரிவுகளை உணர்த்துவது மட்டுமே போதுமானது என்பதால், இந்த ச்லோகம் அதற்கும் ப்ரமாணம் என்று கூறுவதில் எந்தவிதமான தோஷமும் இல்லை. சூர்ணை 49ல் எடுக்கப்பட்ட அவித்யாத என்ற ப்ரமாணம் மூலம் ஞானாதிக்யத்திற்குக் காரணம் இன்னது என்று கூறப்பட்டதும், சூர்ணை 42ல் கூறப்பட்டதும் வெவ்வேறாக உள்ளபோதிலும், மூன்று வகையான அதிகாரிகளுக்கு அவித்யாத என்று ச்லோகமே ப்ரமாணமாகக் காட்டப்பட்டது. இது போன்றே இங்கும் கொள்ளக் குறையில்லை.

51. பக்திதன்னிலே அவஸ்தாபேதம் பிறந்தவாறே இதுதான் குலையக்கடவ தாயிருக்கும்.

**அவதாரிகை** – ஆக, ப்ரபத்த்யதிகாரி த்ரைவித்யத்துக்கு ப்ரமாணம் காட்டினாராய் நின்றார்கீழ்; இந்த த்ரிவித ப்ரத்தியிலும் பக்திபாரவச்ய ப்ரபத்தியே முக்கியமென்றிறே

கீழ்ச்சொல்லிற்று. ஏவம்பூத ப்ரபத்தி நிஷ்டரானவர்கள் தந்நிஷ்டை குலைந்து பகவல்லாபார்த்தமாக ஸ்வயத்நத்திலே மூளுவது, அவன் வரக் கொள்ள அவனையு பேக்ஷிப்பதாகிறவிவற்றுக்கு நிதாநமேதென்ன, அருளிச்செய்கிறார் “பக்தி தன்னிலே” என்று தொடங்கி.

**விளக்கம்** – இப்படியாக மூன்று வகையான ப்ரபத்தி அதிகாரிகளின் பிரிவைத் தகுந்த ப்ரமாணங்கள் மூலம் உணர்த்தினார். இப்படியாக உள்ள மூன்று வகைகளில் பக்தியின் மூலம் கட்டுண்டு, அதன் காரணமாகப் பரவசம் அடைந்து செய்யும் ப்ரபத்தியே மிகவும் முக்கியம் என்று சூர்ணை 48ல் உரைத்தார். இப்படிப்பட்ட ப்ரபத்தியில் நிலைநிற்பவர்கள் தங்களது உறுதி குறைந்து எம்பெருமானைப் பெறுவதில் தங்களது சொந்த முயற்சியில் ஈடுபடுவது, எம்பெருமான் வந்தால் அவனை வெறுப்பது முதலானவற்றுக்கான காரணம் என்ன என்பதை இங்கு அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – ”பக்திதன்னிலே அவஸ்தாபேதம் பிறக்கையாவது” கரணசைதில்யத்தாலே ஸ்வயத்ந க்ஷமரன்றிக்கே அவனேயுபாயமாக அத்யவஸித்து, அவன் வரவு பார்த்திருக்கு மவஸ்தையளவன்றிக்கே கண்ணாஞ்சுழலையிட்டு, ஏதேனுமொருபடியாலேயாகிலும் அவனையிப்போதே பெறவேண்டும் என்னுமதிமாத்ர த்வராவஸ்தை விளைகை. ”இது” என்று ப்ரபத்தியைச் சொல்லுகிறது. தாத்ருசாவஸ்தை பிறந்தால் ப்ரபத்தி குலைகையாவது ”என்னான் செய்கேன்” என்று ஸ்வப்ரவ்ருத்தியிலந்வயமற்று பகவதி ந்யஸ்தபரராயிருக்கு மிருப்புக்குலைகை.

**விளக்கம்** - ” பக்திதன்னிலே அவஸ்தாபேதம் பிறக்கை” என்றால் என்ன? பொதுவாக எப்படி இருக்கவேண்டும் என்றால் அவன் மீது கொண்ட பக்தி காரணமாகத் தங்கள் உடல் உறுப்புகள் அனைத்தும் திறன் இழந்து, அவனை அடைவதற்குத் தாங்களாகவே முயற்சி செய்வதற்கு எந்தவிதமான சக்தியும் இன்றி இருத்தல் வேண்டும்; அவனை மட்டுமே தங்கள் உபாயமாக எதிர்பார்த்து நிற்கவேண்டும். ஆனால் இப்படிப்பட்ட நிலையில் இல்லாமல், காலதாமதத்தைப் பொறுக்க இயலாமல் தாங்களாகவே ஏதேனும் முயற்சியில் ஈடுபட்டு, அவனை எப்படியும் இப்போதே அடையவேண்டும் என்னும் அளவு கடந்த வேகத்தின் காரணமாக ஒரு நிலையை அடைதல் – என்பதாகும். “இது” என்பதன் மூலம் ப்ரபத்தி கூறப்பட்டது. மேலே கூறப்பட்ட நிலை உண்டானால், ப்ரபத்தி குலைகிறது.

ப்ரபத்தி குலைதல் என்றால் – “என்னான் செய்கேன்” என்று தனது முயற்சியில் மேலும் தொடராமல், எம்பெருமானிடம் தனது பாரம் முழுவதையும் வைத்தல் என்ற உறுதி மாறிவிடுவதாகும்.

52. தன்னைப் பேணவும் பண்ணும், தரிக்கவும் பண்ணும்.

**அவதாரிகை** - இப்படி ப்ரபத்தி நிஷ்டை குலையும்படி பிறந்த பக்தியும் அவஸ்தா பேதம் விளைக்குமத்தையருளிச் செய்கிறார் “தன்னை” என்று தொடங்கி.

**விளக்கம்** - இப்படி ப்ரபத்தியின் மீது கொண்ட உறுதியானது தவறும்படியாக ஏற்பட்ட பக்தி என்பது பலவிதமான நிலைகளை உண்டாக்கும் என்கிறார்.

**வ்யாக்யானம்** – ”தன்னைப் பேணப்பண்ணுகையாவது” காறைபூணும் இத்யாதியிற்படியே அவன் வரவுக் குடலாகத் தன்னையலங்கரிக்கும்படி பண்ணுகை. அதாவது பகவல்லாபார்த்தமாக ஸ்வயத்னத்திலே மூட்டுமென்றபடி. இது, மடலெடுக்கை முதலானவற்றிலே மூட்டுமதுக்குமுபலக்ஷணம். ”தரிக்கப் பண்ணுகையாவது” – அரைக்ஷணமவனையொழிய தரிக்கமாட்டாமையாலே, அவன் வரவுக்குடலாக ஸ்வயத்னத்திலே மூளும்படி பண்ணினவதுதானே, அவன் வரக்கொள்ள விளம்ப ரோக்ஷத்தாலே ”போகு நம்பி”, ”கழக மேறேல் நம்பி” என்று அவனையுபேக்ஷித்துத் தள்ளி தரித்திருக்கும்படி பண்ணுகை. ஆக இவையிரண்டாலும் – ”என்னான் செய்கேன்” என்றும், “தரியேனினி” என்றுமிருக்குமிருப்புக்கு ப்ரதிகோடியை விளைக்குமென்றபடி. ஆகையாலே, ப்ரபத்தி நிஷ்டை குலைந்து ஸ்வப்ரவ்ருத்த்யாதிகளிலிழிகைக்கடி பக்தியினுடைய அவஸ்தா பேதமென்று கருத்து.

**விளக்கம்** – ”தன்னைப் பேணப்பண்ணுகையாவது” என்றால் பெரியாழ்வார் திருமொழி (3-7-8) – காறைபூணும் - என்ற பாசுரத்திற்கு ஏற்றபடி, அவன் தன்னை நாடிவரும் பொருட்டுத் தன்னை அலங்கரித்துக் கொள்ளும்படிச் செய்வது – என்பதாகும். அதாவது அவனை அடைவதற்காகத் தனது முயற்சியில் ஈடுபடுதல் என்பதாகிறது. இதுவே மடல் எடுத்தல் போன்ற முயற்சியில் ஈடுபடும் செயல்கலையும் குறிக்கிறது. “தரிக்கப் பண்ணுகையாவது” என்றால் – அவன் இல்லாமல் அரைநொடி கூடத் தாங்க

இயலவில்லை என்ற நிலை உண்டாகிறது; இதன் விளைவாகவே அவன் வரும்வரை காத்திருக்க இயலாமல், அவனை அடைவதற்குத் தானே முயல்வதற்கான செயல்களில் ஈடுபடும்படியாக பக்தி மாறுகிறது; இத்தகைய பக்தியானது அவன் சற்று காலம் தாழ்த்தி வந்தவுடன், "இத்தனை காலம் கழித்து வந்தானே" என்று ஆதங்கத்தை உண்டாக்குகிறது. இதனால் அவன் மீது கோபம் கொள்ளும்படிச் செய்து, கீழே உள்ள பாசுரங்களில் கூறப்பட்டது போன்று அவனை வெறுத்துத் தள்ளும்படிச் செய்துவிடுகிறது:

- திருவாய்மொழி – போகு நம்பீ
- திருவாய்மொழி – கழகம் ஏறேல் நம்பீ

ஆக, இந்த இரண்டாலும் “என்னான் செய்கேன்”, "தரியேன் இனி" என்ற இரு நிலைகளையும் மாற்றி, இத்தகைய நிலையில் இருக்கவிடாமல் உள்ள நிலையைக் கொண்டு சேர்க்கும் என்றார். ஆகவே, ப்ரபத்தியில் உள்ள உறுதி குலைந்து, தனது முயற்சியில் ஈடுபடுவதற்கான காரணம் பக்தியின் நிலையில் ஏற்படும் மாறுபாடே காரணம் என்கிறார்.

53. இந்த ஸ்வபாவவிசேஷங்கள் கல்யாண குணங்களிலும் திருச்சரங்களிலும் திருநாமங்களிலும் திருக்குழலோசையிலுங் காணலாம்.

**அவதாரிகை** - "தன்னைப் பேணுவும் பண்ணும் தரிக்கவும் பண்ணும்" என்று எம்பெருமான் வருகைக்குடலாக க்ருஷி பண்ணுகையும் அவன் வரக்கொள்ள அவனை யுபேக்ஷிக்கையுமாகிற பரஸ்பர விருத்த ஸ்வபாவங்களை விளைக்குப்படியையிறே சொல்லிற்று; இப்படி பக்தியானது ஸ்வாவஸ்தா விசேஷங்களாலே சேதநர்க்கு விளைக்கும் பரஸ்பர விருத்த ஸ்வபாவங்கள் தத்விஷய மாத்ரத்திலன்றிக்கே தத்ஸம்பந்தி வஸ்துக்கள் விஷயமாகவும் காணலாமென்கிறார் மேல் (இந்த என்று தொடங்கி).

**விளக்கம்** - கடந்த சூர்ணையில், “தன்னைப் பேணுவும் பண்ணும் தரிக்கவும் பண்ணும்” என்று கூறுவதன் மூலம் ஸர்வேச்வரன் வருவதற்காகச் செய்யவேண்டிய முயற்சிகள் அனைத்தையும் செய்தபடி இருத்தலும், அப்படி அவன் வந்தபோது அவன் தாமதமாக வந்தான் என்று அவனை வெறுப்பதுமான முரண்பட்ட செயல்களைப் பக்தியானது

உண்டாக்கும் தன்மையை அருளிச்செய்தார். இப்படிப்பட்ட பக்தியானது தனது நிலை மாறுபாடு காரணமாக நமக்கு உண்டாகும் முரண்பட்ட நிலைகள் எம்பெருமான் விஷயத்தில் மட்டுமே அல்ல, அவன் தொடர்புடைய பொருள்கள் விஷயத்திலும் ஆக்கிவிடுவதை இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** (இந்த ஸ்வபாவ விஷயங்கள்) என்று – கீழ்ச் சொன்னவை தன்னையே சொல்லுகிறதன்று, இப்படிப்பட்ட ஸ்வபாவ விசேஷங்களென்றபடி. அவையாவன – அநுபாவ்ய விஷய மொருபடிப்பட்டிரா நிற்கச்செய்தே, அத்தை யநுபவிக்கிறவர்களுக்கு தாரகமாய்த் தோற்றுகையும், பாதகமாய்த் தோற்றுகையும். (கல்யாண குணங்கள்) இத்யாதி. "கோவிந்தன் குணம் பாடி யாவி காத்திருப்பேனே" என்று தாரகமாகவும், "வல்வினையேனையீர்க்கின்ற குணங்களையுடையாய்" என்று பாதகமாகவும் சொல்லுகையாலே – கல்யாண குணவிஷயமாகவும்; "சரங்களாண்ட தண்டாமரைக் கண்ணனுக்கனறியென் மனந்தாழ்ந்து நில்லாதே" என்று தாரகமாகவும், "சரங்களே கொடிதாயடுகின்ற" என்று பாதகமாகவும் சொல்லுகையாலே – திருச்சர விஷயமகவும்; "திருமாலைப் பாடக் கேட்டு மடக்கிளியைக் கைகூப்பி வணங்கினாளே" என்று தாரகமாகவும், "கண்ணன் நாமமே குழறிக்கொன்றீர்" என்று பாதகமாகவுஞ் சொல்லுகையாலே – திருநாம விஷயமாகவும்; "எங்களுக்கேயொருநாள் வந்தூதவுன் குழலின்னிசை போதராதே" என்று தாரகமாகவும், "அவனுடைத் தீங்குழலீருமாலோ" என்று பாதகமாகவும் சொல்லுகையாலே திருக்குழலோசை விஷயமாகவும் காணலாமென்றபடி.

**விளக்கம்** – "இந்த ஸ்வபாவ விசேஷங்கள்" என்பதன் மூலம் கடந்த சூர்ணையில் கூறப்பட்டவையே மீண்டும் இங்கு விசேஷங்கள் – என்பதைக் கூறுகிறார். இத்தகைய விசேஷங்கள் என்னவென்றால் – அனுபவிக்கப்படுகின்ற பொருளானது ஒரே தன்மையுடன் இல்லாமல் இருத்தலும், அந்த ஒரு பொருளே நன்மை அளிப்பதாகவும் தீமை என்ற தோற்றத்தை ஏற்படுத்துவதாகவும் உள்ளது - என்பதாகும். "கல்யாண குணங்களிலும்" என்பதன் மூலம்: நாச்சியார் திருமொழி (8-3) – கோவிந்தன் குணம் பாடி யாவி காத்திருப்பேனே – என்று அவன் திருக்குணங்கள் தனக்கு உயிர் வாழ்வதற்குத் தேவையான ஒன்றாக உள்ளதையும்; திருவாய்மொழி (8-1-8) – வல்வினையேனை யீர்க்கின்ற குணங்களையுடையாய் – என்று அந்தக் குணங்களே தன்னை பித்துப்பிடித்து

நாசம் செய்வதாக உள்ளதையும் கூறுவதால் – கல்யாண குண விசேஷமாகவும்; “திருச்சரங்களிலும்” என்பதன் மூலம்: பெரியதிருமொழி (7-3-4) - சரங்களாண்ட தண்டாமரைக் கண்ணனுக்கனறியென் மனந்தாழ்ந்து நில்லாதே – என்று அவனது அம்புகளே தான் உயிர்வாழக் காரணமாக உள்ளதையும், பெரியதிருமொழி (10-2-9) - சரங்களே கொடிதாயடுகின்ற – என்று அந்த அம்புகளே தனக்குத் தீமை ஏற்படுத்துவதாக உள்ளதையும் கூறுவதால் – திருச்சரங்கள் விஷயமாகவும்; “திருநாமங்கள்” என்பதன் மூலம்: திருநெடுந்தாண்டகம் (14) – திருமாலைப் பாடக் கேட்டு மடக்கிளியைக் கைகூப்பி வணங்கினாளே – என்று அவனது திருநாமங்களே தான் தரிப்பதற்குக் காரணமாக உள்ளதையும், திருவாய்மொழி (9-5-8) – கண்ணன் நாமமே குழறிக்கொன்றீர் - என்று அந்தத் திருநாமங்களே தனக்குப் பாதமாக உள்ளதையும் கூறுவதால் – திருநாமங்கள் விஷயமாகவும்; “திருக்குழல் ஓசையிலும்” என்பதன் மூலம்: பெருமாள் திருமொழி (6-9) – எங்களுக்கேயொருநாள் வந்தூதவுன் குழலின்னிசை போதராதே – என்று அவனது குழல் ஓசை மட்டுமே தாங்கள் உயிர் வாழக் காரணமாக உள்ளதையும், திருவாய்மொழி (9-8-5) - அவனுடைத் தீங்குழலீருமாலோ – என்று அந்தக் குழல் ஓசையே தன்னை அழிப்பதாகவும் கூறுவதால் – திருக்குழல் ஓசை விஷயமாகவும் காணலாம் (அதாவது நமது பக்தி காரணமாக அவன் மட்டுமே முரண்பட்ட தன்மை உடையவனாக நமக்குத் தோன்றுகிறான் என்பது மட்டும் அல்ல, அவனுடன் தொடர்புடைய பலவும் அவ்விதமே உள்ளதைக் காணலாம் என்றார்).

**வ்யாக்யானம்** - என்றுமொக்க போக்யங்களாயிருந்துள்ள கல்யாண குணாதிகள் தாரகமாய்த் தோற்றுவது, பாதகமாய்த் தோற்றுவதாகிறது - அது போக்தாக்களான விவர்களுடைய ப்ரேம ஸ்வபாவ விசேஷங்களாலேயிறே; அல்லது குணாதிகளின் ஸ்வரூப பேதத்தாலன்றே. ஆகையால், பக்த்யவஸ்தாபேத ஜநிதங்களான ஸ்வபாவ விசேஷங்கள் இவ்வோ வஸ்துக்கள் விஷயமாகவுங் காணலாமென்கிறது. குணாதிகள் தாரகங்களாகவும் பாதகங்களாகவும் பேசுகிறவிடத்தில் இரண்டுமொருவர் பேச்சன்றிக்கே யிருந்ததேயாகிலும், ஆழ்வார்களெல்லாரும் ஏக ப்ரக்ருதிகளாகையாலும், எல்லாருடைய பக்தியும் பகவத் ப்ரஸாத லப்தையான பரபக்தியாகையாலும், அந்த பக்தி ஸ்வபாவ விசேஷங்கள் காட்டுகிற மாத்ரமே யிவ்விடத்தி லபேக்ஷிதமாகையாலே விரோதமில்லை. “சரங்களே கொடிதாயடுகின்ற” என்கிறவிது பராஜித ராக்ஷஸர் பாசுரமன்றோ, அத்தை, “சரங்களாண்ட” என்கைக்கு ப்ரதிகோடியாகச் சொல்லலாமோ வென்னில்; ராமவிஜயம்

தமக்கிஷ்டமாகையாலே, அந்த விஜயத்துக்கிலக்காய், தோற்ற ராக்ஷஸர் தசைபிறந்து, பிராட்டிமார் தசை பிறந்து போசுமாப் போலே தாமான தன்மை தோற்றாதே தோற்ற ராக்ஷஸர் பாசுரத்தாலே விஜயத்தைப் பேசியநுபவிக்கிறா ரென்றிறே இத்திருமொழிக்கு வ்யாக்யாநம் பண்ணியருளுகிற வாசார்யர்களருளிச்செய்வது. ஆகையால் தம்முடைய ப்ரேம ஸ்வபாவத்தாலே ததஸ்தாபந்நமான பின்பு திருச்சரங்கள் பாதகமாய்த்ததும் தமக்கேயாய்த் தோற்றிப் பேசுகையாலே அப்படி சொல்லக் குறையில்லை.

**விளக்கம்** - எப்போதுமே இன்பம் அளிக்கவல்லதாக உள்ள அவனது திருக்கல்யாண குணங்கள் உள்ளிட்ட பலவும் நன்மை அளிப்பதாகவும் உயிர் வாழ இன்றியமையாதவை எனவும் தோன்றுவதும், அதே பொருள்கள் தீமை அளிப்பதாகத் தோன்றுவதும் எப்படி? அது அனுபவிப்பவர்களின் ப்ரேமை எத்தகையது என்பதன் அடிப்படையில் அமைகின்றது. இவ்விதம் அல்லாமல், முரண்பாடாக உள்ள தன்மை என்பது திருக்கல்யாணகுணங்கள் முதலானவற்றின் தன்மைகளில் உள்ள வேறுபாடுகளால் அல்ல. ஆகவே பக்தியின் நிலைகளில் உள்ள வேறுபாடுகள் காரணமாக உண்டாகும் செயல் விசேஷங்கள் இப்படிப்பட்ட பல பொருள்களின் விசேஷங்களாகப் பிரதிபலிப்பதைக் காணலாம் என்கிறார். மேலே உள்ள எடுத்துக்காட்டுகளில், திருக்கல்யாண குணங்கள் போன்ற பலவும் நன்மை அளிப்பதாகவும், தீமை அளிப்பதாகவும் கூறப்பட்டபோதிலும் அங்குள்ள இரண்டுவிதமான பாசுரங்களை (நன்மை அளிப்பதைக் கூறும் பாசுரம், தீமை அளிப்பதைக் கூறும் பாசுரம்) ஒருவரே அருளிச்செய்யவில்லையே என்று கேள்வி கேட்கலாம் (அதாவது ஒருவரே இரண்டையும் கூறியிருந்தால் முரண்பட்ட தன்மைகள் வெளிப்படும். ஆனால் இருவர் கூறியதால், ஒருவருக்கு நன்மை அளிக்கும் பொருள் மற்றவருக்குத் தீமை அளிக்கலாமே என்பது இயல்பான சந்தேகத்தின் அடிப்படையில் எழும் கேள்வி). இந்தச் சந்தேகம் எழ அவசியமே இல்லை – காரணம், ஆழ்வார்கள் அனைவரும் ஒரே தன்மை உள்ளவர்கள், அவர்கள் அனைவரது பக்தி என்பது எம்பெருமானின் கடாக்ஷம் காரணமாக உண்டான பரபக்தியே ஆகும் – எனவே பக்தியின் தன்மை குறித்து மட்டுமே இங்கு கூறப்படுவதால் எந்தவிதமான முரண்பாடும் இல்லை என்றாகிறது. பெரியதிருமொழி (10-2-9) – சரங்களே கொடிதாயடுகின்ற – என்று கூறப்படும் பாசுரம் இராமனிடம் தோற்றுப்போன அரக்கர்கள் கூறுவது அல்லவோ? இதனை எவ்விதம் பெரியதிருமொழி (7-3-4) – சரங்களாண்ட - என்ற பாசுரத்திற்கு முரண்பட்ட தன்மை அளிக்கிறது என உரைக்க இயலும் (அதாவது நன்மை அளிப்பதாகக்

கூறுவதும், தீமை அளிப்பதாகக் கூறுவதும் பக்தியினால் கட்டுண்டவன் அல்லவோ கூறவேண்டும்?). அதாவது இராமனின் வெற்றி என்பது தனக்கு விருப்பமான ஒன்று என ஆழ்வார் உள்ளார். இதன் காரணமாக இவர் செய்தது என்னவென்றால் – நாயகி பாவத்தை எடுத்துக்கொண்டு பேசுவது போன்று இங்கு இவர் அரக்கர்களின் பாவத்தை எடுத்துக்கொண்டு, தான் பேசுவது போன்று அல்லாமல், தோற்றுப்போன அரக்கர்கள் மூலமாக வெற்றியைக் கூறி அனுபவிக்கிறார் என்று கருத்து – இப்படி அல்லவோ இந்தத் திருமொழிக்கு நமது பூர்வர்கள் வ்யாக்யானம் இட்டனர்? எனவே தனக்குப் பெருகி நின்ற ப்ரேமை காரணமாக, அந்த அரக்கர்களின் நிலையில் நின்று, அவர்களுக்குத் தீமை செய்யும் அம்புகள் தனக்கும் தீமையே செய்தன என்று மயங்கிப் பேசுவதால் இங்கு எந்த வ்ரோதமும் இல்லை.

**வ்யாக்யானம்** – அதவா, (தன்னைப் பேணவும் பண்ணும் தரிக்கவும் பண்ணும்) என்ற விவையிரண்டாலும் அவன் தானே வருமளவும் தரியாமல் வரவுக்குடலாக யத்நிக்கப் பண்ணுவது, வரக்கொள்ள ப்ரணயரோஷத்தாலே தள்ளித் தரித்திருக்கப்பண்ணுவதாம் படியையிறே சொல்லிற்று; இப்படி விருத்த ஸ்வபாவங்களை யொன்றுதானே செய்கிறார் (இந்த) என்று தொடங்கி. அதாவது - இப்படிப்பட்ட ஸ்வபாவ விசேஷங்கள், "கோவிந்தன் குணம்பாடி" என்று தொடங்கி கீழ்சொன்னபடியே ஒரு தசையிலே தாரகமாகப் பேசுவது, ஒரு தசையிலே பாதகமாகப் பேவதாம்படி, இவர்களுக்கு தரிப்பும் பாதையுமாகிற விருத்த ஸ்வபாவங்களை விளைக்கிற கல்யாணகுணாதிகளிலேயுங் காணலாமென்கை. ஆக, (ப்ரபத்திக்கு) என்று தொடங்கி இவ்வளவாக – ப்ரபத்தி வைபவத்தையும்; தத்விஷய வைபவத்தையும், தத்திகாரி த்ரைவித்யத்தையும், த்ரிவித ப்ரபத்தியிலும் பக்திபாரவச்ய ஹேதுக ப்ரபத்தியினுடைய முக்க்யத்தையும், அது தனக்கு ஸ்வ ஹேதுபூத பக்த்யவஸ்தா பேதத்தால் வரும் குலைதலையும், அந்த பக்த்யவஸ்தாபேதஞ் செய்விக்கு மம்சங்களையு மருளிச்செய்தார்.

**விளக்கம்** - அல்லது கடந்த சூர்ணையான "தன்னைப் பேணவும் பண்ணும் தரிக்கவும் பண்ணும்" என்பதற்கு இங்கு வேறுவிதமாகவும் பொருள் உரைக்கலாம். கடந்த சூர்ணையில் கூறப்பட்ட பொருள் – அவன் தானாகவே தன்னைத் தேடி வரும்வரை பொறுத்துக்கொள்ள இயலாமல், அவன் விரைந்து வரும் பொருட்டு தானே சில முயற்சிகளில் ஈடுபடுவதும்; அவன் தாமதமாக வந்த காரணத்தால் அவனை வெறுத்து

ஒதுக்குவது போன்று செய்வதும் – என்பதாகும். இப்படிப்பட்ட மாறுபட்ட தன்மைகளை ஏற்படுத்தும் பொருள் ஒன்றுதான் இருக்க இயலும்; இதனை ஏற்படுத்தும் வேறு பொருள்களும் உள்ளனவோ, இந்தத் தன்மையை வேறு பொருள்களிலும் காணலாமோ என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார். இப்படிப்பட்ட நிலைமாறுபாடுகள் "கோவிந்தன் குணம்பாடி" என்று தொடங்கி மேலே கூறியபடி ஒரு நிலையில் இவர்களுக்கு நன்மை அளிப்பதற்குக் காரணமாகவும், மற்றோரு நிலையில் இவர்களுக்குத் தீமை அளிப்பதற்குக் காரணமாகவும் உள்ளது என்று பேசும்படிச் செய்கின்ற தன்மை; அதாவது இவர்களுக்கு இன்பமும் துன்பமும் என்பதான மாறுபட்ட நிலைகளை ஏற்படுத்தும் தன்மை – இவற்றைத் திருக்கல்யாண குணங்கள் போன்றவற்றிலும் காணலாம் என்கிறார் - எனவும் பொருள் கூறலாம். ஆகவே "ப்ரபத்திக்கு" என்றுள்ள சூர்ணை 37 தொடங்கி, இந்தச் சூர்ணை முடிய கீழே உள்ள பலவற்றையும் அருளிச்செய்தார்.

- ப்ரபத்தியின் பெருமை
- ப்ரபத்தி செய்யும் வஸ்துவின் (ப்ரபத்திக்கு இலக்கான அர்ச்சை) மேன்மை
- ப்ரபத்தி செய்கின்ற அதிகாரிகளின் மூன்றுவிதமான பிரிவுகள்
- மூன்று வகையான அதிகாரிகள் செய்யும் ப்ரபத்தியில் பக்தியின் அடிப்படையில் உள்ள ப்ரபத்தியே உயர்ந்தது என்றும், அத்தகைய ப்ரபத்தியே முக்கியம் என்றும் கூறுதல்
- அத்தகைய ப்ரபத்தி ஏற்படுவதற்குக் காரணமாகத் தன்னிடம் உள்ள பக்தியால் தனக்கு உண்டாகும் நிலைகுலைதல்
- பக்தி நிலை வேறுபாடுகளால் ஏற்படும் மாற்றங்கள்.

54. இது தன்னைப் பார்த்தால் பிதாவுக்குப் புத்ரனெழுத்து வாங்குமாபோலேயிருப்பதொன்று.

**அவதாரிகை** - இப்ப்ரபத்தி தனக்கு (தர்மபுத்ராதிகளும்) என்று தொடங்கி கீழுக்தரானவதிகாரிகள் பக்கலிலே ஸாதநதயா அநுஷ்டாநம் காண்கையாலும், கர்ம ஜ்ஞாந பக்தி ப்ரபத்திகளென்று உபாயங்களோடே ஸஹபடிதமாய்ப் போருகையாலும் "யத் யேந காமகாமேந நஸாத்யம் ஸாதநாந்தரை: முமுக்ஷுணா யத் ஸாங்க்யேந யோகேந

நச பக்தித: ப்ராப்யதே பரமம் தாம யதோ நாவர்த்ததே புந: தேந தேநாப்யதே தத்தந்ந்யா ஸேநைவ மஹாமுநே பரமாத்மாச தேநைவ ஸாத்யதே புருஷோத்தம:” என்றும், “இதம் சரணமஜ்ஞாநாம்” என்றும் இப்படியே சாஸ்த்ரங்களித்தை ஸாதநாமாகச் சொல்லுகையாலும் உபாயத்வ ப்ரதிபத்தி யோக்யதை யுண்டாகையாலே, அத்தை வ்யாவர்த்திக்கைக்காக அதுக்குடலான பலவற்றையுமருளிச் செய்கிறார் மேல்; அதில் ப்ரதமத்திலே, இப்ப்ரபத்தியை யுபாயமாகக் கொண்டால் வருமவத்யத்தை தர்சிப்பிக்கிறார் ”இது தன்னை” என்று தொடங்கி.

**விளக்கம்** – கீழே உள்ள பல காரணங்களால் ப்ரபத்தி என்பதை உபாயமாக எண்ணி விடக்கூடிய நிலை ஏற்படும்:

- சூர்ணை 32ல் கூறப்பட்ட தர்மபுத்திரர் முதலான அதிகாரிகளிடம் ப்ரபத்தியைச் சாதனமாகக் கொண்ட செயல்பாடு காணப்படுகிறது.
- கர்மம், ஞானம், பக்தி, ப்ரபத்தி என்று ப்ரபத்தியானது மற்ற உபாயங்களுடன் சேர்த்துப் பேசப்படுகிறது.
- லக்ஷ்மீதந்திரம் - யத் யேந காமகாமேந நஸாத்யம் ஸாதநாந்தரை: முமுக்ஷுணா யத் ஸாங்க்யேந யோகேந நச பக்தித: ப்ராப்யதே பரமம் தாம யதோ நாவர்த்ததே புந: தேந தேநாப்யதே தத்தந்ந்யா ஸேநைவ மஹாமுநே பரமாத்மாச தேநைவ ஸாத்யதே புருஷோத்தம: – ஐச்வர்யத்தை விரும்பும் யாரால் எந்த ஓர் ஐச்வர்யம் மற்ற சாதனங்களால் பெற இயலாமல் உள்ளதோ அது ப்ரபத்தியினால் பெறத் தக்கது; எந்த ஒரு முமுக்ஷுவால் மீண்டும் திரும்புதல் இல்லாமை என்ற இடமான பரமபதமானது கர்மயோகம் போன்றவற்றால் பெற இயலாமல் உள்ளதோ அந்த இடம் ப்ரபத்தியினால் அடையப்படுகிறது; கைவல்யத்தை விட உயர்ந்த பரமாத்ம அனுபவம் ப்ரபத்தியில் கிட்டுகிறது.

- லக்ஷ்மீ தந்திரம் – இதம் சரணமஜ்ஞாநாம் – அறிவற்றவர்களுக்கும் இந்த ப்ரபத்தியே உபாயம்

ஆக மேலே உள்ள பல வரிகளின் மூலம் ப்ரபத்தியை ஓர் உபாயமாக எண்ணிவிடக்கூடிய வாய்ப்பு உள்ளது. இந்த எண்ணத்தை நீக்கும் பொருட்டு மற்ற பலவற்றையும்

விளக்குகிறார். இப்படியாக விளக்கவுள்ள பலவற்றில், முதலில் ப்ரபத்தியை உபயமாக எண்ணினால் வரும் குற்றத்தை இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – ”இது தன்னைப் பார்த்தால்” என்றது இச்சேதனீச்வர விஷயத்தில் பண்ணுமிப்ப்ரபத்தி தன்னையுபாயமென்னப் பார்த்தாலென்றபடி. ஈச்வரன் தன்னை ரக்ஷிக்கைக்கு ஹேதுவாக விச்சேதநன் பண்ணும் ப்ரபத்தி தன்னை நிரூபித்தால் என்றிங்ஙனே அநத்யாஹாரேண யோஜிக்கவுமாம்; அப்போதும் அர்த்த மொக்குமிறே.

**விளக்கம்** – “இது தன்னைப் பார்த்தால்” – சேதனர்கள் எம்பெருமானிடம் செய்கின்ற ப்ரபத்தியை ஓர் உபாயம் என்று கூறினால் – என்று பொருள். மேலும், எம்பெருமான் தங்களைக் காப்பாற்றுவதற்கான உறுப்பாகவே சேதனர்கள் இந்த ப்ரபத்தியைக் செய்கின்றனர் என்று ப்ரபத்தியை நிரூபிக்கும்போது “உபாயம்” என்ற சொல்லை எடுத்தாள வேண்டிய அவசியம் இல்லாமலேயே கூற இயலும். அப்போதும் இதே கருத்து வெளிப்படும்.

**வ்யாக்யானம்** – ”பிதாவுக்குப் புத்ரனெழுத்து வாங்குமாப்போலே யிருப்பதொன்று” என்றது உத்பாதகனாகையாலே ஹிதைஷியாய் தானறியாத தசையிலும் தன்னை ரக்ஷித்துக் கொண்டுபோரும் தமப்பனுக்கு, புத்ரனானவன், தானறிந்த தசையிலே என்னை நீ ரஷிக்கவேணும் என்றெழுத்து வாங்கினால், இரண்டு தலைக்குமுண்டான உறவுக்குக் கொத்தையாமாப்போலே, ஸத்தாகாரணபூதனாய் ஸர்வதசையிலும் ரக்ஷகனாய்க் கொண்டு போருகிற அகாரவாச்யனான ஸர்வேச்வரனுக்கும் மகாரவாச்யனான விவனுக்கு முண்டான ஸம்பந்தத்துக் கவத்யகர மென்றபடி. ”எழுத்து வாங்குகையாவது” ரக்ஷகன் பேரைத் தன் மார்பிலே யெழுதிக் கொள்ளுகை.

**விளக்கம்** - “பிதாவுக்குப் புத்ரனெழுத்து வாங்குமாப்போலே யிருப்பதொன்று” – தன்னை இந்த உலகத்தில் உண்டாக்கியவன் என்பதால் தனது நலத்தை எப்போதும் எண்ணியவனக, தான் ஏதும் அறியாத பருவத்தில் இருந்தபோதிலும், ஒரு மகன் தந்தையிடம் “என்னைப் நீ பாதுகாக்க வேண்டும்” என்று வளர்ந்த பிறகு எழுதி வாங்கிக் கொள்வானோ? அப்படி எழுதி வாங்கிக் கொண்டால் அந்த இருவருக்கும் இடையே உள்ள உறவு என்பது கொச்சையாகிவிடாதோ? இது போன்று நாம் அனைவரும்

“இருக்கிறோம்” என்று கூறும்படியாக நம்மை வைப்பதற்குக் காரணமாக உள்ளவனும், அனைத்து நிலையிலும் நமக்குப் பாதுகாப்பாக உள்ளவனும், ப்ரணவத்தில் உள்ள ”அ” என்ற எழுத்தின் பொருளாக உள்ளவனும் ஆகிய எம்பெருமானை அடையும் உபாயமாக ப்ரணவத்தில் உள்ள “ம” என்ற எழுத்தின் பொருளான ஜீவன், ப்ரபத்தியைக் கைக்கொண்டால் (உபாயம் என்று கைக்கொண்டால்) இந்த இருவருக்கும் இடையே உள்ள ஸம்பந்தத்திற்கு (ரக்ஷகன், ரக்ஷிக்கப்படுபவன்) குற்றமே உண்டாகும். ”எழுத்து வாங்குகை” என்றால் தனக்குத் தொடர்பு இல்லாமல் நம்மைக் காப்பாற்றுபவன் பெயரை, தான் தொடர்பு இல்லாமல் காப்பாற்றப்பட்டதால் மார்பில் எழுதிக்கொள்ளுதல்.

55. இது தனக்கு ஸ்வரூபம் தன்னைப் பொறாதொழிகை.

**அவதாரிகை** - ஆனால் இது தனக்கு ஸ்வரூபமேதென்ன வருளிச்செய்கிறார் (இது தனக்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** – இந்த ப்ரபத்தியின் தன்மை என்ன என்ற கேள்விக்கு விடை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (இது தனக்கு ஸ்வரூபம்) என்றது - இப்ப்ரபத்தி தனக்கு அஸாதாரணாகாரமென்றபடி (தன்னைப் பொறாதொழிகையாவது) - உபாயவரணாத்மகமான தன்னை உபாயமென்ன ஸஹியாதபடியாயிருக்கை. அதாவது - ஆபாதப்ரதீதியி லொழிய உள்ளபடி நிரூபித்தால் ஸ்வஸ்மிந்நுபாயத்வ ப்ரதிபத்திக்கு யோக்யமாகமாட்டாதபடியிருக்கை யென்றபடி. அன்றிக்கே, (தன்னைப் பொறாதொழிகை) என்கிறவிடத்தில், உபாயத்வேந ப்ரதீதமான தன்னைப் பொறாதொழிகையென்று அநத்யாஹாரேண யோஜிக்கவுமாம்; இப்படி சொன்னாலும், ஸ்வஸ்மிந் நுபாயத்வப்ரதிபத்த் யஸஹத்வமே பொருளாமிறே.

**விளக்கம்** – ”இது தனக்கு ஸ்வரூபம்” என்றால் “இந்த ப்ரபத்திக்கே உரிய சிறப்புத்தன்மை” என்று பொருள். ”தன்னைப் பொறாதொழிகையாவது” என்றால் – உபாயமாக உள்ள (தன்னை) ப்ரபத்தியை உபாயம் என்று கூறினால், அப்படிக் கூறுவதைத் தாங்க இயலாத தன்மை என்று பொருள். ஆபாதப் பிரதீதி தவிர (ஆபாத ப்ரதீதி என்றால் ஒன்றை நன்றாக

உணர்ந்து அறிவதற்கு முன்பாக, அதனைப் பற்றிக் கேட்பதன் மூலம் உண்டாகும் ஞானம்) உள்ளபடி நிரூபித்தால் தன்னிடம் உபாயமாகும் தன்மை உள்ளது என்று சிந்தனையை ப்ரபத்தி ஏற்படுத்தாமல் இருப்பதாகும் (ப்ரபத்தியைப் பற்றி நன்கு உணர்ந்து அறிந்த பின்னர், அது உபாயம் அல்ல என்ற எண்ணம் உண்டாகும்; இந்த எண்ணத்தை ப்ரபத்தியே உண்டாகும்). அல்லது "தன்னைப் பொறாதொழிகையாவது" என்பதற்கு வேறுவிதமாகவும் பொருள் கூறலாம். உபாயமாகத் தோற்றம் அளிக்கவல்லபோதும் தன்னை உபாயமாக எண்ணுவதைப் பொறாது எனலாம். இப்படியாக அநத்யாகாரமாகப் பொருள் உரைக்கலாம் (ஒன்றை விளக்க மற்ற எதனையும் கூறாமல் அங்குள்ளவற்றை மட்டுமே கூறி விளக்குதல்). இப்படியாக விளக்கும் போதும் தன்னை உபாயம் என்று எண்ணுவதைப் பொறாது ஒழிகை என்று கொள்ளவேண்டும்.

56. அங்கம் தன்னையொழிந்தவற்றைப் பொறாதொழிகை.

**அவதாரிகை** - சரமச்லோகத்தில் இத்தை ஸாங்கமாக விதிக்கையாலே "யத் யத் ஸாங்கம் தத்தத் ஸாதநம்" என்கிற ந்யாமிதுக்கும் வாராதோவென்ன; அங்க ஸ்வரூபத்தை தர்சிப்பிக்கவே அந்த ந்யாயமிங்குவாராதென்று பார்த்து, இது தன்னையருளிச் செய்கிறார் (அங்கம்) என்று தொடங்கி.

**விளக்கம்** - சரமச்லோகம் இத்தகைய ப்ரபத்தி என்பதை அங்கமாக விதிக்கிறதே. ஆகவே, "எது அங்கத்துடன் உள்ளதோ அது உபாயம்" என்ற ந்யாயத்தின்படி ப்ரபத்தி உபாயம் ஆகிவிடாதோ? ஆகாது. "அங்கத்தின் தன்மை இதற்குக் கூறியதால் மட்டுமே இதற்கு அந்த ந்யாயம் பொருந்தாது" என்கிறது. அந்த அங்கத்தை இங்கு அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (தன்னை யொழிந்தவற்றைப் பொறாதொழிகையாவது) - ஸ்வீகாரரூபமான தன்னையொழிந்த சேதந ப்ரவ்ருத்திகளி லொன்றையும் ஸஹியாதபடி யிருக்கை. ஸாதநரூப ஸகல ப்ரவ்ருத்திகளினுடையவும் ஸவாஸநத்யாகமிறே யிதுக்கங்கம். "யத்யத் ஸாங்கம்" என்கிறவிடத்தில், ப்ரவ்ருத்தி ரூபாங்க ஸஹிதமானவற்றையிறே ஸாதநமாகச் சொல்லுகிறது; அப்படியன்றிக்கே, இதினுடைய வங்கம் நிவ்ருத்தி ரூபமாகையாலே; இது தானே யிதினுடைய வநுபாயத்வ ஸூசகமென்று கருத்து.

**விளக்கம்** – ”தன்னை யொழிந்தவற்றைப் பொறாதொழிகையாவது” என்பதன் மூலம் - எம்பெருமானைப் பற்றவேண்டும் என்ற நோக்கத்துடன் மக்கள் செய்கின்ற செயல்களில் தன்னைத் தவிர மற்ற எதனையும் ஏற்றுக் கொள்ள இயலாமல் இருப்பதே ப்ரபத்திக்கு அங்கமாக உள்ளது. ஆனால் சாதனம் என்ற பெயர் கொண்ட அனைத்தையும் அவற்றின் வாஸனையுடன் கைவிடுவது அல்லவோ ப்ரபத்திக்கு அங்கம் என்ற கேள்வி எழலாம். யத்யத் ஸாங்கம் என்னும்போது செயல் ரூபமாக உள்ள அங்கத்துடன் கூடியவற்றையே ஸாதனம் என்பர். ஆனால் ப்ரபத்தியின் அங்கம் என்பது செயல்களைச் செய்யாமல் இருப்பது என்ற காரணத்தினால் இந்த ப்ரபத்தி என்பது அந்த ந்யாயத்தின்படி ஸாதனம் (உபாயம்) ஆகாது என்று கருத்து.

## 57. உபாயம் தன்னைப் பொறுக்கும்.

**அவதாரிகை** - இதினுடைய வநுபாயத்வத்தை த்ருடீகரிக்கைக்காக ஸித்த ஸாத்யோபாயங்களின்படிகளைச் சொல்லி, அவையிரண்டையும் பற்ற விதுக்குண்டான வ்யாவ்ருத்தியையருளிச் செய்கிறார் (உபாயம்) என்று தொடங்கி, (பொறாது) என்னுமளவாக.

**விளக்கம்** – இத்தகைய ப்ரபத்தி என்பது உபாயம் ஆகாது என்பதை விளக்கும் பொருட்டு ஸித்தோபாயத்தின் (எம்பெருமானின்) தன்மை மற்றும் ஸாத்யோபாயத்தின் தன்மை (பக்தி, மனிதர்கள் மூலம் செய்யப்படுவது) ஆகிய இரண்டையும் கூறுகிறார். மேலும் இவற்றின் இடையே உள்ள வேறுபாட்டினையும் அருளிச்செய்கிறார்

**வ்யாக்யானம்** - (உபாயம் தன்னைப் பொறுக்கும்) என்றது - ஸித்தோபாயமான ஸர்வேச்வரன் இஷ்டாநிஷ்ட ப்ராப்தி பரிஹாரங்களிரண்டுக்கும் ஸ்வயமேவ நிர்வாஹகனா கையாலே, தன்னை யுபாயமென்றால் அதுக்குத் தகுதியாயிருக்கு மென்றபடி ”உபாயோபேயத்வே ததிஹ தவ தத்வம் நது குணௌ” என்று உபேயத்வத்தோ பாதி வஸ்துவுக்கு ஸ்வரூபமாயிறே உபாயத்வமுமிருப்பது. ”யேச வேதவிதோ விப்ரா யோசாத்யாத்மவிதோ ஜநா: தே வதந்தி மஹாத்மாநம் க்ருஷ்ணம் தர்மம் ஸநாதனம்”, “சரண்யம் சரணஞ்ச த்வாமாஹுர் திவ்யா மஹர்ஷய:”, ”அம்ருதம் ஸாதநம் ஸாத்யம் ஸம்பச்யந்தி மநீஷிண:” என்னக்கடவதிறே – (தன்னைப் பொறுக்கும்) என்கிற

விவ்வளவே சொல்லிவிடுகையாலே – தன்னை யொழிந்தவற்றைப் பொறாமை அர்த்தாத் ஸித்தம். இந்த ஸித்தோபாயம் ஸஹாயாந்தர ஸம்ஸர்க்காஸஹமாயிறே யிருப்பது, “இவ்வுபாய விசேஷம் ஸ்வவ்யதிரிக்தமா யிருப்பதொன்றை ஸஹியாமை யாலேயிறே அநுகூல்ய ஸங்கல்பாதிகளுக் குபாயாங்கத்வமன்றிக்கே, அவகாத ஸ்வேதம் போலே ஸம்பாவித ஸ்வபாவத்வமுண்டாகிறது” என்று இவ்வர்த்தத்தை பரந்தபடியிலே இவர்தாமே யருளிச்செய்தாரிறே.

**விளக்கம்** - “உபாயம் தன்னைப் பொறுக்கும்” என்பதன் மூலம் ஸித்தோபாயமாக உள்ள ஸர்வேச்வரன் தன்னை அண்டியவர்களின் விருப்பத்தை நிறைவேற்றுதல், அவர்களுக்கு எது விருப்பம் இல்லையோ அவற்றை விலக்குதல் ஆகிய இரண்டையும் செய்கிறான். இதன் காரணமாக, “எம்பெருமான் உபாயம்” என்று கூறினால், அவ்விதம் கூறப்படுவதற்கான தகுதி முழுவதும் கொண்டவனாக இருக்கிறான். இதனை ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் – உபாயோபேயத்வே ததிஹ தவ தத்வம் நது குணௌ - உபாயம் மற்றும் உபேயமாக உள்ள தன்மை ஆகிய இரண்டும் உனக்கு ஸ்வரூபங்கள்; அவை உனக்கு வந்த ஏறிய குணங்கள் அல்ல - என்கிறார். ஆக உபேயமாக உள்ள தன்மை போன்றே உபாயமாக உள்ள தன்மையும் எம்பெருமானின் ஸ்வரூபம் ஆகும். கீழே உள்ள வரிகள் காண்க:

- யேச வேதவிதோ விப்ரா யோசாத்யாத்மவிதோ ஜநா: தே வதந்தி மஹாத்மாநம் க்ருஷ்ணம் தர்மம் ஸநாதனம் – எந்த அந்தணர்கள் வேதம் அறிந்தவர்களாக உள்ளனரோ, எந்த மனிதர்கள் வேதாந்தம் அறிந்தவர்களோ அப்படிப்பட்டவர்கள் க்ருஷ்ணனையே எப்போதும் உள்ள மோக்ஷ ஸாதனம் என்று கொள்கின்றனர்.

- சரண்யம் சரணஞ்ச த்வாமாஹுர் திவ்யா மஹர்ஷய: – உன்னைக் காப்பாற்றுபவன் என்றும், உபாயம் என்றும் மஹரிஷிகள் கூறுகின்றனர்.

- அம்ருதம் ஸாதநம் ஸாத்யம் ஸம்பச்யந்தி மநீஷிண: - அனைத்தும் அறிந்தவர்கள் எம்பெருமானையே உபாயம் மற்றும் பலன் என்று காண்கின்றனர்.

ஆக இங்கு “தன்னை” என்று மட்டுமே கூறி நிறுத்தி வருவதால், “தன்னைத் தவிர மற்ற ஸாதனங்களை இவன் பொறுத்துக் கொள்வதில்லை” என்பது தெளிவாகிறது. இப்படிப்பட்ட ஸித்தோபாயம் என்பது மற்ற ஸாதனங்களின் சேர்க்கை என்பதைப் பொறுத்துக் கொள்ளாமல் உள்ளதாகும். இதனைப் பரந்தபடியில் - இவ்வுபாய விசேஷம் ஸ்வவ்யதிரிக்தமா யிருப்பதொன்றை ஸஹியாமை யாலேயிறே அநுகூல்ய ஸங்கல்பாதிகளுக் குபாயாங்கத்வமன்றிக்கே, அவகாத ஸ்வேதம் போலே ஸம்பாவித ஸ்வபாவத்வமுண்டாகிறது - இப்படிப்பட்ட ஸித்தோபாயமான எம்பெருமான் தன்னைத் தவிர மற்ற உபாயங்கள் எதனையும் பொறுத்துக்கொள்வதில்லை; இதனால் தான் நன்மை செய்தல் போன்ற பலவற்றையும் தனக்கு அங்கமாக வந்து ஏறிய தன்மை போன்று அல்லாமல், அவற்றைத் தனது ஸ்வரூபமாகவே கொண்டுள்ளான் - என்றது காண்க.

### 58. உபாயாந்தர மிரண்டையும் பொறுக்கும்.

**வ்யாக்யானம்** – (உபாயாந்தர மிரண்டையும் பொறுக்கும்) என்றது - ஸித்தோபாயேதரமான ஸாத்யோபாயம், ஸ்வபாரதந்த்ர்ய ஜ்ஞாரஹிதாராய் ஸ்வயத்நபாரா யிருப்பார்க்கு மோக்ஷ ஸாதநதயா சாஸ்த்ர விஹிதமாகையாலே ஸ்வஸ்மிந் உபாயத்வ ப்ரதிபத்தி ஸஹமுமாய் ஸ்வோத்பத்த்யாதிகளில் ப்ரவ்ருத்தி ரூபாங்க ஸாபேக்ஷமாகையாலே ஸ்வவ்யதிரிக்தங்களையும் ஸஹிக்குமதா யிருக்குமென்றபடி ”பக்த்யா லப்யஸ் த்வநந்ய்யா”, ”உபாய பரிகர்மித ஸ்வாந்தஸ்ய ஐகாந்திகாத்யந்திக பக்தியோகைக லப்யா”, ”ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு தபோ த்யாந ஸமாதிபி: நராணாம் க்ஷீணபாபாநாம் க்ருஷ்ணே பக்தி: ப்ரஜாயதே” என்னக் கடவதிறே.

**விளக்கம்** - “உபாயாந்தர மிரண்டையும் பொறுக்கும்” என்பது என்ன? இங்கு ஸித்தோபாயத்தைக் காட்டிலும் வேறுபட்ட ஸாத்யோபாயம் பற்றிக் கூறுகிறார். ஒரு சிலர் தாங்கள் யாருக்கு (எம்பெருமான்) வசப்பட்டவர்கள் என்ற ஞானம் இல்லாமல், தங்களது முயற்சிகளிலேயே தொடர்ந்து ஈடுபட்டபடி இருக்கக்கூடும். அவர்கள் மோக்ஷத்திற்கு ஒரு ஸாதனமாக விதிக்கப்பட்ட ஸாத்யோபாயத்தை உபாயமாக எண்ணக்கூடும். இப்படியாக அவர்கள் தன்னை உபாயமாக எண்ணுவதை அந்தச் ஸாத்யோபாயம் பொறுத்துக் கொள்ளும். இத்தகைய ஸாத்யோபாயம் என்பது, தன்னைப் பற்றி மனிதர்கள்

எண்ணுவதும், சிந்திப்பதும் ஆகிய செயல்கள் நிறைவேறச் செயல் வடிவமாக உள்ள கர்மம், ஞானம் போன்ற வற்றையே தனது அங்கமாக விரும்பி நிற்கும். ஆகவே தனக்கு வேறாக உள்ள மற்றவற்றையும் இத்தகைய ஸாத்யோபாயம் பொறுத்துக்கொள்ளும். கீழே உள்ள வரிகள் காண்க:

- கீதை – பக்த்யா லப்யஸ் த்வநந்யயா - மற்ற எதுவும் கலக்காத தூய பக்தியினால் அடையத்தக்கவன்
- ஆளவந்தாரின் ஆத்மஸித்தி – உபாய பரிகர்மித ஸ்வாந்தஸ்ய ஐகாந்திகாத்யந்திக பக்தியோகைக லப்யா – ஒருவன் கர்மம் மற்றும் ஞானம் மூலம் அலங்கரிக்கப்பட்ட மனம் கொண்டிருக்கக்கூடும். இத்தகைய தூய்மையான மனம் கொண்ட அவன் வேறு எந்த உபாயத்தையும் எண்ணாமல், இத்தகைய பக்திக்கு மேல் வேறு ஏதும் இல்லை என்று எண்ணியபடிச் செய்யும் பக்தியால் மட்டுமே எம்பெருமான் அடையப்படுகிறான்.
- ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு தபோ த்யாந ஸமாதிபி: நராணாம் க்ஷீணபாபாநாம் க்ருஷ்ணே பக்தி: ப்ரஜாயதே – ஆயிரம் பிறவிகளில் செய்யப்பட்ட தவம் என்ற கர்மம், ஞானம் மற்றும் பக்தியால் பாவங்கள் ஒருவனுக்கு விலகக்கூடும். அதன் பின்னரே அவனுக்கு க்ருஷ்ணனிடம் பக்தி உண்டாகிறது.

## 59. இது இரண்டையும் பொறாது.

**வ்யாக்யானம்** - (இதிரண்டையும் பொறாது) என்றது, ஸித்தோபாய வரண ரூபமாய், நிவ்ருத்தி ஸாத்ய ரூபமாய் அதிகாரி விசேஷணமாய், ஸ்வரூபாநதிரேகியா யிருக்கிறவிந்த ப்ரபத்தி, உபாயாஸஹமா யிருக்கு மென்றபடி. ஆகையால் ஸித்த ஸாத்யோபாய வ்யாவ்ருத்த வேஷையா யிருக்கிறவிந்த ப்ரபத்திக் குபாயத்வ மஸம்பாவித மென்ற தாய்த்து.

**விளக்கம்** - “இதிரண்டையும் பொறாது” என்பது என்ன? ஸித்தோபாயமான எம்பெருமானைப் பற்றக் கூடிய ரூபமாக, மற்ற அனைத்தையும் கைவிட்ட பின்னர் பெறக்கூடியதாக, அதிகாரிகளுக்கு ஏற்றதாக, ஸ்வரூபத்தில் நிலை பெறத்தக்கதாக உள்ள ப்ரபத்தி என்பது இரண்டையும் பொறுத்துக் கொள்ள இயலாததாக இருக்கும் என்று

கருத்து. எனவே ஸித்தோபாயம் மற்றும் ஸாத்யோபாயம் ஆகிய இரண்டைக் காட்டிலும் மாறுபட்ட தன்மையைக் கொண்டதாக் உள்ள ப்ரபத்திக்கு, உபாயமாக உள்ள தன்மை என்பது ஏற்புடையது அல்ல என்றாகிறது.

**வ்யாக்யானம்** - அன்றிக்கே (இது தனக்கு ஸ்வரூபம்) இத்யாதிக்கு – ஆனால் ஸாங்கமாக சாஸ்த்ர விஹிதமானவிந்த ப்ரபத்திக்கு ஸ்வரூபமேது, இதுக்குச் சொல்லுகிற அங்கந்தா னேதென்ன; அவையிரண்டையுமடையவே யருளிச் செய்கிறார் (இது தனக்கு) இத்யாதி வாக்யத்தாலே. ஆனால் தன்னைப் பொறுப்ப தேதென்னவருளிச் செய்கிறார் (உபாயம்) இத்யாதி. தன்னையும் தன்னையொழிந்தவற்றையும் பொறுக்குமதேதென்ன வருளிச் செய்கிறார் (உபாயாந்தரம்) இத்யாதி. இந்த ஸித்தஸாத்யோபாயங்க ளிரண்டிலும் இப்ப்ரபத்திக் குண்டான வ்யாவ்ருத்தியை தர்சிப்பியா நின்று கொண்டு உக்தார்த்தத்தை நிகமிக்கிறார் (இதிரண்டையும்) இத்யாதி - என்றிங்ஙனே ஸங்கதியாகவுமாம்.

**விளக்கம்** – அல்லது " இது தனக்கு ஸ்வரூபம்" என்று தொடங்கும் சூத்திரம் முதலாக உள்ள சூத்திரங்களுக்கு வேறு பொருள் உணரலாம். ஆனால், அங்கத்துடன் கூடியதாக உள்ளது என்று சாஸ்த்ரங்கள் மூலம் விதிக்கப்படும் ப்ரபத்தியின் தன்மை என்ன? அப்படி கூறப்படும் அங்கம் எது? – இதற்கான விடைகளை "இது தனக்கு" மற்றும், "அங்கம் தன்னை" ஆகிய இரண்டு சூர்ணைகள் மூலமாக அருளிச் செய்கிறார். மேலும் "தன்னையும், தன்னைத் தவிர உள்ள மற்றதையும் எது பொறுத்துக்கொள்ளும்?" என்ற கேள்விக்கு "உபாயாந்தரம்" என்ற சூர்ணையால் பதில் அருளிச் செய்கிறார். ஸித்தோபாயம், ஸாத்யோபாயம் ஆகிய இரண்டிலும் ப்ரபத்திக்கு உள்ள வேறுபாடு என்பதைக் காண்பிக்காமல் நின்றபடி தான் கூறிய பொருளை முடிக்கிறார்.

**வ்யாக்யானம்** - அதவா, இதினநுபாயத்வத்தை ஸாதிக்கைக்காக இதினுடைய ஸ்வரூபாங்கங்க ளிரண்டையும் தாமே யருளிச் செய்கிறார் (இது தனக்கு) இத்யாதி வாக்ய த்வயத்தாலே. இதினநுபாயத்வத்தை ஸ்புடமாக்குகைக்காக ஸித்தஸாத்யோபாயங்களின் படிகளை தர்சிப்பிப்போமென்று திருவுள்ளம் பற்றி, ப்ரதமம் ஸித்தோபாயத்தின் படியை அருளிச் செய்கிறார் (உபாயம்) இத்யாதியால். அநந்தரம், ஸாத்யோபாயத்தின் படியை யருளிச் செய்கிறார் (உபாயாந்தரம்) இத்யாதியாலே. இவையிரண்டிலும் ப்ரபத்திக்குண்டான வ்யாவ்ருத்தியை தர்சிப்பிக்கிறார் (இதிரண்டையும்) இத்யாதியால்,

என்றிங்ஙனே ஸங்கதியாகவுமாம். இவ்வுபய ஸங்கதிக்கும் வாக்கியங்களுக்கர்த்தம் பூர்வவத்.

**விளக்கம்** - அல்லது ப்ரபத்தி என்பது உபாயம் ஆகாது என்பதைத் தெளிவாக உணர்த்துவதற்காக இந்த ப்ரபத்தியின் தன்மை மற்றும் அங்கம் ஆகிய இரண்டையும் தாமே தாமே இங்கு அருளிச்செய்கிறார் எனலாம். இவற்றையே "இது தனக்கு" உள்ளிட்ட சூர்ணைகளில் கூறுகிறார். இத்தகைய ப்ரபத்தி உபாயம் இல்லை என்பதை உணர்த்தும் விதமாக ஸித்தோபாயம் மற்றும் ஸாத்யோபாயம் குறித்து முதலில் விளக்கத் திருவுள்ளம் பற்றினார். எனவே இவற்றில் முதலில் ஸித்தோபாயத்தின் தன்மையைக் காட்டுகிறார். இதனை "உபாயம்" என்ற சூர்ணையால் காண்பித்தார். அதன் பின்னர் "உபாயாந்தரம்" என்பதன் மூலம் ஸாத்யோபாயத்தின் தன்மையை உணர்த்தினார். இந்த இரண்டிலும் ப்ரபத்திக்கு உள்ள வேறுபாட்டினை "இது இரண்டையும்" என்பதன் மூலம் அருளிச் செய்கிறார்.

60. பலத்துக்கு ஆத்மஜ்ஞானமும் அப்ரதிஷேதமுமே வேண்டுவது.

**அவதாரிகை** - இப்படி இப்ப்ரபத்தியுபாயமல்லவாய் விட்டால், பலஸித்திக் கிவன் பக்கலிலும் சில வேண்டாவோவென்ன வருளிச்செய்கிறார் (பலத்துக்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** – ப்ரபத்தி என்பது உபாயம் அல்ல என்று கூறிவிட்டால், தகுந்த பலன் கிட்டுவதற்கு சேதனனிடம் வேறு ஏதாவது உபாயம் வேண்டும் அல்லவோ என்ற கேள்வி எழலாம். இதற்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – "பலத்துக்கு" என்றது – பல ஸித்திக்கென்றபடி. "ஆத்ம ஜ்ஞானமாவது" - ஸ்வஸ்வரூபஜ்ஞானம். அதாவது - ததேகசேஷத்வ ததேகரக்ஷ்யத்வங்களையறிகை. "அப்ரதிஷேதமாவது" – நிருபாதிக சேஷியாய் நிருபாதிக ரக்ஷகனானவவன் பண்ணும் ரக்ஷணத்தை விலக்காமை. அதாவது – ஸ்வரக்ஷணே ஸ்வாந்வய நிவ்ருத்தி. அவதாரணத்தால் – இவையிரண்டுமொழிய பின்னையொன்றும் வேண்டாவென்றபடி. சரமபதத்தில் சொல்லுகிற பலத்துக்கு, ப்ரதமபத்தில் சொல்லுகிற வாத்ம ஜ்ஞானமும், மத்யமபதத்தில் சொல்லுகிற அப்ரதிஷேதமுமிறே வேண்டுவது.

**விளக்கம்** – ”பலத்துக்கு” என்றால் “பலன் கிட்டுவதற்கு” என்று பொருள். “ஆத்மஜ்ஞாநம்” என்றால், தனது ஸ்வரூபத்தைப் பற்றிய ஞானம். இந்த ஞானம் என்பது எம்பெருமானுக்கு மட்டுமே அடிமைப்பட்டிருத்தல் மற்றும் அவனால் மட்டுமே நாம் காக்கப்படுகிறோம் என்று அறிவதாகும். ”அப்ரதிஷேதம்” என்றால் எந்தவிதமான கைம்மாறும், காரணமும் இன்றி நம்மைக் காப்பாற்றுகின்றபோது எம்பெருமானை விலக்காமல் இருத்தல்; நாமாகவே நம்மைக் காப்பாற்றிக் கொள்ள இயலும் என்பதான முயற்சியைக் கைவிடுதல். சூர்ணையில் உள்ள ஏவகாரம் (அப்ரதிஷிதமே என்பதில் உள்ள ஏவகாரம்) மூலம், இவை இரண்டும் இல்லை என்று கூறப்பட்டது. திருஅஷ்டாக்ஷரத்தில் உள்ள “நாராயணாய” என்ற இறுதிப் பதத்திற்குக் கூறப்படும் பலன் என்பது - முதலில் உள்ள ப்ரணவம் மூலம் உரைக்கப்படும் ஆத்மஞானம் கிட்டுதலும், நடுவில் உள்ள “நம” என்பதன் மூலம் உணத்தப்படும் விலக்காமை என்பதே ஆகும். இது போன்றே இங்கும் கொள்ளவேண்டும்.

61. அல்லாதபோது பந்தத்துக்கும் பூர்த்திக்கும் கொத்தையாம்.

**அவதாரிகை** - இப்படியன்றிக்கே, பலஸாதநமாகவிவனுஞ் சில செய்யவேணுமென்றால் வரும் தீங்கென்னென்ன வருளிச்செய்கிறார் (அல்லாத) என்று தொடங்கி.

**விளக்கம்** - மேலே கூறப்பட்டவற்றைத் தவிர்த்து இவனிடம் வேறு சில உபாயங்கள் இருத்தல் வேண்டும் என்று சிலர் கூறலாம். இவ்விதம் கொண்டால் விளையக்கூடிய தீமை என்ன என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – ”அல்லாதபோது” என்றது - இவ்வளவன்றிக்கே பலஹேதுவாக விவன் சில செய்யவேண்டும்போதென்றபடி. ”பந்தத்துக்கும் பூர்த்திக்கும் கொத்தையாகையாவது - இவனுடைய ரக்ஷணம் தன்பேறாம்படியான வவனுடைய நிருபாதிக நிரபேக்ஷோபாய த்வத்துக்கு அவத்யமாய்த் தலைக்கட்டுமென்கை.

**விளக்கம்** – “அல்லாதபோது” என்பதன் மூலம், ”மேலே கூறப்பட்டது தவிர்த்து பலன் அடைவதற்குச் சாதனமாக ஒருவன் வேறு ஏதாவது செய்ய முற்படும்போது” என்பது கூறப்பட்டது. “பந்தத்துக்கும் பூர்த்திக்கும் கொத்தை” என்பதன் மூலம் - சேதனனைப்

பாதுகாத்தல் என்பதைத் தனது பேறு என்று ஸர்வேச்வரன் உள்ளான்; சேதனன் தன்னைப் பற்ற எதனையும் அவன் எதிர்பாராமல் உள்ளான்; தானே வலியச்சென்று சேதனனுக்கு உபாயமாக நிற்கிறான்; இத்தகைய அனைத்தும் குற்றமாக முடிகின்ற நிலை உண்டாகும் - என்று கூறப்பட்டது.

62. ஆபத்தைப் போக்கிக்கொள்ளுகிறோமென்று ப்ரமித்து அத்தை விளைத்துக் கொள்ளாதொழிகையே வேண்டுவது.

**அவதாரிகை** - ஆனாலும் அநந்த க்லேச பாஜநமான ஸம்ஸாரஸாகரத்தில் அழுந்திக் கிடந்தலைகிற தன்னாபத்தை யுணர்ந்தால், ஆபத்ஸகனான வீச்வரனை ஸ்வ ப்ரபத்தியாலே வசீகரித்து, தத்ப்ரஸாதத்தாலே இத்தைக் கழித்துக் கொள்ளவேண்டாவோ வென்ன வருளிச்செய்கிறார் (ஆபத்தை) என்று தொடங்கி.

**விளக்கம்** - இந்த உலக வாழ்க்கை என்பது எல்லையற்ற துன்பங்களின் இருப்பிடமாக உள்ளது. இத்தகைய உலகில் ஸம்ஸாரம் என்ற கடலில் அழுந்திக் கிடக்கின்ற சேதனன் தனது துயரமான (ஆபத்தான) நிலையை எண்ணிப் பார்க்கிறான். உடனே இத்தகைய ஆபத்தை நீக்கவல்லவன் ஸர்வேச்வரன் மட்டுமே என்று அறிந்து, அவனைத் தனது ப்ரபத்தி மூலம் வசீகரம் செய்து, அவனது கடாக்ஷம் மூலமாகத் தனது ஆபத்தை உடனே போக்க முயலவேண்டாமோ என்ற கேள்வி எழலாம். இதற்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஸர்வேச்வரன் திருவடிகளிலே ப்ரபத்தி பண்ணி ஸம்ஸாரமாகிற ஆபத்தைப் போக்கிக்கொள்ளுகிறோமென்று, தான் பண்ணுகிற ப்ரபத்தியாலே தன்னாபத்தைப் போக்கிக்கொள்ளுகிறானாக ப்ரமித்து, ததேக பாரதந்த்ர்ய ரூப ஸ்வரூப ஹாநியாகிற ஆபத்தை விளைத்துக் கொள்ளாதொழிகையே தந்நிவ்ருத்திக்கு இவன் செய்யவேண்டுவதென்றபடி. ஓராபத்தைப் பரிஹரிக்கப்புக்கு ஓராபத்தை விளைத்துக்கொள்ளாதே, இவன் ஸ்வயத்நத்தில் நிவ்ருத்தனாயிருக்கவே எம்பெருமான் தானே ரக்ஷிக்குமென்று கருத்து. ”அத்தை” என்றது - ஆபத் ஸாமாந்யத்தைப் பற்ற; அல்லது, ப்ரக்ருதாபத்து தன்னையே பராமர்சித்தபடி யன்று.

**விளக்கம்** - ஸர்வேச்வரனின் திருவடிகளில் நாம் ப்ரபத்தி செய்துவிட்டோம்; இதனால் ஸம்ஸார வாழ்க்கையின் ஆபத்துக்களை நீக்கிக்கொண்டோம் - என்று தான் செய்த ப்ரபத்தியால் மட்டுமே தனது ஆபத்து நீங்கியது என்று சிலர் மயங்கியபடி இருக்கக்கூடும். அவ்விதம் இருத்தல் கூடாது. உண்மையில் ஸம்ஸாரத்தின் மூலம் உண்டாகும் ஆபத்து நீங்க வழி என்னவென்றால் - ஸர்வேச்வரன் ஒருவனுக்கு மட்டுமே தான் அடிமைப் பட்டவன் என்று உள்ள நிலைமைக்குப் பங்கம் உண்டாகாமல் பார்த்துக் கொள்ளுகிற நிலையே ஆபத்து நீங்க வழியாகும். அதாவது, ஓர் ஆபத்தை நீக்கிக் கொள்ள எண்ணி மற்றோர் ஆபத்தை இவன் தனக்கு உண்டாக்கிக் கொள்ளாமல் தடுக்கும் பொருட்டு, இவன் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள தானே முயலாதபடி, எம்பெருமான் காத்து நிற்பான் என்று இருத்தல் வேண்டும். சூர்ணையில் உள்ள "அத்தை" என்பது - மேலே கூறப்பட்ட ஸம்ஸார ஆபத்தை மட்டுமே கூறவில்லை, பொதுவாக உணர்த்தப்பட்டது.

63. ரக்ஷணத்துக்கபேக்ஷிதம் ரக்ஷயத்வாநுமதியே.

**அவதாரிகை** – ஆனாலும், "ரக்ஷ்யாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே" என்று ரக்ஷகனான ஸர்வேச்வரன் ரக்ஷ்யபூதனான விச்சேதநனுடைய வபேக்ஷையைக் பார்த்திருக்கு மென்கையாலே, அவன் பண்ணும் ரக்ஷணத்துக்கு இவனுடைய வபேக்ஷையும் வேண்டியன்றோ இருக்கிறதென்ன வருளிச்செய்கிறார் (ரக்ஷணத்துக்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** - ஆனால் லக்ஷ்மீதந்த்ரம் - ரக்ஷ்யாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே - பாதுகாக்கப்படுகின்றவனின் வேண்டுதலை எதிர்பார்த்தபடி - என்று கூறுவதற்கு ஏற்ப, காப்பவனாகிய ஸர்வேச்வரன், தன்னால் காக்கப்படுகின்ற சேதனனின் "என்னைக் காப்பாற்றவேண்டும்" என்ற வேண்டுதலை எதிர்பார்க்கிறான். ஆக அவன் காப்பாற்றுவதற்கு இவனுடைய வேண்டுதலும் தேவையாக உள்ளது அல்லவோ என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, நிருபாதிக ரக்ஷகனானவன் பண்ணும் ரக்ஷணத்துக்கு இச்சேதநன் பக்கல் வேண்டுவது, நீ எனக்கு ரக்ஷ்யமென்றால் அல்லே னென்னாதே தன்னுடைய ரக்ஷயத்வத்தை யிசையு மிவ்வளவே என்கை. "ரக்ஷயாபேக்ஷாம்" என்கிறவிடத்தில் சொல்லுகிற வபேக்ஷை, ரக்ஷ்யத்வாநுமதி த்யோதகமித்தனை என்று

கருத்து. “யாச்நா ப்ரபத்தி: ப்ரார்த்தநா மதி:” என்கிற ஸ்வீகாரத்தை அப்ரதிஷேத த்யோதக மென்றிறே இவர்தா மருளிச்செய்தது.

**விளக்கம்** – எந்த ஒன்றையும் எதிர்பாராமல் காக்கின்ற ஸர்வேச்வரன், சேதனனைக் காப்பாற்றும்போது சேதனனிடம் இருக்கவேண்டியது என்னவென்றால் - ஸர்வேச்வரன் இவனிடம், ”நீ என்னால் பாதுகாக்கப்படுபவன்” என்று கூறும்போது, இவன் எம்பெருமானிடம், ”அல்லேன்” என்று மறுக்காமல், தான் பாதுகாக்கப்படும் பொருளாக இருப்பதை ஒப்புக் கொள்ளுதலே ஆகும். ரக்ஷயாபேக்ஷாம் - பாதுகாக்கப்படும் சேதனனின் விருப்பத்தை - என்கிற வரியில் கூறப்படும் "விருப்பம்” என்பது, எம்பெருமானால் தான் காக்கப்படுவதை ஏற்றுக்கொண்டு இருப்பதே ஆகும். லக்ஷ்மீ தந்த்ரத்தில் உள்ள - யாச்நா ப்ரபத்தி: ப்ரார்த்தநா மதி: - வேண்டுதல் வடிவான ப்ரபத்தி, வேண்டுதலுடன் கூடிய புத்தி ஆகிய இரண்டையும் ஏற்பது பற்றி இவரே (ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர்) முமுக்ஷுப்படி சூர்ணை 233-ல் அருளிச்செய்தார் அல்லவோ?

64. எல்லா வுபாயத்துக்கும் பொதுவாகையாலும் சைதந்யகார்ய மாகையாலும், ப்ராப்தி தசையிலுா மநுவர்த்திக்கையாலும், ஸ்வரூபாதிரேகி யல்லாமையாலும், அசித்வ்யாவ்ருத்த வேஷத்தை ஸாதநமாக்க வொண்ணாது.

**அவதாரிகை** - இப்படி அநுமதி ஸாபேக்ஷனாய் ரக்ஷிக்குமாகில் இவ்வநுமதிதான் ஸாதந மாகாதோ வென்ன வருளிச் செய்கிறார் (எல்லாம்) என்று தொடங்கி.

**விளக்கம்** - “இது போன்று சேதனனின் அனுமதியை எதிர்பார்த்தபடி நின்று மட்டுமே ஸர்வேச்வரன் ஒருவனைக் காப்பாற்றுவான் என்றால், அத்தகைய அனுமதி என்பது எம்பெருமானை அடையச் செய்யும் ஸாதனமாகிவிடாதோ” என்று கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – ”எல்லாவுபாயத்துக்கும் பொதுவாகையாவது” – போக மோக்ஷோபாயங்களிலேதேனு மொன்றிலே யதிகரிக்குமவனுக்கும், நீ யிவ்வுபாயத்தை யநுஷ்டி என்றால், அப்படியே செய்கிறேன் என்னு மநுமதி பூர்வகமாக வதிலிழிய வேண்டுகையாலே, ஸகலோபாய ஸாதாரணமாயிருக்கை. இத்தால் ஓரிடத்திலும்

இவ்வநுமதிக்கு அதிகாரி விசேஷணத்வ மொழிய, பல ஸாதநத்வமில்லாமை காட்டப்பட்டது. "சைதந்ய கார்யமாகையாவது" ரக்ஷ்யத்வம் சேதநாசேதந ஸாதாரணமா யிருக்கச்செய்தே, ஜ்ஞாந சூந்யமாகையாலே அவ்வாகாரத்தை யறிகைக்கு யோக்யமல்லாத அசேதநம் போலன்றிக்கே, ஜ்ஞாநாச்ரய பூதனாகையாலே யத்தை யறிகைக்கு யோக்யனா யிருக்கிற விச்சேதநன் பக்கலுண்டான வநுமதி, இவனுடைய ஜ்ஞாந கார்யமாய்க் கொண்டு வந்ததாயிருக்கை. இத்தால் – இவ்வநுமதி சேதநனான வாசியைப் பற்ற வந்ததாகையாலே, ஸாதந கோடியில் அந்வயியா தென்றபடி. "ப்ராப்தி தசையிலுமநுவர்த்திக்கையாவது" உபாய தசையளவி லன்றிக்கே உபேய தசையிலும், அவன் வ்யாமோஹாநு குணமாகக் கொள்ளும் விநியோக விசேஷங்களில், திருவுள்ளமானபடி கொண்டருளவேணு மென்னு மநுமதி யிவனுக்கு நடந்து செல்லுகை. இத்தால் ஸாதநமாகில் பல ஸித்தியளவிலே மீள வேணுமென்று கருத்து. "ஸ்வரூபாதிரேகியல்லாமையாவது" – சேஷி செய்யுமதுக் குடன்பட்டிருக்கை சேஷத்வ பாரதந்த்ர்ய கார்யமாகையாலே இவ்வநுமதி ஸ்வரூபத்துக்குப் புறம்பன்றிக்கே ஸ்வரூபமா யிருக்கை, இத்தால் ஸாதநமாகில் ஸ்வரூபாதிரேகியாயிருக்க வேணுமென்று கருத்து. "அசித் வ்யாவ்ருத்த வேஷமாவது" - ஜ்ஞாத்ருத்வத்தாலே ஜ்ஞாந சூந்யமான வசித்தில் வேறுபட்டிருக்கிற வாத்மாவினுடைய வாகாரம். இவ்விடத்தில் அவ்வாகாரமாவது ஜ்ஞாநகார்யமானவநுமதி. இத்தை "ஸாதநமாக்கவொண்ணாது" என்றது - இப்படி இதினுடைய அஸாதநத்வ ஹேதுக்கள் அநேகமுண்டாகையால் இத்தை ஸாதநமாகக் கற்பிக்கப் போகாதென்றபடி. "அசித் வ்யாவ்ருத்தி வேஷம்" என்று பாடமாகில், ஜ்ஞாந சூந்யமான வசித்திற் காட்டி லாத்மாவுக்குண்டான ஜ்ஞாத்ருத்வரூப வ்யாவ்ருத்தியின் வேஷமான வநுமதியை என்று சப்தார்த்தம்.

**விளக்கம்** - "எல்லாவுபாயத்துக்கும் பொதுவாகையாவது" என்பது - ஒருவன் போக உபாயம், மோக்ஷ உபாயம் ஆகிய இரண்டில் ஏதேனும் ஒன்றைக் கைக்கொள்ள முயல்கிறான் என்று வைப்போம். அவனிடம், "நீ இந்த உபாயத்தைக் கைக்கொள்வாய்", என்று கூறினால் அவன், "அப்படியே செய்கிறேன்", என்று கூறுகிறான். அத்தகைய அனுமதியை முன்னிட்டுக்கொண்டு அந்த உபாயத்தில் இறங்குகிறான். இது அனைத்து உபாயங்களுக்கும் பொதுவானதே ஆகும். இதன் மூலம் இத்தகைய அனுமதி என்பது அந்த அதிகாரிக்கு விசேஷமாக உள்ள தன்மை என்பது மட்டுமே கூறப்பட்டது அல்லாமல், பலன் அடைய வைக்கும் ஸாதனமாக உரைக்கப்படவில்லை.

“சைதந்ய கார்யமாகையாவது” என்பது என்ன? பாதுகாக்கப்படும் பொருள் என்னும் தன்மை அறிவுள்ள பொருள்கள் மற்றும் அறிவற்ற பொருள்கள் ஆகிய இரண்டிற்கும் பொதுவானதே ஆகும். “தாங்கள் காக்கப்படுகிறோம்” என்னும் அறிவானது, அறிவற்ற பொருள்களுக்கு ஏற்படத் தகுதியில்லாமல் உள்ளது. ஆனால் அறிவுள்ள சேதனன் ஒருவனுக்கு இத்தகைய அறிவு, ஞானத்தின் இருப்பிடமாக உள்ளதால், அவனுக்கு ஏற்படும் தகுதி உள்ளது. இதனால் இவனது அனுமதி என்பது இவனுடைய ஞானத்தின் காரணமாக வந்தது என்று கொள்ளப்படும். ஆகவே இத்தகைய அனுமதி இவனுடைய அறிவுள்ள தன்மை என்பதான வேற்றுமையின் அடிப்படையில் வந்ததால், இதனை ஸாதனம் என்று கொள்வதில்லை.

“ப்ராப்தி தசையிலுமநுவர்த்திக்கையாவது” என்பது என்ன? உபாய நிலையில் மட்டுமே அல்லாமல் உபேய நிலையிலும் ஸர்வேச்வரன் தனது எத்தகைய நிலையிலும், ”உனது திருவுள்ளத்தின்படி என்னைக் கொள்வாயாக” என்னும் அனுமதியானது இவனுக்கு நடந்து செல்லுகை என்பதாகும். ஆக அனுமதியை ஸாதனம் என்று கொண்டால், பலன் கிட்டிய அளவில் அனுமதியை நிறுத்தவேண்டும் என்றாகிவிடும். ”ஸ்வரூபாதிரேகியல்லாமையாவது” என்பது என்ன? எஜமானன் என்ன செய்கிறானோ அதற்கு உடன்பட்டிருத்தல் என்பது, அந்த எஜமானனுக்கு மட்டுமே வசப்பட்டிருத்தல் என்னும் தன்மை கொண்ட அடிமைத்தனத்தின் காரணமாக உண்டாவதாகும். இத்தகைய நிலையில் அனுமதி என்பது, அடிமைத்தனத்தின் ஸ்வரூபத்திற்குப் புறம்பாக இல்லாமல், அடிமைத்தனத்தின் ஸ்வரூபமாகவே உள்ளது என்று கருத்து. ஆக அனுமதி என்பது ஸாதனமாக இருப்பின், அது அடிமைத்தனத்தின் ஸ்வரூபத்திற்குப் புறம்பாகிவிடும் என்று கொள்ளவேண்டும்.

“அசித் வ்யாவ்ருத்த வேஷமாவது” என்பது என்ன? ஞானம் என்பது இல்லாமல் உள்ள அசித்தைக் காட்டிலும் ஞானமயமான தன்மை காரணமாக வேறுபட்டுள்ள ஆத்மா என்று கருத்து. இத்தகைய ஆத்மாவின் அந்தத் தன்மை என்பது ஞானத்தின் செயலான அனுமதியே ஆகும்.

இதனை "ஸாதநமாக்கவொண்ணாது" என்று ஏன் கூறப்பட்டது என்றால் - இப்படியாகப் பலவிதமான காரணங்களால் இந்த அனுமதி என்பது ஸாதனமாக இருக்க இயலாது என்று கூறப்பட்டதால், இத்தகைய அனுமதி என்பதை ஸாதனமாக ஏற்க இயலாது.
"அசித் வ்யாவ்ருத்தி வேஷம்" என்று சூர்ணையைச் சிலர் படிப்பர். இப்படிக் கொண்டால் - ஞானம் அற்ற அசித்தைக் காட்டிலும் ஆத்மாவிற்கு உள்ள அறியும் தன்மை என்ற வேறுபாட்டின் வெளிப்பாடான அனுமதி - என்று கொள்ளவேண்டும்.

65. அசித் வ்யாவ்ருத்திக்கு ப்ரயோஜநம், உபாயத்திலுபகார ஸ்ம்ருதியும் உபேயத்திலுகப்பும்.

**அவதாரிகை** - ஆனால் இவ்வசித் வ்யாவ்ருத்தி தனக்கொரு ப்ரயோஜநம் வேண்டாவோ வென்ன வருளிச்செய்கிறார் (அசித் வ்யாவ்ருத்திக்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** – என்றாலும் அசித்தைக் காட்டிலும் மாறுபட்டுள்ள இந்தத் தன்மைக்கு (ஆத்மாவை அறியக்கூடிய தன்மை) ஏதேனும் பயன் இருக்கவேண்டும் அல்லவா என்னும் கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (உபாயத்திலுபாகார ஸ்ம்ருதியாவது) "என்னைத் தீமனங்கெடுத்தாய்" , "மருவித்தொழும் மனமே தந்தாய்" என்கிறபடியே ஸித்தோபாயமான வெம்பெருமான் தன் திறத்தில் பண்ணின உபாகாரங்களை யநுஸந்திக்கை. (உபேயத்திலுகப்பாவது) அவன் திருவடிகளில் தான் பண்ணும் கைங்கர்யங்களில் "உகந்து பணி செய்து" என்கிற உகப்பும், அத்தாலவனுக்கு விளைகிற ப்ரீதியைக் கண்டு தனக்கு விளைகிற ப்ரீதியும்.

**விளக்கம்** – "உபாயத்திலுபாகார ஸ்ம்ருதியாவது" என்பது: திருவாய்மொழி (2-7-8) - என்னைத் தீமனங்கெடுத்தாய், திருவாய்மொழி (2-7-7) - மருவித்தொழும் மனமே தந்தாய் – என்று கூறுவதற்கு ஏற்ப, ஸித்தோபாயமாக உள்ள ஸர்வேச்வரன் நமக்காகச் செய்த உபகாரங்களை எண்ணிப் பார்த்தபடி இருத்தல் ஆகும். "உபேயத்திலுகப்பாவது" என்பது: அவன் திருவடிகளில் நாம் செய்கின்ற கைங்கர்யங்களில் திருவாய்மொழி (10-8-10) - உகந்து பணி செய்து – என்று கூறுவதற்கு ஏற்ப மகிழ்ச்சியும், இதனால் அவனுக்கு உண்டாகின்ற ப்ரீதியைக் கண்டு நமக்கு அவன் மீது ஏற்படும் ப்ரீதியும் கூறப்படுகிறது.

66. "உன்மனத்தா லென்னினைந் திருந்தாய்" என்கிறபடியே ப்ராப்திக்கு உபாயம் அவன் நினைவு.

**அவதாரிகை** - இப்படி இவன் பக்கலுள்ளதொன்று முபாயமன்றாகில் இவனுக்கு தத் ப்ராப்த்யுபாயந்தா னேதென்ன வருளிச்செய்கிறார் (உன் மனத்தால்) என்று தொடங்கி.

**விளக்கம்** - இவ்விதம் சேதனன் பக்கம் உள்ள எதுவும் சேதனன் அவனை அடையும் உபாயம் அல்ல என்றால், அவனை அடையும் வழி என்ன என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது, இத்தலையிலுள்ளதொன்றும் பேற்றுக்குபாய மல்லாமையாலே, "உன் மனத்தாலென்னினைந்திருந்தாய்" என்று – கை கழிந்தவற்றுக்குமொரு போக்கடி பார்த்திருக்கக் கடவ உன் திருவுள்ளத்தால் நினைத்திருந்ததென்னென்று, ஹிதைஷியான அவன் நினைவே உபாயமென்று ஆழ்வாரநுஸந்தித்தபடியே, அவனை ப்ராபிக்கைக்குபாயம் – ஸர்வஜ்ஞனாய் ஸர்வ சக்தியாய் ப்ராப்தனாய் பரமதயாளுவாய் இருக்கிற அவனுடைய இச்சேதநோஜ் ஜீவநார்த்தமான நினைவென்றபடி.

**விளக்கம்** - பெரியதிருமொழி (12-7-1) - உன் மனத்தால் என்னினைந்திருந்தாய் - என்று கூறுவதற்கு ஏற்ப, "எதனாலும் காப்பாற்ற இயலாது என்று கைவிட்ட நிலையிலும் ஏதேனும் உதவ இயலுமா என்று உனது மனதால் நினைப்பது என்னே குணம்" என்று நமது நலத்தை எண்ணியபடி எம்பெருமான் உள்ளான். நம்மிடம் உள்ள எதுவும் இப்படிப்பட்ட இவனை அடையும் பேறு என்பதற்கான உபாயம் அல்லாத காரணத்தினால், அவனது நினைவு மட்டுமே உபாயம் என்று திருமங்கையாழ்வார் அருளிச்செய்தது போன்று, அவனது நினைவு மட்டுமே அவனை அடைவதற்கான உபாயம் ஆகிறது. அனைத்தும் அறிந்தவனாக, அனைத்து வல்லமையும் கொண்டவனாக, நமக்கு ஸம்பந்தம் உடையவனாக, பரம தயாளுவாக உள்ள அவன் இந்தச் சேதனனைப் பற்றி எண்ணுவதே உய்வதற்கான உபாயம் என்று கொள்க.

67. அதுதானெப்போதுமுண்டு.

**அவதாரிகை** – அந்நினைவுதானவனுக்கெப்போதுண்டாவ தென்னவருளிச் செய்கிறார் (அதுதானெப்போதுமுண்டு) என்று தொடங்கி.

**விளக்கம்** - அப்படிப்பட்ட நினைவு எம்பெருமானுக்கு எப்போது உண்டாகும் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – "எப்போதும்" என்றது, இவன் யாதானும் பற்றி நீங்கித் திரிகிற காலத்தோடு இன்றோடு வாசியற ஸர்வ காலத்திலுமென்றபடி.

**விளக்கம்** - "எப்போதும்" என்பதன் மூலம் உணர்த்தப்பட்டது என்ன? திருவிருத்தம் (96) – யாதானும் பற்றி நீங்கித் திரிகிற என்பதற்கு ஏற்ப வேறு உபாயங்களைப் பற்றி, அதன் பின்னே சென்ற காலம் தொடக்கமாக, எம்பெருமானே கதி என்று வந்து நின்ற காலம் முடிய, எப்போதும் வேறுபாடு காணாமல் அவன் சேதனனை எண்ணியபடி உள்ளான் என்று கருத்து.

68. அது பலிப்பது இவன்னினைவு மாறினால்.

**அவதாரிகை** – ஆனால் அது இந்நாள்வரை பலியாதிருப்பானென்னென்ன வருளிச் செய்கிறார் (அது பலிப்பது இவன்னினைவு மாறினால்) என்று தொடங்கி.

**விளக்கம்** – ஆயினும் அத்தகைய எம்பெருமானின் நினைவு இதுநாள் வரை பலிக்காமல் உள்ளதற்கு என்ன காரணம் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, அவன் நினைவு இவனுக்குக் கார்யகரமாவது, இவனுடைய ஸ்வரக்ஷண சிந்தை மாறின காலத்திலென்றபடி.

**விளக்கம் -** எம்பெருமானின் நினைவு சேதனனுக்கு எப்போதும் பலன் அளிக்கும் என்றால் சேதனன், "நானே என்னைப் பாதுகாத்துக்கொள்வேன்" என்று எண்ணுகின்ற சிந்தனை நீங்கும் நேரத்தில் ஆகும்.

69. "அந்திம காலத்துக்குத் தஞ்சம், இப்போது தஞ்சமென் என்கிற நினைவு குலைகை" என்று ஜீயரருளிச் செய்வர்.

**அவதாரிகை -** இவ்வர்த்தத்தினுடைய ஆப்த்யர்த்தமாக நஞ்சீயர் வார்த்தையையருளிச் செய்கிறார் (அந்திம காலத்துக்கு) என்று தொடங்கி.

**விளக்கம் -** மேலே கூறப்பட்ட சூர்ணையின் பொருளானது நம்பகத் தன்மை நிறைந்தது என்று உணர்த்தும் விதமாக நஞ்சீயரின் சொற்களை இங்கு அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** அதாவது நஞ்சீயர், தம்முடைய ஸ்ரீபாதத்திலேயுள்ளாரொரு ஸ்ரீவைஷ்ணவரை நோவறிகைக்காகச் சென்றெழுந்தருளியிருக்கிறவளவிலே, அந்த ஸ்ரீவைஷ்ணவர், "அடியேனுக்கு அந்திம காலத்துக்குத் தஞ்சமாயிருப்பதொன் றருளிச் செய்யவேணும்" என்ன, "அந்திம காலத்துக்குத் தஞ்சம் நமக்கிப்போது தஞ்சமென் என்கிற தன்னுடைய ஸ்வரக்ஷண சிந்தை குலைகை காணும்" என்றருளிச் செய்த வார்த்தை. ஆகையாலே, ஈச்வரன் இவ்வாத்மோஜ்ஜீவநத்துக்குக் குறுப்பாகப் பண்ணும் சிந்தை பலிப்பது இவனுடைய ஸ்வரக்ஷண சிந்தை மாறினாலென்றதாய்த்து.

**விளக்கம் -** நஞ்சீயர் தனது சிஷ்யர்களில் ஒருவருக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டுள்ளது என்று அறிந்து, அவரைக் காண்பதற்காகச் சென்றார். அப்போது அந்த சிஷ்யர் அவரிடம், "அந்திம காலத்தில் எனக்குத் தஞ்சமாகப் பற்றுவதற்கு ஏற்ற ஒன்றை அருளிச்செய்ய வேண்டும்", என்றார். இதற்கு நஞ்சீயர், "அந்திம காலத்தில் எனக்குத் தஞ்சம் எது, இப்போது எனக்குத் தஞ்சம் எது என்ற வேறுபாட்டை விலக்குவாயாக. இப்போது உன்னை நீயே காத்துக் கொள்ள இயலும் என்ற சிந்தனை இருக்கின்ற காரணத்தினால் அல்லவோ இப்படி வினவுகிறீர்? இதனை நீக்குவாயாக", என்றார். ஆக சேதனன் உய்யவேண்டும் என்பதற்கு உறுப்பாக எம்பெருமான் ஜீவனைப் பற்றி எண்ணி இருத்தல்

என்பது எப்போது பலன் அளிக்கும் என்றால், தன்னைப் பாதுகாத்துக் கொள்ளுதல் என்ற எண்ணம் ஜீவனிடம் நீங்கினால் மட்டுமே ஆகும்.

70. ப்ராப்தாவும் ப்ராபகனும் ப்ராப்திக்குகப்பானுமவனே.

**அவதாரிகை** - ப்ராபகன் ஈச்வரனானாலும் ப்ராப்தாவும் ப்ராப்திக்குகப்பானும் இவனன்றோ, ஆனபின்பு இவன்னினைவையிப்படி நேராகத் துடைக்கலாமோ வென்ன அருளிச்செய்கிறார் (ப்ராப்தாவும்) என்று தொடங்கி. அன்றிக்கே, இச்சேதநன் கையிலுள்ளவற்றில் உபாயத்பகந்தமறத் துடைத்து ஈச்வரனை உபாயமென்று நிஷ்கர்ஷித்தபோதே, ப்ராப்த்ருத்வமும் ப்ராப்தியில் வருமுகப்பும் இவனதன்றிக்கே, உபாய பூதனான ஈச்வரனதேயாய்ப் பலித்து விடுகையாலே (ப்ராப்தாவும் ப்ராபகனும் ப்ராப்திக்கு உகப்பானுமவனே) என்று நிகமித்தருளுகிறாராகவுமாம்.

**விளக்கம்** – “ எம்பெருமானை அடைய வைப்பது” என்ற செயலைச் செய்வது (ப்ராபகன்) எம்பெருமானே ஆவான். ஆனாலும் அவனை அடைகின்றவனும் (ப்ராப்தா), அப்படி அடைந்த காரணத்தினால் (ப்ராப்தி = அடைதல்) மகிழ்வதும் எம்பெருமானை அடைந்த சேதனன் அல்லவோ என்று கேள்வி எழலாம். இதற்கு இந்தச் சூர்ணையில் விடை அளிக்கிறார். அல்லது வேறுவிதமாகவும் அவதாரிகையின் பொருள் கொள்ள இயலும். சேதனனிடம் எம்பெருமானை அடைகின்ற செயலுக்கான உபாயம் ஏதும் இல்லை என்று முடிவு செய்யக்கூடும். அந்த நிலையில் அடையும் தன்மை மற்றும் அப்படி அடைவதன் மூலம் ஏற்பட்ட மகிழ்ச்சி ஆகிய இரண்டும் சேதனனுக்கு உடையது அல்ல, அவை உபாயமாக உள்ள ஸர்வேச்வரனுக்கு உள்ள தன்மைகள் என்றாகிறது. எனவே எம்பெருமானே ”ப்ராப்தா, ப்ராபகன், ப்ராப்திக்கு உகப்பவன்” என்றாகிறது.

**வ்யாக்யானம்** - ப்ராப்தா அவனாகையாவது “ஸ்வத்வமாத்மநி ஸஞ்ஜாதம் ஸ்வாமித்வம் ப்ரஹ்மணி ஸ்திதம்” என்கிற ஸ்வதஸ் ஸித்தமான ஸ்வஸ்வாமித்வ ஸம்பந்தமடியாக, உடைமையை ப்ராபிக்குமுடையானைப்போலே இவ்வாத்மாவை ப்ராபிப்பான் தானாயிருக்கை. ப்ராபகன் அவனாகையாவது - தான் இவனை ப்ராபிக்குமிடத்தில் ப்ராப்திக்கு உபாமும், ஸர்வஜ்ஞத்வ ஸர்வசக்தித்வ ஸத்ய ஸங்கல்பத்வாதி குணவிசிஷ்டனாய் நிரங்குச ஸ்வதந்த்ரனான தானாயிருக்கை. ப்ராப்திக்குகப்பான் அவனாகையானது - ஸ்வத்தினுடைய லாபத்திலே தத் போக்தாவான ஸ்வாமி ஹ்ருஷ்டனாமாப்போலே, இவனை ப்ராபித்தால் ப்ராபிக்கப் பெற்றோமே! என்று

உகப்பானும் இவ்வாத்மாவுக்கு நித்யபோக்தாவான தானாயிருக்கை. இவை மூன்றும் (அவனே) என்கிற அவதாரணத்தாலே – இவற்றிலிவனோடு அந்வயிப்பதொன்றுமில்லையென்கை. இதில் (ப்ராப்தாவும் ப்ராபகனும் அவனே) என்கையாலே - இவனுக்கு ஸ்வயத்நத்திலே அந்வயமில்லையென்னுமிடமும், (ப்ராப்திக்கு உகப்பானுமவனே) என்கையாலே ஸ்வப்ரயோஜநத்தில் யெல்னுமிடத்தில் அந்வயமில்லையென் னுமிடமும் ஸித்தமாய்த்து.

**விளக்கம்** - எம்பெருமான் ப்ராப்தா(அடைகிறவன்) ஆவது எப்படி? மஹாபாரதம் - ஸ்வத்வமாத்மநி ஸஞ்ஜாதம் ஸ்வாமித்வம் ப்ரஹ்மணி ஸ்திதம் - ஸர்வேச்வரனுக்கு உரிய சொத்தாக இருப்பது என்னும் தன்மை ஆத்மாவிடம் உள்ளது, இத்தகைய சொத்தின் எஜமானனாக இருக்கும் தன்மை என்பது ப்ரஹ்மமாகிய நாராயணனிடம் உள்ளது - என்றது காண்க. இப்படியாக இயற்கையாகவே எம்பெருமானின் “உடைமையை உடையவன்” என்ற தொடர்பு காரணமாகத் தனக்கு உரியதை அடைபவன் போன்று ஆத்மாவை அடைபவனாக உள்ளான்.

எம்பெருமான் ப்ராபகன் (அடைவிப்பவன்) ஆவது எப்படி? எம்பெருமானாகிய தான் ஜீவனை அடைகின்றபோது அடைய வைக்கும் உபாயமும்; அனைத்தும் அறிந்தவன், அனைத்து வலிமையும் கொண்டவன், ஸத்யஸங்கல்பன் போன்ற குணங்களுடன் எந்தவிதமான இடையூறும் இல்லாத பரிபூர்ண சுதந்திரமும் கொண்டவனாக இருத்தல் மூலம் ஆகும்.

எம்பெருமானே ப்ராப்திக்கு உகப்பவன் என்பது எப்படி? தனக்கு உரிய பொருள் ஒன்றை அடையும்போது, அதாவது ஜீவனை அடையும்போது "இவனை அடைந்துவிட்டோம்” என்று எம்பெருமான் மகிழ்கிறான். இத்தகைய ஆத்மாவை எப்போதும் அனுபவித்தபடி உள்ளான். இதனால் இவனே ப்ராப்திக்கு உகப்பவன் ஆகிறான். இதனால் மூன்றும், “அவனே” என்று ஏவகாரத்தில் கூறுவதால் இந்த மூன்றுள் இவனுடன் சேர்வது ஏதும் இல்லை என்றார். “ப்ராப்தாவும் ப்ராபகனும் அவனே” என்பதன் மூலம் எம்பெருமானை அடைவதற்கு வேறு உபாயங்களைக் கைக்கொள்ளும் முயற்சி ஜீவனிடம் இல்லை என்பது உணர்த்தப்பட்டது. “ப்ராப்திக்கு உகப்பவன் அவனே” என்பதன் மூலம் ஸர்வேச்வரனின்

இன்பத்திற்காக தான் உள்ளானே தவிர, தனக்கு என்று எந்தப் பயனும் கொள்வதில்லை என்பது உணர்த்தப்பட்டது.

71. ஸ்வயத்த நிவ்ருத்தி பாரதந்த்ர்ய பலம்; ஸ்வப்ரயோஜந நிவ்ருத்தி சேஷத்வ பலம்.

**அவதாரிகை** - ஆனால் ஜ்ஞாத்ருத்வ கார்யமான கர்த்ருத்த்வ போக்த்ருத்வங்களையுடையவனாகையாலே ஸ்வயத்ந ஸ்வப்ரயோஜநங்களுக்கு அர்ஹனாயிருக்க, இவையிரண்டினுடையவும் நிவ்ருத்தி இவனுக்கெவ்வழியாலே வருகிறதென்கிற சங்கையிலே அத்தையருளிச் செய்கிறார் (ஸ்வயத்ந நிவ்ருத்தி) இத்தியாதி வாக்ய த்வயத்தாலே.

**விளக்கம்** – ஆனால் ஜீவன் ஞானமயமாக உள்ளதால் அந்த ஞானத்தின் செயலாகிய காரியத்தைச் செய்பவனாக இருத்தல், அதற்கான பலனை அனுபவிக்கவல்லவனாக இருத்தல் ஆகிய இரண்டும் கைகூடும் அல்லவோ? இப்படி உள்ளபோது, தான் எந்த ஒரு முயற்சியிலும் இறங்குதல், பலனை அடையும் தகுதி பெற்றிருத்தல் ஆகிய இரண்டும் இவனை விட்டு எவ்விதம் நீங்குகிறது என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது ஜ்ஞாத்வத்வ நிபந்தநமான கர்த்ருத்வமுண்டாயிருக்கச் செய்தே பகவத் ப்ராப்திக்குத் தானொரு யத்நம் பண்ணாமலிருக்கையாகிற இந்த ஸ்வயத்ந நிவ்ருத்தி, பராதீந ஸ்வரூப ஸ்தித்யாதிமத்தவமாகிற பாரதந்த்ர்யத்தின் கார்யம்; அப்படியே, போக்த்ருத்வமுண்டாயிருக்கச் செய்தே அத்தலையை ரஸிப்பிக்குமதொழிய தனக்கென்ன ஒன்றில் ரஸமின்றிக்கேயிருக்கையாகிற ஸ்வப்ரயோஜன நிவ்ருத்தி, பராதிசயாதாயகத்வமே வடிவாயிருக்கையாகிற சேஷத்வத்தின் கார்யம். இத்தால் - பாரதந்த்ர்ய சேஷத்வங்களிரண்டும் ஆத்மாவுக்கு ஸ்வரூபமாகையாலே, அவ்வாகாரங்களை யறியவே இவையிரண்டும் தன்னடையே வருமென்றதாய்த்து.

**விளக்கம்** – ஞானம் உள்ளதன் காரணமாக கர்த்தாவாக உள்ள தன்மை ஜீவனுக்கு உண்டு. ஆனால் எம்பெருமானை அடைவதற்கான எந்த முயற்சியும் தானே செய்யாமல் இருத்தல் என்று "தனது முயற்சியில் இருந்து விலகுதல்" என்னும் நிலை எவ்விதம் உண்டாகும் என்றால் – எம்பெருமானுக்கு மட்டுமே வசப்பட்டுள்ள ஆத்மாவின் தன்மை, அதன் நிலை, காரியங்கள் செய்தல் மற்றும் செய்யாமை என்பதான பாரதந்த்ரியத்தின் மூலம் உண்டாகும். இது போன்று பயனை அனுபவித்தல் என்பதும் இவனுக்கு இயல்பாக உண்டு. ஆனால், எம்பெருமானை அனுபவிப்பவனாக்குவது அல்லாமல் தனக்கு என்று எந்தவிதமான சுவையும் இன்றி இருத்தல் என்பதான "தனது பயனில் இருந்து விலகுதல்" என்பது எவ்விதம் உண்டாகும் என்றால் – அவனுக்கு மகிழ்வை ஏற்படுத்துதல் என்பதையே வடிவாகக் கொண்ட அடிமைத்தனத்தின் மூலம் உண்டாகும். இதன் மூலம் ஆத்மாவின் இயல்பான தன்மைகளாக "அவனுக்கு மட்டுமே வசப்படுதல், அவனுக்கு

எப்போதும் அடிமையாக இருத்தல்” என்பவை மட்டுமே உள்ளன என்பதை உணர்ந்தால் மேலே கூறப்பட்ட இரண்டு நிலைகளும் தாமாகவே உண்டாகும் என்கிறார்.

72. ப்ரப்ரயோஜந ப்ரவ்ருத்தி ப்ரயத்நபலம்: த்த்விஷய ப்ரீதி சைதந்யபலம்.

**அவதாரிகை** - ஆனால் இப்படி ஸ்வ்யத்ந ஸ்வப்ரயோஜநங்களிலந்வயமற்றிருக்குமாகில், இவனுடைய ப்ரயத்நத்துக்கும் சைதந்யத்துக்கும் ப்ரயோஜநமென்னென்ன வருளிச் செய்கிறார் (ப்ரப்ரயோஜந) இத்யாதி வாக்ய த்யத்தாலே.

**விளக்கம்** - ஆனால் இவ்விதம் ஒருவன் தனது முயற்சிகள் மற்றும் பலனில் பற்றுகள் இன்றி இருக்கிறான் என வைப்போம். அப்படி என்றால் இவனது முயற்சி மற்றும் ஞானம் ஆகியவற்றின் பயன் என்ன என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது “அஹம் ஸர்வம் கரிஷ்யாமி”, “வழுவிலா வடிமை செய்யவேண்டும்”, “உனக்கே நாமாட் செய்வோம்” என்கிறபடியே பரனுக்கு ப்ரயோஜநமாகப் பண்ணும் கைங்கர்யரூப ப்ரவ்ருத்தி இவனுடைய ப்ரவ்ருத்த்யுத் யோகரூபமான ப்ராயத்நத்துக்கு ப்ரயோஜநம். “நித்யகிங்கர: ப்ரஹர்ஷயிஷ்யாமி” என்கிறபடியே – அத்தலையிலுகப்புக் குறுப்பாகத் தான் பண்ணுகிற கைங்கர்யத்தாலே அத்யந்த ஹ்ருஷ்டனாயிருக்கிற அந்த பரனை விஷயமாகவுடைத்தான ப்ரீதி, இவனுடைய அசித் வ்யாவ்ருத்தி ரூபமான சைதந்யத்துக்கு ப்ரயோஜநமென்கை. “படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே” என்னக்கடவதிறே. இத்தால் - பாரதந்த்ர்ய சேஷத்வங்களாலே பலித்த ஸ்வயத்ந ஸ்வப்ரயோஜந நிவ்ருத்திகளையுடையனான சேதநனுடைய ப்ரயத்ந சைதந்யங்களுக்கு, பாரதந்த்ர்ய சேஷத்வாநுகுணமாக ப்ரயோஜநங்கள் சொல்லிற்றா ய்த்து.

**விளக்கம்** - இவனால் ஒரு செயலைச் செய்யமுடியும் என்ற முயற்சிக்கான பலன் என்னவென்றால் கீழே உள்ள வரிகளில் உள்ளது போன்று, எம்பெருமானுக்குச் செய்யும் கைங்கர்யமே ஆகும்:

- இராமாயணம் அயோத்யாகாண்டம் (31-25) - அஹம் ஸர்வம் கரிஷ்யாமி – நான் உனக்கு அனைத்துவிதமான கைங்கர்யங்களும் செய்வேன்
- திருவாய்மொழி (3-3-1) - வழுவிலா வடிமை செய்யவேண்டும்
- திருப்பாவை (29) – உனக்கே நாமாட் செய்வோம்

அசித் வஸ்துவான சரீரத்தைக் காட்டிலும் இவனை வேறுபடுத்திக் காண்பிக்கின்ற இவனது ஞானத்திற்கு என்ன பயன் என்றால், ஸ்தோத்ரரத்னம் (46) – நித்யகிங்கர: ப்ரஹர்ஷயிஷ்யாமி – ஆத்மா உள்ளவரையில் செய்யவேண்டியதான கைங்கர்யங்கள்

அனைத்தையும் செய்து, அதன் மூலம் உன்னை மகிழச் செய்வேன் - என்பதற்கு ஏற்ப, அவனது மகிழ்வுக்காகத் தான் செய்யும் கைங்கர்யங்கள் கண்டு மிகுந்த மகிழ்ச்சி அடைந்தவனாகிய அந்த எம்பெருமானை விஷயமாகக் கொண்ட ப்ரீதியே ஆகும். பெருமாள்திருமொழி (4-9) - படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே – என்றது காண்க. இப்படியாக இவனது பாரதந்த்ர்யம் மற்றும் சேஷத்வம் ஆகிய இரண்டின் மூலம் “தனது முயற்சிகளில் இருந்து விலகுதல் மற்றும் தனக்கே பயன் என்று கொள்ளாமை” ஆகிய இரண்டும் பலிக்கின்றன. இப்படியாக உள்ள இவனுக்கு இவனது முயற்சி மற்றும் ஞானம் ஆகிய இரண்டிற்கும், இவனது பாரதந்த்ர்யம் மற்றும் சேஷத்வம் என்பதற்கு ஏற்றபடி உள்ள பலன்கள் உரைக்கப்பட்டன.

73. அஹமர்த்தத்துக்கு ஜ்ஞாநாநந்தங்கள் தடஸ்தமென்னும்படி தாஸ்யமிறே அந்தரங்க நிரூபகம்.

**அவதாரிகை** - சேஷத்வாதிகளும் ஜ்ஞாத்ருத்வாதிகளும் ஆத்ம தர்மங்களாயிருக்கச் செய்தே, சேஷத்வாதிகளை ப்ரதாநமாக்கி ஜ்ஞாத்ருத்வாதிகளை தததுகுணமாக யோஜிக்கைக்கு நியாமகமேது? மற்றைப்படி தானானாலோவென்ன வருளிச்செய்கிறார் (அஹமர்த்தத்துக்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** – சேஷத்வம் போன்ற பலவும், அனைத்தையும் அறிந்து கொள்கின்ற தன்மை போன்ற பலறும் ஆத்மாவின் தர்மங்களாக உள்ளன. இப்படி உள்ளபோது சேஷத்வம் போன்ற பலவற்றை முக்கியம் என்று வைத்து, அறிந்து கொள்ளும் தன்மை போன்றவற்றை அந்த சேஷத்வம் உள்ளிட்டவற்றுக்குத் தகுதியான வைக்கின்ற காரணம் என்ன? அளிக்கின்ற தன்மைகள் போன்றவற்றை முக்கியமாக வைத்து, அதற்கு உறுப்பாக சேஷத்வம் போன்றவற்றை வைத்தால் என்ன என்றும் கேள்விகளுக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (அஹமர்த்தமாவது) ப்ரத்யக்த்வேந அஹம் புத்தி வ்யவஹாரார்ஹமான ஆத்ம வஸ்து; ஜ்ஞாநாநந்தங்களாவன - தத்கதமான ப்ரகாசத்வாநுகூலத்வங்கள்; “ஜ்ஞாநாநந்தமயஸ் த்வாத்மா”, ”ஸ்வரூபமணுமாத்ரம் ஸ்யாத் ஜ்ஞாநாநந்தைக லக்ஷணம்” என்று இவற்றையிட்டிறே வஸ்துவை நிரூபிப்பது. (தடஸ்தமென்னும்படி) என்றது - பஹிரங்க நிரூபகதயா புறவிதழென்னும்படி யென்றபடி. (தாஸ்யமாவது) – சேஷத்வம். இது (அந்தரங்க நிரூபகமாகையாவது) - பகவத் ஸ்வரூபத்துக்கு ப்ரகாரதயா சேஷமாய்க் கொண்டு தன் ஸத்தையாம்படியிருக்கும் வஸ்துவாகையாலே, ப்ரதமம் சேஷத்வத்தை யிட்டு நிரூபித்துக்கொண்டே மற்றுள்ள ஆகாரங்களையிட்டு நிரூபிக்க வேண்டும்படி யிருக்கை. இத்தால் நிரூபகமாகையாவது - வஸ்துவை வஸ்த்வந்தரத்திற் காட்டில் வ்யாவர்த்திப்பிக்குமதாகையாலே, தாஸ்யம் ஈச்வர வ்யாவர்த்தகமாய், ஜ்ஞாநாநந்தங்கள் அசித்வ்யாவர்த்தகங்களாயிருக்கும்; இப்படி நிரூபக த்வயமும் வஸ்துவுக்கு அபேக்ஷிதமாயிருக்கச்செய்தே பகவத் ப்ரகாரதயா லப்த ஸத்தாகமான வஸ்துவுக்கு

அசித்திற் காட்டில் உண்டான வாசியை யறிவிக்கிற மாத்ரமான ஜ்ஞாநாநந்தங்கள் புறவிதழாம்படி ப்ரகாரத்வ ப்ரயுக்தமான சேஷத்வமே அந்தரங்க நிரூபகமாயிருக்குமென்றதாய்த்து. (இறே) என்று – இவ்வர்த்தத்தில் ப்ரமாணப்ரஸித்தி. ப்ரதமம் சேஷத்வத்தையிட்டு வஸ்துவை நிரூபித்துக்கொண்டு, பின்னை ஜ்ஞாநாநந்த லக்ஷணமுமாய் ஜ்ஞாந குணகமுமாய் அசித்வ்யாவ்ருத்தமுமாயிருக்குமென்னுமிடத்தை த்ருதீய பதத்தாலே நிரூபிக்கிற ப்ரணவமும், ஸமஸ்த வஸ்துக்களும் ஸர்வேச்வரனுக்கு ப்ரகாரமென்னுமத்தை ப்ரதிபாதிக்கிற நாராயண பதமும், முதலானவை இதில் ப்ரமாணம். "தாஸ பூதாஸ் ஸ்வதஸ் ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந: நாந்யதா லக்ஷணம் தேஷாம் பந்தே மோக்ஷே ததைவச" இத்யாதிகளுமுண்டிறே. "அடியேனுள்ளான்" என்றாரிறே ஆழ்வார். திருக்கோட்டியூர்நம்பி ஸ்ரீபாதத்திலே ஆறுமாஸம் ஆழ்வான் ஸேவித்து நின்று மஹா நிதியாகப் பெற்ற அர்த்தமிறேயிது. இப்படி சேஷத்வம் அந்தரங்க நிரூபகமாகையாலே நிரூபித ஸ்வரூப விசேஷணங்களான ஜ்ஞாத்ருத்வாதிகளையே தததுகுணமாக யோஜிக்க வேணுமென்று கருத்து.

**விளக்கம்** - "அஹம் அர்த்தம்" என்றால் என்ன? தன்னைத்தானே அறியவல்ல தன்மை காரணமாக "நான் என்ற எண்ணம், நான் என்று கூறவைப்பதற்கும்" உரிய விஷயமாக உள்ள ஆத்ம வஸ்துவாகும். "ஞான ஆநந்தங்கள்" – அந்த ஆத்மாவின் ஞானம் (ப்ரகாசம்) மற்றும் ஆனந்தங்கள் ஆகும். கீழே உள்ள வரிகள் மூலமாக ஆத்மாவை நிரூபிப்பர்:

- ஜ்ஞாநாநந்தமயஸ் த்வாத்மா – ஞானம் மற்றும் ஆனந்தம் ஆகியவற்றை வடிவமாகக் கொண்ட ஆத்மா
- ஸ்வரூபமணுமாத்ரம் ஸ்யாத் ஜ்ஞாநாநந்தைக லக்ஷணம் – ஆத்மா அணுபரிணாமமே உள்ளது, அது ஞானம் மற்றும் ஆனந்தமயமானது.

"தடஸ்தம்" - புறத்திலும் நிரூபகமாக உள்ளதால் புறவிதழ் என்னும்படி உள்ள தன்மை. "தாஸ்யம்" – சேஷத்வம் கூறப்பட்டது. "அந்தரங்க நிரூபகம்" - எம்பெருமானின் ஸ்வரூபத்திற்குச் சரீரமாக ஆத்மா உள்ளதால், அவனது சேஷமாய் நின்றால் மட்டுமே தனது இருப்பு உள்ளது என்றபடி உள்ளது ஆத்மாவாகும். எனவே முதலில் சேஷத்வத்தைக் கூறி நிரூபித்த பின்னரே மற்ற தன்மைகளைக் கொண்டு நிரூபித்தல் வேண்டும் என்றாகிறது. நிரூபகம் என்றால் ஒரு வஸ்துவை மற்றொரு வஸ்துவைக் காட்டிலும் வேறானது என்று வேறுபடுத்திக் காட்டுதல் ஆகும். ஆகவே சேஷத்வம் என்பது ஆத்மாவை எஜமானனாகிய எம்பெருமானிடம் இருந்து வேறுபடுத்திக் காட்டுவது, ஞானம் மற்றும் ஆனந்தம் ஆகியவை ஆத்மாவை அசித் வஸ்துக்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டுவது என்று அறிக. இவ்விதம் மேலே கூறப்பட்ட இரண்டுவிதமான நிரூபகங்களும் ஆத்மாவிற்கு அவசியமானவை ஆகும். ஆனால் எம்பெருமானின் சரீரம் என்னும் தன்மையால் மட்டுமே தான் தரிக்கின்ற நிலையைப் பெற்றது ஆத்மாவாகும். இதனால் அசித் வஸ்துவைக் காட்டிலும் ஆத்மா வேறுபட்டது என்பதை அறிவிக்கின்ற ஞானம் மற்றும் ஆனந்தம் ஆகிய இரண்டும் புறஇதழ் போன்றவையே ஆகும்.

எம்பெருமானின் சரீரம் என்ற தன்மை காரணமாக உண்டான அடிமைத்தனம் என்பதே அந்தரங்கமாகும் என்று அறிய வேண்டும். “இறே” என்ற பதம் மூலம் இந்தப் பொருளின் ப்ரமாணங்களைக் கூறுகிறார். ஆத்மாவிற்கு சேஷத்வம் என்பதே அந்தரங்கம், ஆனந்தம் மற்றும் ஞானம் ஆகிய இரண்டும் வெளி அளவில் மட்டுமே என்பதற்கான ப்ரமாணம் என்ன? சேஷத்வத்தை முதலில் கூறிவிட்டு, அதன் பின்னர் ஞானம் மற்றும் ஆனந்தம் ஆகியவையாக, ஞானம் என்னும் குணம் உள்ள, அசித் வஸ்துவைக் காட்டிலும் மாறுபட்ட ஆத்மா என்பதை தனது மூன்றாம் எழுத்து மூலமாக நிரூபிக்கின்ற ப்ரணவம்; அனைத்தும் ஸர்வேச்வரனின் சரீரம் என்று கூறுகின்ற நாராயண என்னும் பதம் – ஆகிய இரண்டும் இதற்கு ப்ரமாணங்கள் ஆகும். ஹாரித ஸ்ம்ருதி - தாஸ பூதாஸ் ஸ்வதஸ் ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந: நாந்யதா லக்ஷணம் தேஷாம் பந்தே மோக்ஷே ததைவச - பரமபுருஷனாக உள்ள எம்பெருமானுக்கு அனைத்து ஆத்மாக்களும் இயற்கையிலேயே அடிமைகள் ஆகும்; இது போன்று ஆத்மாக்களுக்கு இந்தச் சரீரத்துடன் கட்டுப்பட்ட நிலையிலும் மோக்ஷத்தைக் காட்டிலும் வேறான தன்மை ஏதும் இல்லை - என்பது ப்ரமாணம் ஆகும். திருவாய்மொழி (8-8-2) - அடியேன் உள்ளான் – என்றது. திருக்கோட்டியூர் நம்பியின் திருவடிகளில் கூரத்தாழ்வான் ஆறு மாத காலங்கள் வணங்கி நின்று அடைந்த பொக்கிஷம் இந்தக் கருத்தே ஆகும். ஆகவே சேஷத்வம் என்பது அந்தரங்கமாக உள்ளது என்பது நிரூபிக்கப்பட்டதால், இவ்விதம் நிரூபிக்கப்பட்ட ஆத்மாவின் தன்மைகளான ஞானம் கொண்ட தன்மை போன்றவை, இந்தகைய சேஷத்வத்திற்குத் தகுதியானவை என்று உணர வேண்டும்.

74. இதுதான் வந்தேறியன்று.

**அவதாரிகை** - இது ஸ்வரூப நிரூபகமாகில் ஆத்மாவுள்ளவன்றே தொடங்கியுண்டாய்ப் போரவேண்டாவோ, இதுக்கு முன்பின்றிக்கே இப்போதுண்டாகையாலும், லோகத்திலிதுதான் ஔபாதிகமாய் நடக்கக் காண்கையாலும், தாஸ்யமாத்மாவுக்கு வந்தேறியன்றேவென்னவருளிச்செய்கிறார் (இதுதான் வந்தேறிய யன்று) என்று தொடங்கி.

**விளக்கம்** - இத்தகைய சேஷத்வம் (அடிமைத்தனம்) என்பது ஆத்மாவின் ஸ்வரூபத்தை நிரூபிப்பதாக உள்ளதாக என்றால், இத்தகைய கைங்கர்யம் என்பது ஆத்மா இருக்கும் போதே தொடங்கியிருக்க வேண்டும் அல்லவோ? இதற்கு முந்தைய காலத்தில் இல்லாமல் இப்போது உள்ளதாலும், இந்த உலகில் ஏதோ ஒரு காரணத்தின் பின்னரே கைங்கர்யம் உண்டாவதாலும், இத்தகைய அடிமைத்தனம் என்பது ஆத்மாவிற்கு இடையில் வந்து சேர்ந்த தன்மையே அல்லவோ? இந்தக் கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (இதுதான்) என்று ப்ரக்ருதமான தாஸ்யத்தைப் பராமர்சிக்கிறது. (வந்தேறி யாவது) - ஆகந்துகம். (அன்று) என்கையாலே – ஸ்வாபாவிகமென்றபடி. ”ஸ்வோஜ்

ஜிவநேச்சா யதி தே ஸ்வ ஸத்தாயாம் ஸ்ப்ருஹா யதி, ஆத்மதாஸ்யம் ஹரேஸ் ஸ்வாம்யம் ஸ்வபாவஞ்ச ஸதா ஸ்மர", "நானு முனக்குப் பழவடியேன்" என்னக்கடவதிறே.

**விளக்கம்** – "இதுதான்" என்னும் பதம், மேலே கூறப்பட்ட அடிமைத்தனத்தை உரைக்கிறது. "வந்தேறி" என்றால் நடுவில் வந்து சேர்ந்த தன்மை என்பதை உணர்த்துகிறது. “அன்று” என்பதால் அடிமைத்தனம் என்பது “நடுவில் வந்தது அல்ல. இயல்பாகவே உள்ளது” என்று உணர்த்தப்பட்டது. கீழே உள்ள வரிகள் காண்க:

- ஸ்வோஜ் ஜிவநேச்சா யதி தே ஸ்வ ஸத்தாயாம் ஸ்ப்ருஹா யதி, ஆத்மதாஸ்யம் ஹரேஸ் ஸ்வாம்யம் ஸ்வபாவஞ்ச ஸதா ஸ்மர - உன்னுடைய ஆத்மா பிழைக்கவேண்டும் என்று எண்ணினால், ஆத்மாவானது “இருக்கிறது” என்ற நிலை ஏற்படவேண்டும் என்று விரும்பினால் நீ நினைக்கவேண்டியது இரண்டாகும். அவை: ஆத்மாவிற்கு உள்ள அடிமைத்தன்மை, ஸ்ரீஹரிக்கு உள்ள எஜமானத்தன்மை என்பதாகும்.
- திருப்பல்லாண்டு (11) - நானும் உனக்கு பழவடியேன்

75. ஸ்வாதந்த்ர்யமும் அந்யசேஷத்வமும் வந்தேறி.

**அவதாரிகை** - ஆனால், வந்தேறியாக விவக்ஷிதங்களெவை என்ன? இதுக்கு விரோதி களானவையென் றருளிச்செய்கிறார் (ஸ்வாதந்த்ர்யமும்) என்று தொடங்கி.

**விளக்கம்** – அடிமைத்தனம் என்பது ஆத்மாவிற்கு இயல்பானது என்றாலும், இத்தகைய தன்மை இடையில் வந்து சேர்ந்த ஒன்று எனக் கூறும்படியாகச் செய்பவை எவை என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - ஸ்வாதந்த்ர்யமாவது நானெனக்குரியனென்றிருக்கை. அந்ய சேஷத்வ மாவது – பகவதந்ய விஷயங்களிலே தொண்டுபட்டிருக்கை. இவற்றை வந்தேறி யென்கிறது - இவனுடைய அவித்யாதிகளடியாக வந்தவையாகையாலே.

**விளக்கம்** – “ஸ்வாதந்த்ரியம்” என்றால் “நான் எனக்கு உரியவன்” என்று இருத்தல் ஆகும். “அந்யசேஷத்வம்” என்றால் எம்பெருமான் நீங்கலாக உள்ள மற்ற விஷயங்களில் ஈடுபட்டிருத்தல் ஆகும். இவை இரண்டும் “வந்தேறி” என்றது - இவனது அறியாமை காரணமாக இவை ஏற்பட்டதால் ஆகும்.

76. சேஷத்வ விரோதி ஸ்வாதந்த்ர்யம்; தச்சேஷத்வ விரோதி ததிதர சேஷத்வம்.

**அவதாரிகை** - இவை இதுக்கு விரோதிகளானமையை உபபாதிக்கிறார்மேல் (சேஷத்வ விரோதி) என்று தொடங்கி.

**விளக்கம்** – இவை இரண்டும் அடிமைத்தனத்திற்கு எவ்விதம் விரோதிகளாக உள்ளன என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (சேஷத்வ விரோதி ஸ்வாதந்த்ர்யம்) என்றது - நானெனக்குரியே னென்றி ருக்குமளவில் ஒரு விஷயத்திலும் சேஷத்வமில்லாமையாலே ஸ்வாதந்த்ர்யம் சேஷத்வத்தை யுதிக்க வொட்டாதென்றபடி. (தச்சேஷத்வ விரோதி ததிதர சேஷத்வம்) என்றது ஸ்வாதந்த்ர்யங் குலைந்து சேஷத்வத்துக் கிசைந்தாலும் பகவத்வ்யதிரிக்த விஷயங்களிலே ஒன்றுக்குத் தன்னை சேஷமென்றிருக்குமது நிருபாதிக சேஷியாக அவன் பக்கல் சேஷத்வத்தைத் தலையெடுக்க வொட்டா தென்றபடி.

**விளக்கம்** – “சேஷத்வ விரோதி ஸ்வாதந்த்ர்யம்” என்றது ஏன்? “நான் எனக்கே உரியவன்” என்று இருக்கும்போது மற்ற எதற்கும் அடிமையாக இல்லை என்றாகிறது; இதனால் “தனக்கு மட்டுமே உரியன்” என்பதன் மூலம் அடிமைத்தனம் தோன்றாமல் இருந்துவிடும் என்பதால் விரோதியாகிறது. “தத்சேஷ” என்றது ஏன்? “எனக்கே உரியன்” என்ற நிலை மாறிப்போய் அடிமைத்தனத்தில் நின்றபோதிலும், எம்பெருமானை விடுத்து மற்றொரு வஸ்துவிற்குத் தான் அடிமை என்ற நிலையில் இருக்கக்கூடும்; இப்படிப்பட்ட நிலையானது, எந்தவிதமான காரணமும் இல்லாமலேயே நமக்கு எஜமானனாக உள்ள எம்பெருமானிடம் அடிமைத்தனம் கொள்வதைத் தடுத்துவிடும்.

77. அஹங்காரமாகிற ஆர்ப்பைத் துடைத்தால் ஆத்மாவுக் கழியாதபேர் அடியானென்றிறே.

**அவதாரிகை** - (இதுதான் வந்தேறியன்று) என்று தொடங்கி உபபாதித்த அர்த்தத்தை முதலிக்கிறார்மேல் (அஹங்காரம்) என்று தொடங்கி.

**விளக்கம்** - “இதுதான்” என்று தொடங்கும் சூர்ணை 74 முதல், கடந்த சூர்ணை முடிய உள்ளவற்றின் ஆழ்பொருளை விவரிக்கிறார்.

**வ்யாக்யானம்** - அஹங்காரந்தான், தேஹாத்மாபிமாநரூபமாயும் ஸ்வாதந்த்ர்யரூபமாயும் இரண்டு வகைப்பட்டிறேயிருப்பது; அதில் இங்கு ஸ்வாதந்த்ர்யத்தைச் சொல்லுகிறது. (ஆர்ப்பு) என்கையாலே அதினுடைய திரோதாயகத்வமும் ஆகந்துகத்வமும் தோற்றுகிறது; அத்தை (துடைக்கையாவது) ஸதாசார்யோபதேசாதிகளாலே ஸவாஸநமாகப் போக்குகை. (ஆத்மாவுக்கழியாத்பேர் அடியான்) என்றது, ஔபதிகமான வர்ணாச்ரமாதிகளாலே வந்து அழிந்துபோம் நாமங்கள் போலன்றிக்கே, யாவதாத்மாநுவர்த்தியான நாமம்

தாஸனென்னுமதென்றபடி. (இறே) என்று இவ்வர்த்தத்தில் ப்ரமாணப்ரஸித்தி. ”தாஸபூதாஸ் ஸ்வத:”, “ஆத்மதாஸ்யம்” இத்யாதிகள் இவ்விடத்தில் விவக்ஷிதங்கள். ஆகையால், ஸ்வாதந்த்ர்யாதிகள் ஔபாதிகம், தாஸ்யம் ஸ்வாபாவிகமென்னக் குறையில்லையென்று கருத்து.

**விளக்கம்** - அஹங்காரம் என்பது சரீரத்தையே ஆத்மாவாக எண்ணுதல், “நான் எனக்கு மட்டுமே உரியன்” என்பதான சுதந்திரமான எண்ணம் என்று இருவிதமாக இருக்கும். இவற்றில் இங்கு அஹங்காரம் என்பதன் மூலம் ஸ்வாதந்த்ர்யம் கூறப்பட்டுள்ளது. ”ஆர்ப்பு” என்பதன் மூலம் இத்தகைய அஹங்காரம் என்பது நன்மையை மறைக்கும் தன்மை மற்றும் இடையில் வந்து சேர்ந்த தன்மை ஆகியவற்றை இயல்பாக உடையது எனப்பட்டது. இதனை “துடைத்தல்” என்றால் சிறந்த ஆசார்யன் உபதேசம் மூலமாக அதன் வாசனையுடன் நீக்குதல் ஆகும். “ஆத்மாவுக்கு” என்பதன் மூலம் உணர்த்தப்பட்டது என்ன? குறிப்பிட்ட சில காரணங்களால் நமக்குப் பல பெயர்கள் ஏற்படும்; ஆனால் ஆத்மா என்பது உள்ளவரையில் அதன் மாறாத பெயர் “தாஸன்” என்பதாகும். இதற்குப் பின்வரும் ப்ரமாணங்கள் உள்ளன:

- தாஸபூதாஸ் ஸ்வத: – அனைத்து ஆத்மாக்களும் இயல்பாகவே அடிமைத்தனம் கொண்டவை
- ஆத்மதாஸ்யம் - ஆத்மாவிற்கு அடிமைத்தனம் என்பது இயல்பானது.

ஆகவே ஸ்வாதந்த்ர்யம் போன்ற தன்மைகளே இடையில் ஆத்மாவிடம் வந்து சேர்பவை ஆகும், அடிமைத்தனம் என்பது ஆத்மாவிற்கு இயல்பாகவே உள்ளது என்று கருத்து.

78. க்ராமகுலாதிகளால் வரும் பேர் அநர்த்தஹேது.

**அவதாரிகை** - அதுவென்? க்ராமகுலாதிகளால் வரும் வ்யபதேசமன்றோ நடந்து போகுகிறதென்ன வருளிச் செய்கிறார் (க்ராம) இத்யாதியால்.

**விளக்கம்** – மேலே உள்ள சூர்ணையில் உள்ளபடி ஆத்மாவிற்கு “தாஸன்” என்பது மட்டுமே நிலையான பெயர் என்று எவ்விதம் கூற இயலும்? அவரவர்களின் ஊர் பெயர்கள், குலப் பெயர்கள் ஆகியவை அல்லவோ வழங்கப்படுகின்றன என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, க்ராமகுலாதி வ்யபதேசம் அஹங்கார ஜநகமாகையாலே ஸ்வரூபஹாநிரூபாநர்த்தகரமென்றபடி. ஆகையால், அவற்றாலிவன் வ்யபதேஷ்டவ்ய னல்லனென்று கருத்து

**விளக்கம்** – ஊரின் பெயர்கள், குலத்தின் பெயர்கள் ஆகியவற்றால் கூறப்படும்போது ஒருவனுக்கு "நான்" என்னும் அஹங்காரம் உண்டாகிவிடும். இதனால் இவை ஸ்வரூபத்தின் அழிவு என்பதை உண்டாக்கிவிடும். எனவே அப்படிப்பட்ட பெயர்கள் மூலம் ஒருவன் அழைக்கப்பட வேண்டியவன் அல்லன் என்று கருத்து.

79. ஏகாந்தீ வ்யபதேஷ்டவ்ய:

**அவதாரிகை** - உகதார்த்தத்துக்கு ப்ரமாணம் காட்டுகிறார் மேல் (ஏகாந்தீ வ்யபதேஷடவ்ய:) என்று.

**விளக்கம்** – கடந்த சூர்ணையில் கூறப்பட்டதற்கு ஏற்ற ப்ரமாணங்களைக் கூறுகிறார்.

**வ்யாக்யானம்** - "ஏகாந்தீ வ்யபதேஷ்டவ்யோ நைவ க்ராமகுலாதிபி:, விஷ்ணுநா வ்யபதேஷ்டவ்யஸ் தஸ்ய ஸர்வம் ஸ ஏவ ஹி". இத்தால் – பகவதேக பரனாயிருக்குமவன் க்ராமகுலாதி ஸம்பந்தங்களையிட்டுச் சொல்லப்படுமவனல்லன், பகவத் ஸம்பந்தத்தையிட்டுச் சொல்லப்படுமவன்; அவனுக்கு அந்த க்ராமகுலாதிகளெல்லாம் பகவானேயென்கிறது. (ப்ராப்தாவும்) இத்யாதி வாக்யத்திலே இச்சேதநனுடைய ஸ்வயத்ந நிவ்ருத்த்யாதிகள் தோற்றினபடியாலே இவற்றுக்கு நிதாநமின்னதென்றும், ஏவம் பூதனுடைய ப்ரயத்ந சைதந்ய ப்ரயோஜநமும் சேஷத்வாதி ப்ராதாந்யஹேது ஆத்ம ஸ்வரூபத்தினுடைய தாஸ்யாந்தரங்க நிரூபகத்வமென்றும் இப்படியிருக்கிறவிது ஸ்வாபாவிகம், ஏதத் விரோதிகள் ஔபாதிகமென்றும், தந்நிவ்ருத்தியிலாத்மாவுக்கு தாஸ்யமே நித்ய நிரூபகமாயிருக்குமென்கையாலே யிவ்வர்த்தத்தை மூதலித்தும், க்ராம குலாதிகளாலிவன் வ்யபதேஷ்டவ்யனல்லனென்றும், உத்தார்த்தத்தில் ப்ரமாணமுஞ் சொல்லுகையாலே, (ஸ்வயத்ந நிவ்ருத்தி) இத்யாதி வாக்யம் தொடங்கியிவ்வளவும் ப்ராஸங்கிகம்.

**விளக்கம்** - விஷ்வக்ஸேந ஸம்ஹிதை – ஏகாந்தீ வ்யபதேஷ்டவ்யோ நைவ க்ராமகுலாதிபி:, விஷ்ணுநா வ்யபதேஷ்டவ்யஸ் தஸ்ய ஸர்வம் ஸ ஏவ ஹி – ப்ரபன்னன் ஒருவன் தனது குலம், கிராமம் போன்றவற்றைக் கொண்டு அழைக்கப்படுபவன் அல்லன்; அவன் எம்பெருமானுடைய தொடர்பை மட்டுமே கொண்டு அழைக்கப்படவேண்டியவன் ஆவான்; அவனுக்கு குலம், கிராமம் போன்றவை பகவானே ஆவான் - என்றது. ஆகவே பகவானுக்கு மட்டுமே வசப்பட்டு நிற்கும் ப்ரபன்னன் ஒருவன் கிராமம், குலம் போன்ற அடைமொழிகளால் அழைக்கப்பட வேண்டியவன் அல்லன். அவன் பகவத் ஸம்பதத்தை மட்டுமே கூறி அழைக்கப்பட வேண்டியவன் ஆவான். அந்தக் கிராமம், குலம் போன்ற அனைத்துமாகப் பகவானே உள்ளான். "ஸ்வயத்ந" என்று தொடங்கும் சூர்ணை-71 முதல், இந்தச் சூர்ணை முடிய உள்ள அனைத்தும் ப்ராஸங்கிகம் ஆகும். ஏன்? "ப்ராப்தா" என்று

தொடங்கும் சூர்ணை – 70ல்; தனது முயற்சிகள் போன்ற பலவற்றிலிருந்தும் இவன் நீங்கியிருப்பது முதலானவை வெளிப்பட்டதால் கீழே உள்ள பலவும் கூறப்பட்டன:

- இவற்றுக்கு நிதானம் இன்னது என்றும்
- இப்படிப்பட்டவனின் முயற்சி மற்றும்அறிவு ஆகியவற்றின் பயன் இத்தகையது என்றும்
- ஆத்ம ஸ்வரூபத்தின் அடிமைத்தன்மை என்பது அந்தரங்க நிரூபகமாக உள்ள தன்மையால் என்ற காரணத்தினால் அடிமைத்தனம் என்பது முக்கியமாகக் கொள்ளப்பட்டது என்றும்
- இப்படிப்பட்ட அடிமைத்தனத்துடன் உள்ள தன்மையே ஆத்மாவிற்கு இயல்பானது என்றும், அடிமைத்தனத்திற்கு விரோதிகளாக உள்ள மற்ற தன்மைகள் வந்து அடைந்தவை என்றும்
- அஹங்காரம் போன்றவை விலகினால் ஆத்மாவிற்கு அடிமைத்தனமே ஸ்வரூபம் என்பது நிரூபகமாகும் என்பதால் மேலே உள்ளதை விளக்கியும்
- கிராமம், குலம் போன்றவற்றால் இவன் வழங்கப்படத்தக்கவன் அல்லன் என்றும், இவ்விதம் கூற ப்ரமாணம் உண்டு என்றும்

பலவிதமாக உரைக்கப்பட்டன.

**வ்யாக்யானம் -** ஆக, இப்ப்ரகரணத்தால் ப்ரபத்திக்கு தேசாதிநியமங்களில்லை, விஷய நியமமேயுள்ளதென்னுமிடமும், அவ்விஷயந்தானின்னதென்னுமிடமும் அவ்விஷயத்தி னுடைய வைலக்ஷண்யமும், அதில் ப்ரபத்தி பண்ணுமதிகாரிகளுடைய த்ரைவித்யமும், ப்ரபக்தியையுபாயமாக்கினால் வருமவத்யமும், ப்ரபத்தி தன்னுடைய ஸ்வரூபாதிகளும், ப்ரபத்தவ்யனே உபாயமென்னுமிடமும் ப்ரதிபாதிக்கப்பட்டது.

**விளக்கம் -** ஆகவே இந்த ப்ரகரணத்தில் கீழே உள்ள பலவும் கூறப்பட்டன:

- ப்ரபத்திக்கு காலம், தேசம் போன்ற கட்டுப்பாடு இல்லை, விஷய நியமம் மட்டுமே உள்ளது
- அந்த விஷயம் இன்னது
- அந்த விஷயத்தின் மேன்மையும் சிறப்பும் இன்னது
- அந்த விஷயத்தில் ப்ரபத்தி செய்கின்ற அதிகாரியின் மூன்று பிரிவுகள்
- ப்ரபத்தி செய்கின்ற அதிகாரியின் சிறப்பு
- ப்ரபத்தியை உபாயம் என்று கொண்டால் ஏற்படும் தோஷம்
- ப்ரபத்தியின் தன்மைகள்
- ப்ரபத்திக்கு விஷயமாக உள்ள எம்பெருமானே உபாயம்

ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த
ஶ்ரீவசனபூஷணத்தில்
இரண்டாம் ப்ரகரணமான உபாய ப்ரகரணம்
ஸம்பூர்ணம்

பெரியபெருமாள் திருவடிகளே சரணம்

பெரியபெருமாள் திருவடிகள் தஞ்சம் அடைந்த நம்
உடையவர் திருவடிகளே சரணம்

உடையவர் திருவடிகள் சரணம் புகுந்த
ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்

பிள்ளைலோகாசார்யர் திருவடிகள் சரணம் புகுந்த
ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்